வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959

விலை ரூ. 20/=

ஈழநாடு
Eelanadu ඊළනාඩු




Email : news@eelanadu.lk | மலர் : 03 | 10.12.2021 வெள்ளிக்கிழமை | இதழ் : 05 | பக்கங்கள் : 16

# 2022இல் அரச சேவைக்கு ஆட்சேர்ப்பு இடம்பெறாது!



## நிதி அமைச்சர் பஸில் ராஜபக்ஷ

- அத்தியாவசிய பொருளுக்கும் மட்டுப்பாடு
- வாகன இறக்குமதிக்கு அனுமதி இல்லை
- பால்மா இறக்கவும் நிதி ஒதுக்கீடு இல்லை

கொழும்பு, டிசெம்பர் 10

2022ஆம் ஆண்டு பொதுத்துறைக்கு புதிய ஆட்சேர்ப்புக்கள் இடம் பெறாது என்று நிதி அமைச்சர் பஸில் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார். 15

## பட்ஜெட்மீது இன்று வாக்கெடுப்பு

கொழும்பு, டிசெ 10

2022ஆம் நிதியாண்டுக்கான வரவு- செலவுத் திட்டத்தின் மூன்றாம் வாசிப்பு மீதான (இறுதி)வாக்கெடுப்பு இன்று பாராளுமன்றத்தில் நடைபெறவுள்ளது.

ஜனாதிபதி கோட்டாபய தலைமையிலான கூட்டணி அரசின் 2022ஆம் நிதியாண்டுக்கான பாதீடு, நிதி அமைச்சர் பஸிலால் நவ. 12ஆம் திகதி முன் வைக்கப்பட்டது.

இரண்டாம் வாசிப்பு கடந்த நவ. 22ஆம் திகதி 93 மேலதிக வாக்குகளால் நிறைவேற்றப்பட்டது.

இந்நிலையில் மூன்றாம் வாசிப்பு மீதான விவாதங்கள் நடந்து வந்த நிலையில், இன்று நிதி அமைச்சுக்கான ஒதுக்கீடு தொடர்பான விவாதம் இடம்பெறும். பதிலளித்து உரையாற்றும் நிதி அமைச்சர் திருத்தங்கள் செய்ய இருப்பின் அவை தொடர்பான அறிவிப்புகளை விடுப்பார். அதன்பின்னர் மாலை வாக்கெடுப்பு நடத்தப்படும். (அ)

## இரண்டு மாதங்களில் மட்டும் 45 தமிழ் இளைஞர்கள் கைது!

### உடன் விடுவியுங்கள் என்கிறார் ரிஷாத் எம்.பி.

கொழும்பு, டிசெ 10

கடந்த இரு மாதங்களுக்குள் 40 தொடக்கம் 45 வரையான தமிழ் இளைஞர்கள் 'புலிகளின் மீள் எழுச்சி' என்ற பெயரில் செய்யப்பட்டு பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழே தடுத்து வைக்கப்பட்டுள்ளார்கள். இவர்கள் 20 வயது 22 வயது இளைஞர்களாவர். இவர்கள் விடயத்தில் சட்டமாஅதிபர் திணைக்களம் கவனம் செலுத்தி அவர்களின் விடுதலைக்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் 15

## வடமேல் மாகாண ஆளுநராக சர்ச்சைக்குரிய கரன்னகொட! 06

## வழக்கு முடியும்வரை இந்துக்கள் பொறுமை காக்க வேண்டும்

### இராஜாங்க அமைச்சர் விதுர விக்ரமநாயக

கொழும்பு, டிசெ 10

வவுனியா மாவட்டத்தின் நெடுங்கேணி பிரதேசத்தின் வெடுக்கு நாறி மலையில் அமைந்துள்ள ஆதிலிங்கேஸ்வரர் ஆலயத்தில் வழிபாடுகள் மேற்கொள்ளும் விடயத்தில் நீதிமன்ற தீர்ப்பு வரும் வரை இந்துக்கள் பொறுமை காக்க வேண்டும் என்று தேசிய மரபுரிமைகள், அரங்குக் கலைகள் மற்றும் கிராமியக் கலைகள் மேம்பாட்டு இரா 15

## விபத்தில் சிக்கிய முதியவர் மரணம்!

யாழ்ப்பாணம், டிசெ. 10

யாழ்ப்பாண நகரின் 4ஆம் குறுக்குத்தெருவில் இடம்பெற்ற விபத்தில் காயமடைந்த முதியவர் சிகிச்சை பலனின்றி நேற்று மரணமானார்.

ஊர்காவற்றுறை - தம் பாட்டியை சேர்ந்த சின் னத்தம்பி இலட்சுமணன் என்பவரே இவ்வாறு உயி ரிழந்தார். 15

## கொரோனாவுக்கு 22 பேர் உயிரிழப்பு

கொழும்பு, டிசெ. 10

கொரோனா தொற்றால் நேற்று முன்தினம் நாட்டில் 22 பேர் உயிரிழந்தனர் என்று அரசாங்க தகவல் திணைக் களம் நேற்று அறி வித்தது.

இதன்படி, 30 -59 வயது பிரிவினர் 6 பேரும், 60 வயதுக்கு மேற்பட்டோர் 16 பேரு மாக 13 ஆண்களும் 15

## நீண்டகாலமாக சிறையில் உள்ளோரின் வழக்குகளை துரிதப்படுத்த நடவடிக்கை

### நீதி அமைச்சர் அலி சப்ரி பாராளுமன்றில் உறுதி

கொழும்பு, டிசெ. 10,

பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் நீண்ட கால மாக சிறைகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ள கைதிகளின் எடுக்கப்பட்டுள்ளதாக நீதி அமைச்சர் அலி சப்ரி தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றத்தில் நேற்று தமிழ்த் தேசியக் கூட்ட 15

## ஒரே நாடு ஒரே சட்டம் கொள்கை அரசியல் யாப்புக்கு முரணானது

### பாராளுமுன்றத்தில் சுமந்திரன் எம். பி. உரை

கொழும்பு. டிசெ. 10

மாகாண சபை முறைமை ஊடாக அதிகாரங்களை மாகாணங்களுக்கு பகிர்வோம், மாகாணங்களுக்கு ஏற்ற சட்டங் களை அவர்களே உரு 15

## கர்ப்பவதிகளுக்கு பூஸ்டருக்கு அனுமதி!

கொழும்பு, டிசெ. 10

கர்ப்பவதிகளுக்கு கோவிட் -19 எதிர்ப்பு பூஸ்டர் தடுப் பூசியை வழங்க சுகாதார அமைச்சு 15

## தமிழர் பகுதிகளில் படை தரப்புகளால் மக்களின் காணிகள் அபகரிப்பு தீவிரம்

யாழ்ப்பாணம், டிசெ. 10

அண்மை நாட்களாக தமிழர் பகுதிகளில் படைத் தரப்புகளால் பொது மக்களின் காணிகள் அபகரிப்பு செயல்பாடுகள் தீவிரமடைந்துள்ளன. இந்த விடயத்தில் மக்கள் பிரதிநிதிகள் அசமந்தமாக உள்ளனர் என்று காணி உரிமைக்கான மக்கள் அமைப்பு தெரிவித்துள்ளது.

அந்த அமைப்பினர் நேற்று யாழ்ப்பாணத்தில் நடத்திய செய்தியாளர் சந்திப்பிலேயே இதனைத் தெரிவித்தனர்.

போர் முடிந்த பின்னரும் இராணுவத்தினர் ஆக் 15



# இப்படியும் நடக்கிறது...!

நேற்றைய இந்தப் பத்தியில் சம்பந்தன் எப்படி சந்திப்பைத் தவிர்த்தார் என்பது பற்றி பார்த்திருந்தோம்.

ஆனால், அதற்காக பயணத்தை பிற்போடுமாறு இந்தியத் தூதரகத்தை கேட்டபோது என்ன காரணங்களைச் சொன்னார் என்பதை இன்று பார்க்கவிருக்கிறோம்.

சந்திப்பைப் பின்போடுவதற்கு சம்பந்தன் மூன்று காரணங்களை தூதரகத்திடம் தெரிவித்தாரெனத் தூதரக வட்டாரங்கள் தகவல் தந்தன.

முதலாவது அவரது ‘பாஸ்போர்ட்’ காலாவதி ஆகிவிட்டடது. இது சில நிமிடங்களில் சரிசெய்யக் கூடிய சங்கதி என்பது தூதரகத்திற்கு தெரியாததல்ல.

இரண்டாவது, பாராளுமன்றில் வரவு - செலவுத் திட்ட விவாதம் நடக்கிறது. அது தூதரகத்திற்கும் தெரிந்ததுதான். ஆனால், விவாதத்தில் இதுகாலவரை ஒருநாளேனும் சம்பந்தன் கலந்துகொள்ளவில்லை. அவ்வாறு தனது தொகுதி விடயங்கள் ஏதாவது கதைக்க வேண்டியிருந்தால்கூட மற்றைய எம். பிக்களிடம் சொல்லி கதைக்கலாம் என்பதும் தூதரகத்திற்கு தெரியாததல்ல.

மூன்றாவது மாவையின் மகனின் திருமணம்.

திருமணம் நடக்கவிருப்பது ஏற்கனவே தெரிந்த சங்கதிதான். அதற்காக டில்லி விஜயத்தை தவிர்க்க விரும்பினால், சில தினங்களுக்கு முன்னர் எந்த நேரத்திலும் அழைப்பு வரும் தயாராக இருங்கள் என்று தூதரகம் முன்அறிவித்தல் கொடுத்தபோதே, அதனைச் சொல்லி அந்த நாட்களைத் தவிர்த்து சந்திப்புக்கு ஏற்பாடு செய்யுங்கள் என்று சொல்லியிருக்கலாம். சம்பந்தனைப் போன்ற மூத்த அரசியல் தலைவர் ஒருவர், இவ்வாறு நடந்துகொள்வது ஏற்கக்கூடியதாகவும் தெரியவில்லை.

ஆக, தூதரகத்திடம் சொன்ன இந்தக் காரணங்களை தூதரகம் ஏற்றுக்கொள்ளும் என்று நினைத்தால் அதைவிட மூடத்தனம் வேறு எதுவும் இருக்க முடியாது.

அத்தகைய மூடத்தனமான வேலையை செய்கின்ற அளவிற்கு சம்பந்தனும் இல்லை.

இவ்வாறு சொன்னால் அது தூதரகத்தை கோபப்படுத்துவதாகவும் போய்விடும் என்பதும் சம்பந்தனுக்குத் தெரியாததல்ல.

சம்பந்தன் திட்டமிட்டவாறு இந்தியா சென்று பிரதமர் மோடியை சந்தித்திருந்தால் அது இலங்கை அரசுக்கு விருப்பதிற்குரியதாக இருக்காது.

தமது நிதியமைச்சர் பஸில் வெறுமனே ஓர் அமைச்சர் மாத்திரமல்ல. இந்த அரசின் முக்கிய புள்ளகளில் முதன்மையானர். அவரைச் சந்திக்க மறுத்தவர்கள், சம்பந்தனைச் சந்திப்பதை விரும்புவார்கள் என்றும் இல்லை. அவர்கள் கோபப்பட்டால் கிடைக்கவிருக்கின்ற (அவர்கள் சொல்கின்ற அரசியலமைப்பில்) நமது தீர்வு இருக்காது என்று சம்பந்தன் நம்பியிருப்பார் என்றும் நம்புவதற்கில்லை.

என்ன நடந்தது என்பதை சம்பந்தன் ஒளிவுமறைவின்றி தமிழ் மக்களுக்கு தெரிவிக்க வேண்டியது அவரின் தலையாய கடமைகளில் ஒன்று.

ஐந்து ஆண்டுகள் நல்லாட்சி அரசாங்கத்தை கட்டியணைத்தவாறு பயணம் செய்ததால் ஏற்பட்ட வீழ்ச்சியைவிட இந்த விடயம் மிகப்பெரிய தாக்கத்தை ஏற்படுத்தும் என்பதை புரிந்துகொண்ட பின்னர், அதனை எவ்வாறு மாவையின் தலையில் சூட்டலாம் என்று திட்டமிட்டு, அதற்காகவே கிளப்பட்ட செய்தியை தமிழ் மக்கள் ஏற்றுக்கொள்ளப் போவதில்லை.

“நான் இல்லாவிட்டாலும் பரவாயில்லை சந்தர்ப்பத்தை தவறவிடக்கூடாது போய்வாருங்கள்” என்று சொன்ன மாவை, மறுபக்கம் சம்பந்தனை விரட்டி பின்போடச் செய்தார் என்கிறவர்கள் ஒன்றை மறைமுகமாக ஏற்றுக்கொள்கிறார்கள். மாவையின் மிரட்டலுக்கெல்லாம் அடிபணிகின்ற மிகப்பலவீனமான ஒரு தலைவராகத்தான் சம்பந்தன் இருக்கிறார் என்பதை அவர்கள் மறைமுகமாக ஏற்றுக்கொள்கிறார்கள்.

“தம்பி... மாவை நீர் இல்லாவிட்டாலும் நாங்கள் இந்த சந்தர்ப்பத்தை தவறவிடக்கூடாது என்று முடிவெடுக்க முடியாத நிலையிலா சம்பந்தன் இருக்கிறார்” என்று கேட்டால் அவர்களிடம் பதில் இருக்காது.

**- ஊர்க்குருவி**

## பேரா. கைலாசபதி நினைவுக்கூட்டம்

யாழ்ப்பாணம், டிசெ. 10

பேராசிரியர் க. கைலாசபதியின் 39ஆவது ஆண்டு நினைவுக் கூட்டம் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை பி.ப. 4 மணிக்கு இல. 62, கே. கே. எஸ். வீதி, கொக்குவில் சந்தியில் அமைந்துள்ள தேசிய கலை இலக்கியப் பேரவையின் கவிஞர் முருகையன் கேட்போர் கூடத்தில் இடம் பெறவுள்ளது.

ஓய்வுநிலை உதவிக் கல்விப் பணிப்பாளர் மு. இராசநாயகம் தலைமையில் இடம்பெறவுள்ள இக் கூட்டத்தில் தொடக்க உரையை ஆசிரியர் த. ஸ்ரீபிரகாஸ், விசேட உரைகளை இ. சத் தியமலர், ச.சஸீலன், இ. கார்த்திகாஜினி, கா. சிந்துஜா, ச. கோபிகா, சி. தனுராஜ், சு. விஸ்ணுசாந்தினி, பா. கஜீபா, வ. கிந்துஜா, நா. கபிலன் ஆகியோரும் நிறைவுரையை தாயகம் சஞ்சிகையின் பிரதம ஆசிரியரும் தேசிய கலை இலக்கியப் பேரவையின் தலைவருமான க.தணிகாசலமும் ஆற்றவுள்ளனர்.

சுகாதார வழிகாட்டல்களுக்கு அமைவாக இடம்பெறவுள்ள இந் நிகழ்வில் ஆர்வலர்கள் அனைவரும் பங்கேற்க முடியும். (ஐ)

## காரைநகரில் மருத்துவ முகாம்!

யாழ்ப்பாணம், டிசெ. 10

வடக்கு மாகாண ஆளுநரின் நெறிப்படுத்தலில் வடக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் அனுசரணையில் காரைநகர் பிரதேச செயலகமும் சுகாதார மருத்துவ அதிகாரி பணிமனையும் இணைந்து நடத்துகின்ற மத வழிபாட்டுத் தலங்களில் கடமை புரிவோருக்கான இலவச மருத்துவ முகாம் எதிர்வரும் 13ஆம் திகதி திங்கட்கிழமை காலை 8 மணி தொடக்கம் காரைநகர் சுகாதார மருத்துவ அதிகாரி பணிமனையில் இடம்பெறவுள்ளது.

இந்த இலவச மருத்துவ முகாமில் காரைநகர் பிரதேச மத வழிபாட்டுத் தலங்களில் பணிபுரியும் மதகுருமார், பரிபாலன சபையினர் மற்றும் தொண்டர்கள் பங்குபற்றிப் பயன்பெறுமாறும், பங்குபற்றுவோர் தமது தேசிய அடையாள அட்டையுடன் வருகை தருவதுடன் முதல் நாள் இரவு 10 மணிக்குப் பின்னர் உணவு உட்கொள்ளாமல் இருந்து, முகக் கவசம் அணிந்து வருகை தருமாறும் (கிளினிக் கொப்பி வைத்திருப்போர் அதையும் தம்முடன் எடுத்து வரவும்.) கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளனர். (ஐ)

## பல்கலை. நுழைவுத்திறன் தேர்வுகள் நடைபெறாது

கொழும்பு, டிசெ. 10

எதிர்காலத்தில் பல்கலைக்கழக அனுமதிக்கான திறன் பரீட்சைகளை நடத்துவதில்லை என தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாக பல்கலைக் கழக மானியங்கள் ஆணைக்குழுவின் தலைவர் பேராசிரியர் சம்பத் அமரதுங்க தெரிவித்துள்ளார்.

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு நேற்று பிற்பகல் பாராளுமன்ற கோப் குழு முன்னிலையில் அழைக்கப்பட்டபோதே அவர் இதனைத் தெரிவித்தார்.

முதுகலைப் படிப்புக்காக 15 புலமைப்பரிசில்கள் வழங்கப்பட்டுள்ள போதிலும், அவர்கள் கைவிடப்பட்டதன் காரணமாக பெருமளவு பணத்தை இழந்துள்ளனர் என்றும் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் தலைவர் சுட்டிக் காட்டினார்.

## கல்வி TV CHANNEL-1 — 10.12.2021 வெள்ளிக்கிழமை

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 05.15 | தரம்-06 | தமிழ் |
| 06.00 | தரம்-07 | விஞ்ஞானம் |
| 06.45 | தரம்-08 | கணிதம் |
| 07.30 | தரம்-09 | தமிழ் |
| 08.15 | தரம்-10 | வரலாறு |
| 09.00 | மாணவர்களுக்கானது | ஆலோசனை |
| 09.15 | க.பொ.த.உயர்தரம் | வரலாறு |
| 10.15 | க.பொ.த.உயர்தரம் | தகவல் தொடர்பாடலும் தொழில்நுட்பமும் |
| 11.15 | க.பொ.த.உயர்தரம் | விவசாய விஞ்ஞானம் |
| 12.15 | General knowledge | General knowledge |
| 12.30 | 06 TO சாதாரணதரம் | English |
| 01.15 | க.பொ.த. சா.தரம் | மனைப்பொருளியல் |
| 02.00 | க.பொ.த. சா.தரம் | வர்த்தகம் |
| 02.45 | க.பொ.த. சா.தரம் | கணிதம் |
| 03.30 | க.பொ.த சா.தரம் | சித்திரம் |
| 04.15 | க.பொ.த. சா.தரம் | புவியியல் |
| 05.00 | A/Lவினாத்தாள் | Live Telecast கலைப்பிரிவு |
| 06.00 | தரம்-05 | புலமைப்பரிசில் |
| 07.00 | A/Lவினாத்தாள் | மறுஒளிபரப்பு |
| 08.00 | தரம்-05 | புலமைப்பரிசில் மறு ஒளிபரப்பு |
| 09.00 | க.பொ.த.உயர்தரம் | வரலாறு |
| 10.00 | க.பொ.த.உயர்தரம் | தகவல் தொடர்பாடலும் தொழில்நுட்பமும் |
| 11.00 | க.பொ.த.உயர்தரம் | விவசாய விஞ்ஞானம் |
| 12.00 | 06 TO Learning English | English |
| 12.45 | க.பொ.தா சா.தரம் | மனைப்பொருளியல் |
| 01.30 | க.பொ.தா சா.தரம் | வர்த்தகம் |
| 02.15 | க.பொ.தா சா.தரம் | கணிதம் |
| 03.00 | க.பொ.தா சா.தரம் | சித்திரம் |
| 03.45 | க.பொ.தா சா.தரம் | புவியியல் |
| 04.30 | தரம்-10 | வரலாறு |

## கல்வி TV CHANNEL - 2 — 10.12.2021 வெள்ளிக்கிழமை

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 06.00 | பஞ்சபுராணம் | பஞ்சபுராணம் |
| 06.15 | நற்கருணை | நற்கருணை |
| 06.30 | திருக்குறள் பொருள | நாள் ஒரு திருக்குறள் |
| 06.45 | PLAY GROUP | கதை |
| 07.30 | முன்பள்ளி | பாட்டு |
| 08.15 | தரம்-01 | அழகியல் |
| 09.00 | தரம்-02 | English |
| 09.45 | தரம்-03 | அழகியல் |
| 10.30 | தரம்-03 | கணிதம் |
| 11.15 | தரம்-04 | English |
| 12.30 | தரம்-04 | கணிதம் |
| 01.15 | தரம்-05 | Singalam |
| 02.00 | தரம்-05 | கணிதம் |
| 02.45 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 03.30 | PLAY GROUP | கதை |
| 04.15 | முன்பள்ளி | பாட்டு |
| 05.00 | தரம்-01 | English Cartoom |
| 05.15 | தரம்-02 | English |
| 06.00 | தரம்-03 | அழகியல் |
| 06.45 | தரம்-03 | கணிதம் |
| 07.30 | தரம்-04 | English |
| 08.15 | தரம்-04 | கணிதம் |
| 09.00 | தரம்-05 | Singalam |
| 09.45 | தரம்-05 | கணிதம் |
| 10.30 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 11.15 | தரம்-03 | அழகியல் |
| 12.30 | தரம்-03 | கணிதம் |
| 01.15 | தரம்-04 | English |
| 02.00 | தரம்-04 | கணிதம் |
| 02.45 | தரம்-05 | Singalam |
| 03.30 | தரம்-05 | கணிதம் |
| 04.15 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 05.00 | English | CARTOON |
| 05.30 | English | பாட்டு |

Eelanadu
10.12.2021 வெள்ளிக்கிழமை
பிலவ வருடம், கார்த்திகை 24

**“ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்”**
- யோகர் சுவாமிகள்.

editor@eelanadu.lk, eelanaduweekly@gmail.com, news@eelanadu.lk
021 730 1370

## பஸிலின் இந்திய விஜயம்?

வரவு - செலவுத் திட்ட விவாதத்தின்போது நிதியமைச்சர் பஸில் ராஜபக்ஷ புதுடில்லி சென்றிருந்தார். இந்தியாவிடம் கடனுதவியை பெறுவதே இந்த விஜயத்தின் பிரதான நோக்கமாக சொல்லப்பட்டது. அந்த நோக்கம் வெற்றி பெற்றுள்ளது. இலங்கையின் பொருளாதார நெருக்கடியை கருத்தில் கொண்டு இந்தியா கடனுதவியை வழங்க இணங்கியுள்ளது. வரவு - செலவுத் திட்ட விவாதம் இடம்பெற்றுக் கொண்டிருக்கின்றபோதே, அதற்கு பொறுப்பான நிதியமைச்சர் பஸில் ராஜபக்ஷ புதுடில்லிக்கு சென்றிருந்தார். ஆனால், வரவு - செலவுத் திட்டத்துடன் எவ்வித தொடர்புமில்லாத சம்பந்தன், புதுடில்லிக்கு செல்வதை பிற்போடுவதற்கு வரவு - செலவுத் திட்டத்தை ஒரு காரணமாக முன்வைத்திருக்கின்றார்.

ராஜபக்ஷ குடும்ப அணியில் இணக்கப்பாடுகளை, சமரசங்களை ஏற்படுத்தும் ஒரு முகமாக பஸில் ராஜபக்ஷ செயல்பட்டு வருகின்றார். இந்த பின்புலத்திலேயே இந்தியாவை நோக்கியும், அமெரிக்காவை நோக்கியும் சில முன்னெடுப்புக்களை அரசாங்கம் மேற்கொண்டு வருவதுபோல் தெரிகின்றது. சீன நெருக்கம் தொடர்பில் புதுடில்லியின் அதிருப்திகளை ராஜபக்ஷ தரப்பு நன்கறிந்திருக்கின்றது. அதேவேளை சீனாவை எதிர்கொள்ளும் அமெரிக்க - இந்திய கூட்டு முன்னெடுப்புக்கள் தொடர்பிலும் அவர்கள் கற்றுகொள்ள முயற்சிக்கின்றனர். இவ்வாறானதொரு பின்புலத்தில்தான், இந்தியாவுடனான பொருளாதார உறவுகளை வலுப்படுத்திக் கொள்வது தொடர்பில் ராஜபக்ஷக்கள் கவனம் கொள்கின்றனர் எனத் தெரிகின்றது. சீனாவுடன் மட்டும் பொருளாதார உறவுகளை வலுப்படுத்திக் கொள்ளவதிலுள்ள நீண்டகால ஆபத்துக்களை உணர்ந்ததன் விளைவாகவே, இவ்வாறானதொரு காய்நகர்த்தலில் ஈடுபட முயற்சிக்கின்றனர் போலும்.

ஒரேநேரத்தில், இந்தியா - சீனா - அமெரிக்கா ஆகிய மூன்று தரப்புக் களையும் சமநிலையில் அணுகுவது தொடர்பிலேயே அவர்களின் கவனம் திரும்பியிருக்கின்றது. இதில் இந்தியாவை சமாளித்துக் கொள்வதன் மூலம், அமெரிக்காவை சமாளித்துக் கொள்ளலாம் என்று அவர்கள் கணிக்கக்கூடும். அவ்வாறு கணித்தால் அது தவறான ஒன்றல்ல. ஏனெனில், அமெரிக்க - சீன போட்டியென்பது உலகளாவியது. இதில் இந்தியாவின் கவலைகள் பிராந்திய ரீதியானவை. பிராந்திய சக்தியான இந்தியாவை ஓர் எல்லைக்குள் திருப்திப்படுத்திக்கொண்டால் - அதன் மூலம், அமெரிக்க - சீன போட்டிக்குள் சிக்குப்படாமல் சுழித்து ஓடலாம் என ராஜபக்ஷக்கள் கணிக்கக்கூடும். ராஜபக்ஷக்களின் அண்மைக்கால அணுகுமுறைகள் இதனையே உணர்த்துகின்றன.

ராஜபக்ஷக்கள் இந்தியாவை நோக்கி இராஜதந்திர நகர்வுகளை மேற்கொள்ளும்போது, இந்தியாவை உரிமையுடன் அணுகவேண்டிய தமிழர் தரப்புக்களோ - முக்கியமாக சம்பந்தன் தலைமையிலான கூட்டமைப்பு, இந்தியாவை நோக்கிச் சென்றால் சிங்களவர்கள் கோபிப்பார்கள் என்னும் நகைச்சுவைக்குரிய காரணங்களை கூறிவருகின்றது. இந்தியாவை நோக்கி கோரிக்கையொன்றை முன்வைக்கப் போவதாக, ஆடம்பரமாக ஆரம்பித்த கூட்டமைப்பின் பங்காளிகளின் முயற்சியும் இடைநடுவில் ஊசலாடிக் கொண்டிருக்கின்றது.

சைவசமய பாடநூலில் - ‘மாம்பழத்துக்காக உலகை சுற்றிய’ கதை ஒன்று உண்டு. இதில், முதலில் உலகை சுற்றி வருவது யாரென்பதுதான் போட்டி. பிள்ளையாரும் முருகனும்தான் போட்டியாளர்கள். முருகன் மயிலில் ஏறி பறந்துவிடுவார். ஆழமாக யோசிக்கும் பிள்ளையாரோ - தனது பெற்றோரான - சிவனையும் உமாதேவியையும் சுற்றிவந்து ஞானப்பழத்தை பெற்றுவிடுவார். இந்தக் கதையில் முருகனின் நிலையில்தான் தமிழ் தலைமைகள் இருக்கின்றன. மேற்குலக தூதரகங்களின் கதவுகளை தட்டிக் கொண்டிருக்கின்றன. ஆனால், அருகிலிருக்கும் இந்தியாவின் கதவை திறக்க முடியாதவர்களாக இருக்கின்றனர். எத்தனை தூதரகத்தில் சந்திப்புக்களை நடத்தினாலும், அவர்களால் தமிழ் மக்களின் அரசியல் தீர்வு விடயத்தில் ஒரு துரும்பையும் அசைக்க முடியாது. ஏனெனில், அவர்களின் தலையிடும் ஆற்றல் மிகவும் மட்டுப்பட்டது. மேலும், அமெரிக்காவை தவிர, வேறு எந்தவொரு மேற்கு நாட்டுக்கும் பிறிதொரு நாட்டின் உள்விவகாரங்களில் தலையீடு செய்யும் ஆற்றல் இல்லை. அமெரிக்காவின் தலையீடும்கூட, அதன் உலகளாவிய நலன்களின் அடிப்படையிலேயே திட்டமிடப்படும்.

இந்த நிலையில் இந்தியாவை, அணுக வேண்டிய தமிழர் தரப்பு, வாய் பார்த்துக் கொண்டிருக்கும்போது - ராஜபக்ஷக்கள் அந்த இடைவெளியில் புகுந்து விளையாடிக் கொண்டிருக்கின்றனர். தமிழில் ஒரு பேச்சுவழக்குண்டு - ‘அழுக்கின்ற பிள்ளைதான் பால் குடிக்கும்’ - அதாவது, தேவையுள்ளவர்தான் சத்தம் போட்டுக் கொண்டிருக்க வேண்டும். கதவை தடடிக் கொண்டிருக்க வேண்டும். இந்தியா எங்களுக்காக கவலைப்பட முடியாது. நாங்களே - எங்களைபற்றி கவலைப்படாத போது, இந்தியா எதற்காகக் கவலைப்பட வேண்டும்.

# முன்னாள் போராளிகளின் அவல நிலை!

-அலசுவது இராஜதந்திரி-

இலங்கையின் வடக்கு - கிழக்கு யுத்தம் முடிவுற்று ஒரு தசாப்த காலத்துக்கும் மேலாகி யுள்ள போதிலும் போரின் இறுதி யில் சரண டைந்த மற்றும் கைதான முன்னாள் போராளி களின் நிலை கவலைக்குரியதாகவே இருக்கின் றது.

முன்னாள் போராளிகள் என்போரில் ஆண்கள் மாத்திரமல்ல, பெண்களும் அடங்கி யுள்ளனர். மிகஇளவயதில் புத்தகங்களை கைகளில் ஏந்திச்செல்ல வேண்டிய மாணவப் பருவத்திலிருந்தோர் துப்பாக்கிகளை ஏந்தும் நிலைக்கு தள்ளப்பட்டிருந்தனர்.

முன்னாள் போராளிகள் அரசியல் அபிலாசைகளை பூர்த்தி செய்ய மட்டும் போராட்டத்தில் குதித்திருக்கவில்லை. யுத்தம் ஆரம்பித்த காலத்தில் தமது உறவுகளில் பலர் விமானக் குண்டுவீச்சுகள், மற்றும் ஆயுதப் படையினரின் தேடுதல் நடவடிக்கைகள் என்பவற்றில் கொல்லப்பட்டமை, காணாமல் ஆக்கப்பட்டமை போன்றவற்றால் தமது பழிவாங்கும் எண்ணத்தின் வெளிப்பாடாக வும் கைகளில் ஆயுதங்களை ஏந்தி வடக்கு - கிழக்கின் ஆயுதப் போராட்ட அமைப்புகளில் தம்மை இணைத்துக்கொண்டனர்.

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தில் மட்டுமல்ல. வடக்கு - கிழக்கில் செயல்பட்ட பல்வேறு ஆயுதப் போராட்ட அமைப்புகளி லும் பாடசாலைக் கல்வியை கைவிட்டவர் களாக ஆண்களும் பெண்களும் ஆயுதப் போராட்ட அமைப்புகளில் தம்மை இணைத் துக்கொண்டிருந்தனர். இருந்தபோதிலும் ஒரு பொது எதிரிக்காக ஆயுதம் ஏந்தியவர்கள் வடக்கு - கிழக்கின் ஆயுதப் போராட்ட அமைப்புகளிடையே நிலவிய போட்டித் தன்மை காரணமாகவும் உயிரிழந்திருந்திருந்த னர்.

ஓர் இலக்குத் தவறிய போராட்டத்துக்காக வெறுமனே உயிரிழந்ததோடு எண்ணிலடங் காத இளைஞர், யுவதிகள் கை, கால்களை இழந்தும் கண் பார்வை இழந்தும் சொல்லொ ணாத் துயரங்களுக்கு உள்ளாகியிருந்தனர். முன்னாள் போராளிகளைப் பொறுத்தவரை அவர்கள் உடல் உபாதைகளுக்குள்ளான நிலை யில் அவர்களின் சொந்த உறவுகளால் கூட நிராகரிக்கப்படும் நிலையே காணப்படு கின்றது.

ஓரிரு வருடங்களுக்கு முன்னர் வெளி நாடொன்றிலிருந்து யாழ்ப்பாணத்துக்கு வந்திருந்த ஒரு குடும்பஸ்தர், வற்றாப்பளை அம்மன் ஆலய பொங்கல் உற்சவத்தில் பங்கு பற்றியதைக் குறிப்பிட்டு அங்கே தாம் கண் ணுற்ற சோகமான காட்சிகள் சில பற்றி யும் குறிப்பிட்டிருந்தார்.

மிகவும் திடகாத்திரமான உடலமைப்பைக் கொண்ட இளைஞர்கள் பலர் கையேந்தி யாசகம் பெறுவதைக் கண்டதாகவும், அவர் களை உற்று நோக்கிய போது உடல் உறுப்பு களில் சிலவற்றை இழந்து நிற்பதைக்கண்டு தாம் கண் கலங்கி நின்றதாகவும் தெரிவித் திருந்தார்.

ஊனமுற்றிருந்திருந்த இளைஞர்களுடன் பேச்சுக் கொடுத்தபோது அவர்கள் வடக்கே இடம்பெற்ற யுத்தங்களில் தாக்குதல்களுக்குள் ளாகி தமது உடல் உறுப்புகளை இழந்த துயரத்தைக் தம்மிடம் கூறினரென வெளிநாட் டிலிருந்து வந்திருந்த அந்த நபர் தெரிவித் திருந்தார்.

வடக்கு - கிழக்கு யுத்தத்தின் தாக்கம் பல்வேறு விதத்திலும் பிரதிபலித்திருக்கின் றது.

ஆயுதமேந்தி இயங்கங்களில் சேர்ந்து தமது வாழ்வில் தற்போது ஏமாற்றங்களை சந்தித்திருக்கும் இளைஞர், யுவதிகள் யுத்தம் முடிவடைந்தபோது புனர்வாழ்வளிக்கப் பட்டிருக்கலாம். ஆனால், அவர்கள் தமது வாழ்வை புனர்நிர்மாணம் செய்து கொள்ள உரிய உதவி ஒத்தாசைகளின்றி இருப்பதையே அவதானிக்க முடிகின்றது.

இந்நிலையில், அரசாங்கம் மாத்திரமல்ல. வடக்கு - கிழக்கில் செயல்படுகின்ற பல அரச சார்பற்ற அமைப்புகள்கூட முன்னாள் போராளிகள் குறித்து போதியளவு அக்கறை கொள்ளாதிருக்கின்றன.


யுத்தம் நடைபெற்றபோது வடக்கு - கிழக்கில் உள்ளூர் மற்றும் சர்வதேச அரச சார்பற்ற நிறுவனங்கள் பல இயங்கியிருந்தன. ஆனால், அந்நிறுவனங்களிடையே யுத்தத் திற்குப் பின்னரான மனிதாபிமானப் பணிகள் குறித்து தகுந்த செயல் திட்டங்கள் எதுவும் இல்லாதிருக்கின்றன.

யுத்தம் முடிவுக்கு வரும் பட்சத்தில் முன் னெடுக்க வேண்டிய மனிதாபிமானப் பணிகள் மற்றும் முன்னாள் போராளிகள் தொடர்பான புனர்வாழ்வுத் திட்டங்கள் என்பவை குறித்து ஆக்கபூர்வமான வேலைத் திட்டங்கள் எதனையும் அரச நிறுவனங்களோ அல்லது உள்ளூார் மற்றும் சர்வதேச அரசசார்பற்ற நிறுவனங்களோ கொண்டிருக்கவில்லை.

இதன் வெளிப்பாடாகவே முன்னாள் போராளிகள் உடல் ஊனமுற்றவர்களாக தமது இளமையைத் தொலைத்தவர்களாக எஞ்சியுள்ள தமது வாழ்நாள் குறித்து கலங்கி நிற்பதை அவதானிக்க முடிகின்றது. முன்னாள் போராளிகளின் இந்த அவல நிலைகுறித்தே வன்னி மாவட்ட பாரளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் பாராளுமன்றில் நேற்று முன்தினம் எடுத்துக்கூறியதோடு அரசாங்கம் முன்னாள் போராளிகள் குறித்து மனிதாபிமான நடவடிக்கைகளை மேற் கொள்ள வேண்டுமென குறிப்பிட்டிருந்தார்.

முன்னாள் போராளிகள் விடயத்தில் வடக்கு - கிழக்கு பாராளுமன்ற உறுப்பினர்க ளும் பரந்த கண்ணோட்டத்துடன் புலம் பெயர்ந்த வடக்கு - கிழக்கு மக்களின் உதவி யோடு மனிதாபிமான அடிப்படையில் செயல்திறன் மிக்க திட்டங்களை உருவாக்கி செயல்படுத்துவதும் காலத்தின் தேவையா கின்றது.

## அப்புக்குட்டி அண்ணையின் ‘டவுட்’






**மேடம்**
நெருங்கிய உறவினர்களை இன்று சந்தித்து மகிழ்ச்சி அடைவீர்கள். பெரியவர்களின் ஆசி கிடைக்கும். நட்பு வட்டம் விரிவடையும். அதிர்ஷ்ட வாய்ப்புகள் கூடிவரும். உங்களின் மனம் குளிரும்.

**இடபம்**
மனநிறைவு தரும் செயல்களை செய்து திருப்தி அடைவீர்கள். வாழ்க்கைத் துணைவரால் மிகுந்த நலம் உண்டாகும். வீண் வாக்குவாதங்களை தவிர்த்தால் நன்மை உண்டு.

**மிதுனம்**
பணியிடத்தில் சக ஊழியர்களால் ஏற்பட்ட பிரச்னைகள் நீங்கும். சாதுர்யமாக செயல்பட்டு முயற்சிகளில் வெற்றி பெறுவீர்கள். உழைப்பிற்கேற்ற பலன் கிடைக்கும். சேமிப்பில் ஆர்வம் கூடும்.

**கடகம்**
உங்களின் பேச்சு, செயல்களில் அதிக கவனம் தேவை. சகோதர சகோதரிகளுக்குள் ஒற்றுமையும் நன்மையும் ஏற்படும். நண்பர்களிடம் இருந்து உங்களுக்கு தேவையான உதவிகள் கிடைக்கும்.

**சிம்மம்**
எதிர்பாலின நட்புகளால் நன்மைகள் அதிகரிக்கும். மகிழ்ச்சி கூடும். யாரிடமும் வீண் வாக்குவாதம் செய்ய வேண்டாம். வேலை தேடியவர்களுக்கு புதிய வேலை வாய்ப்பு கூடிவரும்

**கன்னி**
தெய்வ வழிபாட்டில் ஈடுபாடு கூடும். மன நிறைவு வரும். அலுவலகத்தில் இருந்த நிம்மதியற்ற சூழ் நிலை இன்று மாறும். அரசாங்க வகையில் ஆதாயம் கிடைக்கும். மகிழ்ச்சி அதிகரிக்கும்.

**துலாம்**
புதுமை படைப்பீர்கள். நட்பு விஷயத்தில் கவனமாக இருக்கவும். சகோதர, சகோதரிகளுடன் இருந்த மனத் தாங்கல்கள் நீங்கும். உடன்பிறந்தவர்களால் நன்மையும், லாபமும் உண்டாகும்.

**விருட்சிகம்**
பங்குச்சந்தை, கமிஷன் போன்ற வகைகளில் பணம் வரும். மனதிற்கு இனிய சம்பவங்கள் இன்று நிகழும். மகிழ்ச்சி அதிகரிக்கும். எதிர்ப்புகள் விலகும். பொது நிகழ்ச்சிகளில் பங்கேற்பீர்கள்.

**தனுசு**
உங்களுக்கு தொல்லை கொடுத்தவர்கள் விலகுவார்கள். நிதான நன்மை உண்டு. உங்களின் புதிய முயற்சிகளுக்கு மேலதிகாரியின் ஆதரவு இருக்கும். அரசு வகையில் உதவிகள் கிடைக்கும்.

**மகரம்**
உங்களின் எதிர்காலம் சம்பந்தமான எண்ணம் ஒன்று நிறைவேறும். உங்களது பேச்சினால் ஏற்பட்ட பிரச்னைகள் இன்று தீரும். பணியிடத்தில் பெருமை தரும் நிகழ்ச்சி ஒன்று நடைபெறும்.

**கும்பம்**
உங்களின் குழந்தைகள் மேடை ஏறிக் கைதட்டல் வாங்குவார்கள். குடும்பத்தில் யாருக்கேனும் ஒருவருக்கு சுபநிகழ்ச்சி நடைபெறும். முயற்சியில் வெற்றி பெறுவீர்கள்.

**மீனம்**
நெருங்கிய உறவினர்களுடன் வாக்கு வாதம் செய்ய வேண்டாம். பணியிடத்தில் பெரிய பொறுப்புகளை நிறைவேற்றி வெல்வீர்கள். நண்பர் ஒருவர் மூலம் உங்களுக்கு தேவையான உதவிகள் கிடைக்கும்.

# தமிழிலேயே பெயரின் முதலெழுத்து அரசாணை பிறப்பித்தது தமிழ்நாடு

சென்னை, டிசெ. 10,

பள்ளி, கல்லூரிகளில் ஆவணங்களில் பெயர் எழுதும் போது முன் எழுத்தை தமிழில் எழுத வேண்டும் என தமிழ்நாடு அரசு அரசாணை வெளியிட்டுள்ளது.




தமிழில் பெயர் எழுதும் போது, பெயரின் முதலெழுத்தை தமிழிலேயே குறிப்பிட வேண்டும் எனவும், பொதுமக்களும் பொதுப் பயன்பாடுகளில் பெயரின் முதலெழுத்தை தமிழில் எழுத ஊக்குவிக்கப்படும் எனவும் தமிழ்நாடு அரசு அறிவித்துள்ளது.

கோரிக்கை விண்ணப்பங்களில் பெயரின் முன்னெழுத்தும், கையெப்பமும் தமிழில் இட பொதுமக்களுக்கு அரசு சார்பில் வேண்டுகோள் வைக்கப்பட்டுள்ளது. அதேபோல, பெயரின் முன்னெழுத்தும், கையெப்பமும் தமிழில் இட மாணவ, மாணவியர்களுக்கும் வேண்டுகோள் விடப்பட்டுள்ளது.

அரசு அலுவலகங்களில் பொதுமக்களின் பார்வைக்கு வைக்கப்படுள்ள 'லஞ்சம் வாங்குவதும், கொடுப்பதும் தண்டனைக்குரிய குற்றம்', 'புகைபிடிப்பது சட்டப்படி குற்றம்' என்பது போன்ற விளம்பர சுவர் ஒட்டிகளை போன்றே, பெயரின் முன்னெழுத்தும், கையெப்பமும் தமிழில் இட வேண்டும் என்ற விளம்பர சுவர் ஒட்டிகளை ஒட்டி, நடைமுறைப்படுத்த வேண்டும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

முதலமைச்சர் முதல் கடைநிலை ஊழியர்கள் வரை, அனைத்து அரசு அலுவலர்கள், பணியாளர்கள் என அனைவரும் தமிழில் கையெப்பம் இட மீண்டும் வலியுறுத்தப்படுவதாகவும் தெரிவிக்கப்படுள்ளது.

# அ.தி.மு.கவின் உட்கட்சி மோதல்களை எம்மீது திசை திருப்ப முயல்கிறார்கள்

## அ.ம.மு.க. சார்பில் புகார்

சென்னை, டிசெ. 10,

அ.தி.மு.க. ஒருங்கிணைப்பாளர் பன்னீர்செல்வம், இணை ஒருங்கிணைப்பாளர் எடப்பாடி பழனிச்சாமி ஆகியோரின் வாகனங்கள் மீது தாக்குதல் நடத்தியதாக அ.ம.மு.கவினர் மீது வழக்குப்பதிவு செய்யப்பட்டிருந்த நிலையில், உட் கட்சி பூசலில் ஏற்பட்ட கோஷ்டி மோதலைத் திசைதிருப்ப அ.ம.மு.கவினர் மீது அ.தி.மு.க வினர் வீண்பழி சுமத்துவதாக குற்றஞ்சாட்டி, இவ்விவகாரத் தில் காவல்துறை தீர விசாரித்து உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என அ.ம.மு.க சார்பில் காவல் ஆணையர் அலுவலகத்தில் புகார் அளிக்கப்பட்டுள்ளது.





மறைந்த முன்னாள் முதலமைச்சர் ஜெயலலிதாவின் நினைவு தினம் கடந்த 5 ஆம் திகதி அனுசரிக்கப்பட்டதையொட்டி கடற்கரைசாலையில் உள்ள அவரது நினைவிடத்தில் அ.தி.மு.க மற்றும் அ.ம.மு.க கட்சிகளைச் சேர்ந்த ஏராளமானோர் அஞ்சலி செலுத்தினர். அப்போது அங்கு அஞ்சலி செலுத்த வந்த எதிர்கட்சித் தலைவரும், அ.தி.மு.க இணை ஒருங்கிணைப்பாளருமான எடப்பாடி பழனிசாமி வாகனம் மீது செருப்பு வீசி தாக்குதல் சம்பவம் நடத்தப்பட்டது.

இதனையடுத்து தாக்குதல் சம்பவத்தை அ.ம.மு.க பொதுச் செயலாளர் டி.டி.வி தினகரன் தூண்டுதலின் பேரில் அ.ம.மு.கவினர் நடத்தியதாக குற்றஞ்சாட்டி அ.தி.மு.க கட்சியைச் சேர்ந்த மாறன் என்பவர் புகார் அளித்திருந்தார். அந்தப் புகாரின் அடிப்படையில் அண்ணா சதுக்கம் பொலிஸார், தாக்குதல் சம்பவத்தில் ஈடுபட்டனர் என அ.ம.மு.கவினர் மீது வழக்குப்பதிவு செய்து விசாரணைக்கு அழைப்பு விடுத்துள்ளனர்.

இந்நிலையில் அ.ம.மு.க. தரப்பில் "உட்கட்சி பூசல் காரணமாக ஏற்பட்ட கோஷ்டி மோதலை திசை திருப்ப அ.ம.மு.கவினர் மீது வீண்பழி சுமத்தப்பட்டுள்ளது" என அ.தி.மு.க. மீது குற்றஞ்சாட்டி சென்னை வேப்பேரியில் உள்ள காவல் ஆணையர் அலுவலகத்தில் அ.ம.மு.க வழக்கறிஞர் பிரிவு மாநிலச் செயலாளர் வேலு கார்த்திகேயன் புகார் மனு அளித்துள்ளார்.

# தமிழகத்தில் 3ஆவது மொழியை கற்கக் கட்டாயப்படுத்தக் கூடாது

## அமைச்சர் பொன்முடி



சென்னை, டிசெ. 10.

தமிழகத்தில் இரு மொழிக் கொள்கை தான் நடைமுறையில் உள்ளது இரு மொழிக் கொள்கைக்கு ஆளுநரும் ஆதரவு அளிக்க வேண்டும். 3ஆவது மொழியை கற்க கட்டாயப்படுத்த கூடாது என திருச்சி பாரதிதாசன் பல்கலைக்கழகத்தில் பட்டமளிப்பு விழாவில் பேசிய தமிழக கல்வி அமைச்சர் பொன்முடி, தமிழக ஆளுநரிடம் கோரிக்கை வைத்தார்.

திருச்சி பாரதிதாசன் பல்கலைக்கழகத்தின் 37 ஆவது பட்டமளிப்பு விழாவில் தமிழக ஆளுநர் ஆர்.என். ரவி, உயர்கல்வித் துறை அமைச்சர் பொன்முடி, பாரதிதாசன் பல்கலைக்கழக துணை வேந்தர் செல்வம், இந்திய சமூக அறிவியல் ஆராய்ச்சி கழக தலைவர் கனகசபாபதி உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

இந்த விழாவில் பேசிய உயர் கல்வித்துறை அமைச்சர் பொன்முடி, தமிழகத்தில் இரு மொழிக் கொள்கை தான் நடைமுறையில் உள்ளது இரு மொழிக் கொள்கைக்கு ஆளுநரும் ஆதரவு அளிக்க வேண்டும். மாணவர்கள் விருப்பப்பட்டால் அவர்கள் விரும்பும் மூன்றாவது மொழியை கற்று கொள்ளலாம், ஆனால் மூன்றாவது மொழி கற்க கட்டாயப்படுத்த கூடாது" என்றார்.

# சபாநாயகர் மௌனம் காத்தால் உயர்நீதிமன்றத்தை நாடுவோம்!

## எதிரணி பிரதம கொறடா கூறுகிறார்



கொழும்பு, டிசெ. 10

**‘‘சபாநாயகரே, இந்த சபைக்குள் நீங்கள் நேரில் கண்ட சம்பவங்கள் தொடர்பில் தீர்ப்பொன்றை அறிவியுங்கள். அவ்வாறு இல்லாவிட்டால் நாம் உயர்நீதிமன்றத்தை நாடுவோம்.’’**

**- இவ்வாறு எதிரணி பிரதம கொறடாவான லக்ஷ்மன் கிரியல்ல எம்.பி. தெரிவித்தார்.**

பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் சபாநாயகர் அறிவிப்பு விடுத்த பின்னர் அது தொடர்பில் கருத்து வெளியிட்ட லக்ஷ்மன் கிரியல்ல எம்.பி. கூறியவை வருமாறு:

பாராளுமன்ற உறுப்பினர்களின் பாதுகாப்பு தொடர்பில் கவனம் செலுத்தியமைக்கு நன்றி. குழு நியமனம் பற்றியும் குறிப்பிட்டீர்கள். அந்த குழு நியமனத்தின் எதிர்ப்பார்ப்பு குறித்து தெளிவாக எடுத்துரைக்கப்படவில்லை. இருந்தாலும் சரியான திசையில் செல்லும் என நம்புகின்றோம்.

பாராளுமன்றத்தில் இரு நாட்களில் (டிசெம்பர் 03,04) நடந்த சம்பவங்களுள் நீங்கள் நேரில் கண்ட சம்பவங்கள் தொடர்பில் தீர்ப்பொன்றை அறிவியுங்கள். ஏனெனில், நீங்கள்தான் சாட்சியாளர். சபா பீடத்தில் இருந்து அவதானித்தீர்கள்.

எனினும், நேரில் கண்ட சம்பவங்கள் பற்றி நீங்கள் கட்சித் தலைவர்கள் கூட்டத்தின் போதும் எதுவும் அறிவிக்கவில்லை.

பாராளுமன்ற சிறப்புரிமை சட்டத்தின் பிரகாரம், பாராளுமன்ற உறுப்பினர் ஒருவருக்கு சபைக்குள்ளோ அல்லது தெரிவுக்குழுவிலோ தாக்குதல், திட்டமிட்ட அடிப்படையிலான இடையூறுகள் மற்றும் அவமதிப்பு இடம்பெற்றால் அவை உயர்நீதிமன்றத்தால் தண்டனை வழங்கப்படக்கூடிய குற்றங்களாகும்.

பிரச்னையை பாராளுமன்றத்துக்கு வெளியில் எடுத்துச் செல்ல நாம் விரும்பவில்லை. இதற்குள்ளேயே தீர்த்துக் கொள்ளவே விரும்புகின்றோம். எனவே , நேரில் கண்ட விடயங்கள் தொடர்பில் நீங்கள் தீர்ப்பொன்றை அறிவியுங்கள். இல்லையேல் விரும்பமில்லாவிட்டாலும்கூட இந்த பிரச்னையை உயர்நீதிமன்றத்துக்கு கொண்டுசெல்ல நேரிடும். ஏனெனில் இந்த பாராளுமன்றத்தை ‘மிளகாய் தூள்’ குழுவுக்கு நிர்வகிக்க இடமளிக்க முடியாது. இவர்களே கடந்த பாராளுமன்றத்தையும் குழப்பினர் - என்றார். (அ)

# காஸ் வெடிப்பு சம்பவங்களினால் பாதிக்கப்பட்டோருக்கு இழப்பீடு!

கொழும்பு, டிசெ. 10

சமையல் எரிவாயு சிலிண்டர் வெடிப்பு சம்பவங்களினால் ஏற்பட்ட உடைமைகள் மற்றும் உபகரணங்கள் சேதங்களால் பாதிக்கப்பட்டவர்களுக்கு அரசாங்கத்தினால் உரிய நட்டஈடு வழங்கப்படுமென இராஜாங்க அமைச்சரான லசந்த அழகியவண்ண தெரிவித்துள்ளார்.

நாட்டின் பல பாகங்களில் திடீரென அதிகரித்துள்ள உள்நாட்டு சமையல் எரிவாயு சிலிண்டர் வெடிப்பு சம்பவங்கள் தொடர்பில் விசாரணையை முன்னெடுப்பதற்காக ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவினால் நியமிக்கப்பட்ட மொறட்டுவை பல்கலைக்கழகத்தின் பேராசிரியர் சாந்த வல்பொல தலைமையிலான எட்டு பேர் கொண்ட நிபுணர் குழு தனது அறிக்கையை ஒரு வார காலத்துக்குள் வெளியிடவுள்ளது.

பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு நிவாரணம் வழங்குவது தொடர்பாக தெளிவான திட்டமொன்று உள்ளதாகவும் அவர் தெரிவித்தார். (அ)

# களுத்துறையில் தீ விபத்து

கொழும்பு, டிசெ. 10

களுத்துறை வடக்கு பொலிஸ் பிரிவுக்குட்பட்ட, வஸ்கடுவ பிரதேசத்தில் தளபாட தொழிற்சாலையொன்றில் தீ விபத்து இடம்பெற்றுள்ளது.

இந்த விபத்தில் அந்த தொழிற்சாலையில் வைக்கப்பட்டிருந்த பெருந்தொகை பலகைகள் தீக்கிரையாகியுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

களுத்துறை நகரசபைக்கு சொந்தமாக இரு தீயணைப்பு வாகனங்களை பயன்படுத்தி, களுத்துறை வடக்கு பொலிஸார் பிரதேசவாசிகளின் உதவியுடன் தீ பரவல் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டுள்ளது.

பலகைகளை களஞ்சியப்படுத்தும் பகுதியிலேயே இந்த தீ விபத்து இடம்பெற்றுள்ளது. தீ பரவலுக்கான காரணம் இதுவரை அடையாளம் காணப்படவில்லை என்பதுடன் பெருந்தொகை பலகைகள் தீக்கிரையாகியுள்ளன. இந்த விபத்தால் ஏற்பட்ட நட்டம் இதுவரை உறுதிப்படுத்தப்படவில்லை. (அ)

# அமைச்சரவையின் நியமனம் அரசமைப்புக்கு விரோதமா?

கொழும்பு, டிசெ. 10

தற்போதைய அமைச்சரவையின் நியமனம் அரசமைப்பு விதிகளை மீறுவதாக அமைந்துள்ளதாக தாக்கல் செய்யப்பட்ட மனு மீதான பரீசிலனையை அடுத்து அது தொடர்பில் அறிக்கை சமர்ப்பிக்குமாறு சட்டமா அதிபருக்கு உயர் நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்துள்ளது.

தற்போதைய அமைச்சரவை மற்றும் இராஜாங்க அமைச்சர்களின் எண்ணிக்கை தொடர்பான அறிக்கையை இரண்டு வாரங்களுக்குள் சமர்ப்பிக்குமாறு சட்ட மாஅதிபருக்கு உயர்நீதிமன்றம் நேற்றுமுன்தினம் உத்தரவிட்டுள்ளது.

தற்போதைய அமைச்சரவையின் நியமனம் அரசமைப்பின் விதிகளை மீறுவதாக தெரிவித்து, பொறியியலாளர் கபில ரேணுகாவினால் அடிப்படை உரிமைகள் மனுவொன்று தாக்கல் செய்யப்பட்டது.

இந்நிலையில் அம் மனு மீதான பரிசீலனை நேற்று முன்தினம் உயர் நீதிமன்ற நீதியரசர்கள் விஜித மலல்கொட, யசந்த கோதாகொட மற்றும் மஹிந்த சமயவர்தன ஆகிய மூவரடங்கிய குழாம் முன்னிலையில் நேற்று முன்தினம் காலை விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

இதன்போதே மேற்கண்ட உத்தரவு சட்ட மாஅதிபருக்கு பிறப்பிக்கப்பட்டது.

அதேநேரம் இம்மனு மீதான பரிசீலனையை மீண்டும் 2022 ஜனவரி 27 ஆம் எடுத்துக் கொள்ளவும் தீர்மானிக்கப்பட்டது.

# வாகன வரி அனுமதிப் பத்திரத்தை இணையம் ஊடாக பெறுவதில் தடை

கொழும்பு, டிசெ. 10

நாடு முழுவதும் வாகன வருமான அனுமதிப் பத்திரத்தை இணையம் ஊடாக பெற்றுக் கொள்ளும் செயற்பாடு தடைப்பட்டுள்ளது.

இணையம் ஊடாக இந்த வசதியைப் பெற்றுக் கொள்ளப் பிரவேசிப்பவர்களின் எண்ணிக்கை அதிகரித்தமையை அடுத்து இந்த நிலை ஏற்பட்டுள்ளதாக மோட்டார் வாகன போக்குவரத்து திணைக்களத்தின் மாகாண காரியாலயங்களின் அதிகாரிகள் தெரிவித்தனர்.

எவ்வாறாயினும் தொழில்நுட்பப் பிரிவினர் இந்த நிலையை வழமைக்குக் கொண்டு வருவதற்குத் தொடர்ந்து சேவையில் ஈடுபட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

நாடு முழுவதும் வாகன வருமான அனுமதிப் பத்திரத்தை இணையம் ஊடாக பெற்றுக் கொள்ளும் செயற்பாடு தடைப்பட்டு இரண்டு வாரங்கள் கடந்துள்ளன.

இதனையடுத்து தகவல் தொழிநுட்ப முகவர் நிறுவனத்தை தொடர்பு கொண்டு வினவியபோது,

இதற்குப் பதிலளித்த அதன் பேச்சாளர் ஒருவர், இணைய வசதியின் ஊடாக வாகன வருமான அனுமதிப் பத்திரத்துக்கான விண்ணப்பங்களை முன்வைப்போரின் எண்ணிக்கை அதிகரித்துள்ளமையினால் இந்த நிலை ஏற்பட்டுள்ளது - என்றார்.

முன்னர் நாளாந்தம் இணையம் ஊடாக குறித்த வசதிகளைப் பெற்றுக் கொள்வதற்கு 30 பேர் பிரவேசித்த நிலையில் தற்போது அந்த எண்ணிக்கை 60 ஆயிரமாக அதிகரித்துள்ளதாக அவர் கூறினார்.(அ)

# பாக். பாதுகாப்பு அமைச்சருக்கு சுதந்திரக்கட்சி கடும் கண்டனம்



கொழும்பு, டிசெ. 10

இலங்கையர் படுகொலை செய்யப்பட்ட சம்பவத்தை நியாயப்படுத்தியுள்ள பாகிஸ்தான் பாதுகாப்பு அமைச்சரின் கருத்தை வன்மையாகக் கண்டிக்கின்றோம் என்று ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் பாராளுமன்றத்தில் நேற்று கருத்து வெளியிட்ட சு.க. பாராளுமன்ற உறுப்பினர் சாந்த பண்டார கூறியவை வருமாறு,

‘‘பாகிஸ்தானில் இலங்கையர் ஒருவர் படுகொலை செய்யப்பட்ட சம்பவத்தை நாம் ஏற்கனவே கண்டித்துள்ளோம். இராஜதந்திர மட்டத்திலான நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டுள்ளது. இவ்விவகாரத்தில் பாகிஸ்தான் பிரதமர் செயற்பட்ட விதம் சிறப்பு. அவருக்கு நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன். ஆனால் கொலையை நியாயப்படுத்தும் வகையில் கருத்து வெளியிட்ட பாகிஸ்தான் பாதுகாப்பு அமைச்சரின் கருத்தை கண்டிக்கின்றோம் - என்றார். (அ)

# மன்னாரில் டெங்கு ஒழிப்பு செயல்பாடு விசேட குழு வீடு வீடாகப் பரிசோதனை



மன்னார், டிசெ. 10

மன்னார் மாவட்டத்தில் டெங்கு நோயை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரும் வகையில் நேற்று வியாழக்கிழமை முதல் எதிர்வரும் புதன்கிழமை வரை டெங்கு ஒழிப்பு வாரம் அமுல்படுத்தப்பட்டுள்ளது.

இந்த நிலையில் நேற்று வியாழக்கிழமை காலை 8.30 மணியளவில் மன்னார் மாவட்ட செயலகத்தில் டெங்கு ஒழிப்பு வார ஆரம்ப நிகழ்வு இடம்பெற்றது.

மன்னார் மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் ரி.வினோதன் தலைமையில் இடம்பெற்ற ஆரம்ப நிகழ்வில் மேலதிக அரசாங்க அதிபர், அனார்த்த முகாமைத் துவ பிரிவினர் உள்ளடங்கலாக பொது சுகாதாரப் பரிசோதகர்கள், டெங்கு ஒழிப்புப் பிரிவினர், பொலி ஸார் மற்றும் அழைக்கப்பட்ட திணைக்களப் பிரதிநிதிகள் ஆகியோர் கலந்துகொண்டனர்.

இதன்போது குழுக்கள் அமைக்கப்பட்டதோடு, பனங்கட்டிக்கொட்டு மற்றும் சின்னக் கடை பகுதிகளில் உள்ள வீடுகளுக்கு குறித்த குழுவினர் சென்று டெங்கு பரிசோதனைகளை மேற்கொண்டனர்.

டெங்கு தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ள பனங்கட்டுகொட்டு, எமில் நகர், பெரிய கடை, பேசாலை 5, 8 ஆம் வட்டாரம், தோட்டவெளி போன்ற கிராமங்களை உயர் ஆபத்துள்ள இடங்களாக சுகாதாரத் துறையினர் அடையாளப்படுத்தி உள்ளனர்.

குறித்த இடங்களில் எதிர்வரும் ஒரு வாரங்களுக்கு சிரமதானம் மேற்கொள்ளப்பட உள்ளதோடு, அப்பகுதிகளில் உள்ள வீடுகளுக்கு விசேட குழுவினர் சென்று வீடுகள் பரிசீலிக்கப்பட்டு அவர்களுக்கு ஆலோசனைகள் வழங்கப்பட்டு டெங்கு நோயை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வருவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப் பட்டவுள்ளன. (அ)

# பாடசாலைகளை மீளவும் மூடவேண்டி ஏற்படலாம்!

## சுகாதார பரிசோதகர் சங்கம் எச்சரிக்கை



**கொழும்பு, டிசெ. 10**

**பாடசாலைகளுக்குள்ளும் கோவிட் கொத்தணிகள் உருவாக ஆரம்பித்துள்ளன. இந்த நிலைமை ஆரம்பத்திலேயே கட்டுப்படுத்தப்பட வேண்டும். அவ்வாறில்லையெனில் மீண்டும் பாடசாலைகளை மூடவேண்டிய நிலைமை ஏற்படும் என்பதை சகலரும் நினைவில் கொள்ள வேண்டும் என இலங்கைபொது சுகாதார பரிசோதகர் சங்கத்தின் தலைவர் உபுல் ரோஹண தெரிவித்தார்.**

நாட்டில் மீண்டும் கோவிட் - பரவல் அதிகரித்துள்ளமை தொடர்பில் கருத்து வெளியிடும்போது இதனைத் தெரிவித்த அவர் மேலும் குறிப்பிடுகையில்-

பாடசாலை கட்டமைப்புக்குள் நிர்வாகப் பிரிவினர் மற்றும் மாணவர்கள் மத்தியில் பெரும்பாலானோர் கோவிட் தொற்றாளர்களாக அடையாளம் காணப்படுகின்றனர். இதனால் சில இடங்களில் கோவிட்-கொத்தணிகளும் பதிவாகிக் கொண்டிருக்கின்றன.

இவ்வாறு அதிகரித்துவரும் கோவிட் தொற்று பவலைக் கட்டுப்படுத்தவேண்டிய முழு பொறுப்பும் பாடசாலை நிர்வாகப் பிரிவினருடையதாகும். அதேபோன்று மாணவர்களும் , பெற்றோருக்கும் இந்த பொறுப்பு காணப்படுகிறது.

சுகாதார விதிமுறைகள் அனைத்தையும் முறையாகப் பின்பற்றுமாறு பெற்றோர் தமது பிள்ளைகளை தொடர்ந்தும் அறிவுறுத்த வேண்டும். குறிப்பாக பாடசாலைகளுக்குள் சுகாதார விதிமுறைகளை எந்தவொரு சந்தர்ப்பத்திலும் மீறவேண்டாம் என்று அறிவுறுத்துவது அத்தியாவசியமானதாகும் - என்றார்.

(அ)

# விபத்துக்குள்ளான ஆசிரியர் சிகிச்சை பலனின்றி சாவு!

யாழ்ப்பாணம், டிசெ. 10

மோட்டார் சைக்கிள்கள் மோதி விபத்துக்குள்ளானதில் படுகாயமடைந்திருந்த மீசாலையைச் சேர்ந்த ஆசிரியர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார்.

மீசாலை - புத்தூர் சந்தியில் கடந்த 28ஆம் திகதி இரு மோட்டார் சைக்கிள்கள் மோதிக் கொண்டதில் குறித்த விபத்து சம்பவம் இடம்பெற்றிருந்தது.

இதன்போது விபத்துக்குள்ளான மீசாலையை சேர்ந்த க.சுதாகரன் (வயது-36) என்பவர் படுகாயமடைந்தார்.

இதையடுத்து உடனடியாக மீட்கப்பட்டு சாவகச்சேரி ஆதார வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்ட நிலையில் மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு அவர் மாற்றப்பட்டிருந்தார்.

இந்நிலையில், யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த நிலையில் சிகிச்சை பலனின்றி நேற்று முன்தினம் மாலை உயிரிழந்தார்.

விபத்து தொடர்பில் கொடிகாமம் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

(அ)

## பிரியந்த கொலை சம்பவத்தையடுத்து

# வெளிநாட்டு கணக்காளர்கள் பாகிஸ்தான் செல்ல மறுப்பு!

கொழும்பு, டிசெ. 10

பாகிஸ்தானின் சியல்கோட் நகரில் பிரியந்தகுமார தியவடன பயங்கரவாத கும்பலினால் கொடூரமான முறையில் படுகொலை செய்யப்பட்டதையடுத்து, சர்வதேச தரத்துக்கு அமைவாக இயங்கி வரும் அந்த நாட்டு தயாரிப்பு நிறுவனங்களில் கணக்காய்வுப் பணிகளை மேற்கொள்வதற்கு, வெளிநாட்டு கணக்காளர்கள் வருகை தர மறுப்பு தெரிவித்து வருகின்றனர்.

பாகிஸ்தானில் உள்ள சில நிறுவனங்களில் இலங்கையை சேர்ந்த கணக்காய்வு நிறுவனங்களைச் சேர்ந்தவர்களே பணியாற்றி வருகின்றனர் என்பதால், இலங்கை கணக்காளர் பிரியந்த கொல்லப்பட்டதையடுத்து, அவர்கள் பாகிஸ்தானுக்கு செல்ல மறுப்பு தெரிவித்து வருவதாக பாகிஸ்தான் ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

(அ)

# வடமேல் மாகாண ஆளுநராக சர்ச்சைக்குரிய கரன்னகொட!

கொழும்பு, டிசெ. 10

வடமேல் மாகாண ஆளுநராக கடற்படையின் முன்னாள் தளபதி வசந்த கரன்னகொட நியமிக்கப்பட்டுள்ளார்.

ஜனாதிபதி ஊடகப் பேச்சாளர் கிங்ஸ்லி ரத்னாயக்க இதனைத் தெரிவித்தார்.

வடமேல் ஆளுநராக பணியாற்றிய ராஜா கொளுரே உயிரிழந்தமையையடுத்து இந்த நியமனம் வழங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

2008 மற்றும் 2009ஆம் ஆண்டுகளில் 11 இளைஞர்கள் கடத்தப்பட்ட வழக்கில் முன்னாள் கடற்படைத் தளபதி வசந்த கரன்னாகொடவுக்கு எதிராக குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டிருந்தன.

எனினும், 11 இளைஞர்கள் கடத்தப்பட்ட வழக்கில் முன்னாள் கடற்படைத் தளபதி வசந்த கரன்னகொட மீது குற்றச்சாட்டுகளை தொடர முடியாது என சட்டமா அதிபர் திணைக்களம் நீதிமன்றத்தில் அறிவித்திருந்தது.

இந்தநிலையிலேயே தற்போது கடற்படையின் முன்னாள் தளபதி வசந்த கரன்னகொட வடமேல் மாகாண ஆளுநராக நியமிக்கப்பட்டுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

(அ)

# முற்போக்குக் கூட்டணியில் இணைய கட்சிகள், சிவில் அமைப்புகள் ஆர்வம்

கொழும்பு, டிசெ. 10

தமிழ் முற்போக்கு கூட்டணியில் இணைவதற்கு மலையகத்தை மையப்படுத்தி இயங்கும் மேலும் சில அரசியல் கட்சிகளும், சிவில் அமைப்புகளும் முன்வந்துள்ளன.

இது தொடர்பில் மேற்படி கட்சிகள் மற்றும் அமைப்புகளின் பிரதிநிதிகள் கூட்டணியின் தலைமைப்பீடத்துக்கு இது தொடர்பில் தெரியப்படுத்தியுள்ளனர் என அறியமுடிகின்றது.

அதேபோல காலி, மாத்தறை, கேகாலை மற்றும் வவுனியா பகுதிகளில் இயங்கும் அரசியல்சார் அமைப்புகளும் முற்போக்கு கூட்டணியுடனா பயணத்துக்கு தயாராகி வருகின்றன என தகவல் வெளியாகியுள்ளது.(அ)

# வீடுகளில் சிகிச்சை பெறும் கொரோனா தொற்றாளர் எண்ணிக்கை திடீர் உயர்வு

கொழும்பு, டிசெ. 10

கொரோனா தொற்றுக்குள்ளாகிப் பாதிக்கப்பட்டு வீடுகளில் சிகிச்சை பெற்று வரும் நோயாளிகளின் எண்ணிக்கை மீண்டும் அதிகரித்து வருவதாக சுகாதார அமைச்சின் ஒருங்கிணைந்த கொவிட் தொற்றாளர் வீட்டு பராமரிப்பு திட்டத்தின் தலைவர் விசேட மருத்துவ நிபுணர் மல்காந்தி கல்ஹேன தெரிவித்துள்ளார்.

அறிகுறியற்ற மற்றும் லேசான அறிகுறிகளைக் கொண்ட கோவிட்-19 நோயாளிகளை வீடுகளை வைத்துப் பராமரிக்கும் செயற்றிட்டத்தின் கீழ் சிகிச்சை பெறுவோரின் எண்ணிக்கை கடந்த 3 வாரங்களாக அதிகரித்துள்ளதாகவும் அவர் கூறினார்.

தற்போது இந்தத் திட்டத்தின் கீழ் 4,295 கோவிட் நோயாளிகள் வீடுகளில் வைத்துக் கண்காணிக்கப்பட்டு வருகின்றனர் எனவும் அவர் குறிப்பிட்டார்.

மீண்டும் தொற்று நோயாளர் தொகை நாட்டில் அதிகரித்து வரும் நிலையில் முகக் கவசங்களை அணிதல், கைகளை அடிக்கடி கழுவுதல் மற்றும் சமூக இடைவெளி பேணுதல் போன்ற அடிப்படை சுகாதார வழிகாட்டுதல்களை கண்டிப்பாகப் பின்பற்ற வேண்டியதன் அவசியத்தையும் விசேட மருத்துவ நிபுணர் மல்காந்தி கல்ஹேன வலியுறுத்தினார்.

அத்துடன் கோவிட் தொற்று நோயில் இருந்து பாதுகாப்பு பெற கோவிட் தடுப்பூசிகளைப் பெற்றுக்கொள்ளுமாறும் அவர் அறிவுறுத்தினார்.

வேகமாகப் பரவக் கூடியதும் உலக சுகாதார அமைப்பால் கவலைக்குரியது எனவும் வகைப்படுத்தப்பட்ட ஒமைக்ரோன் புதிய திரிபு உலகெங்கும் பரவி வருகிறது. இலங்கையிலும் ஒமிக்ரோன் திரிபால் பாதிக்கப்பட்ட முதல் நோயாளி கடந்த 03 ஆம் திகதி உறுதிப்படுத்தப்பட்டார்.

இந்நிலையில் ஒமைக்ரோன் திரிபு குறித்த அறிவியல் ரீதியில் உறுதிப்படுத்தப்பட்ட முழுமையான தகவல்கள் இதுவரை வெளியாகாதபோதும் மக்கள் பூஸ்டர் உட்பட தங்களுக்குரிய தடுப்பூசிகளைத் தவறாது பெற்றுக்கொள்வது அவசியம் என இலங்கை சுகாதார மேம்பாட்டுப் பணியகம் வலியுறுத்தியுள்ளது.

இதேவேளை, தற்போது வைத்தியசாலைகளில் போதிய இடவசதி மற்றும் ஏனைய வசதிகள் இருப்பதால் வயது உள்ளிட்ட காரணிகளை கருத்திற்கொண்டு அறிகுறியற்ற கோவிட்-19 நோயாளிகளையும் கூட வைத்தியசாலைகளில் அனுமதிப்பதில் எவ்வித தடையும் இல்லை என சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

# தண்டப்பணம் அறவிடும் முறையை தொழில்நுட்பமயமாக்க நடவடிக்கை

## பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் தகவல்

கொழும்பு, டிசெ. 10

வாகனங்கள் தொடர்பான செயல்பாடுகள் மற்றும் தண்டப்பணம் அறவிடும் செயற்பாடுகளை தொழில்நுட்ப மயப்படுத்த நடவடிக்கை மேற்கொண்டுள்ளதாக பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் சரத் வீரசேகர தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

அநேகமான சந்தர்ப்பங்களில் தண்டப்பணம் செலுத்தி தனது வாகன அனுமதிப்பத்திரத்தை பெற்றுக்கொள்ள இரண்டு அல்லது மூன்று நாட்கள் செல்கின்றன. அதனால், 'ஸ்பொட் பெய்ட்' என்ற புதிய முறையை அறிமுகப்படுத்தியுள்ளோம். இந்த முறையின் மூலம் தண்டப்பணம் அறவிடப்பட்ட சந்தர்ப்பத்திலேயே தமது கடன் அட்டை அல்லது வேறு முறையில் தண்டப்பணத்தை செலுத்தி விட்டு வாகன அனுமதிப்பத்திரங்களை உடனடியாக பெற்றுக் கொள்ளக் கூடிய புதிய முறையை உருவாக்கி வருகிறோம்.

அதேபோன்று, தவறு இழைக்கப்படும் சந்தர்ப்பத்தில் சாரதி அனுமதிப்பத்திரங்களை இரத்து செய்யும் நடைமுறையும் இருக்கிறது. கடந்த 10 வருடங்கள் வீதி விபத்துகளினால் 27,000 பேர் உயிரிழந்தனர். இந்த வருடத்தில் நேற்று முன்தினம் வரையான காலப்பகுதியில் மாத்திரம் வீதி விபத்துகளில் 2,000 பேர் வரையில் உயிரிழந்தனர்.

போக்குவரத்து விதிமுறைகளை மீறுதல், மதுபோதையில் வாகனம் செலுத்துதல், போதைப்பொருட்களுடன் வாகனங்களை செலுத்துதல், அதிவேகமாக வாகனங்களில் பயணித்தல் போன்ற காரணங்களினால் இந்த விபத்துகள் இடம்பெறுகின்றன.

சாரதியொருவர் தவறு இழைக்கும்போது அவரது வாகனச் சாரதி அனுமதிப்பத்திரத்தை இரத்து செய்தால் ஓரளவு விபத்துகளை குறைத்துக் கொள்ள கூடியதாக இருக்கும்- என்றார். (அ)

# இந்துக்களின் மரபுரிமைகளை ஒருபோதும் அழிக்கமாட்டோம்

## சபையில் விதுர விக்கிரமநாயக்க உறுதி

கொழும்பு, டிசெ. 10

**இந்துக்களின் மரபுரிமைகளை அழிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை. இந்நாட்டிலுள்ள அனைத்து மதங்களினதும் தொல்லியல் பெறுமதிமிக்க அடையாளங்கள் பாதுக்காக்கப்படும் - என்று தேசிய மரபுரிமைகள், அருங்கலைகள் மற்றும் கிராமிய சிற்பக்கலைகள் மேம்பாட்டு அலுவல்கள் இராஜாங்க விதுர விக்கிரமநாயக்க தெரிவித்தார்.**



பாராளுமன்றத்தில் நேற்று வவுனியா ஆதிசிவன் கோவில் விவகாரம் தொடர்பில் சார்ள்ஸ் நிர்மலநாதன் எம்.பி. எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

குறித்த கோவில் விவகாரம் தொடர்பில் வழக்கு நடைபெற்று வருகின்றது. எனவே, நீதிமன்ற தீர்ப்பு வெளிவந்த பின்னரே வழிபாட்டுக்கு அனுமதிப்பதா அல்லது என்ன செய்வதென முடிவெடுக்கப்படும் எனவும் இராஜாங்க அமைச்சர் கூறினார்.

“இலங்கையில் ஆரம்ப கால கட்டத்தில் தமிழ் பௌத்தர்கள் வாழ்ந்துள்ளனர். வரலாற்று நூல்களில் இவ்விடயம் குறிப்பிடப்பட்டுள்ளது. எனவே, பௌத்த அடையாளங்களை வைத்துக்கொண்டு, இது சிங்களவர்களுக்குரியது என ஆக்கிரமிப்பு செய்யக்கூடாதென” சார்ள்ஸ் நிர்மலநாதன் எம்.பி. சுட்டிக்காட்டினார்.

(அ)

# ஒமைக்ரோன் திரிபு வேகமாக பரவாது!



கொழும்பு, டிசெ. 10

ஒமைக்ரோன் வகை திரிபு இலங்கையிலும் பிற நாடுகளிலும் வேகமாக பரவாது என ஸ்ரீஜெயவர்த்தனபுர பல்கலைக்கழகத்தின் நோயெதிர்ப்பு மற்றும் மூலக்கூறு மருத்துவப் பிரிவின் பணிப்பாளரும் மருத்துவ நிபுணருமான சந்திம ஜீவந்தர தெரிவித்தார்.

தனது டுவிட்டர் தளத்தில் இதைப் பதிவிட்டுள்ளார்.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

ஒமைக்ரோன் வகை திரிபு இலங்கையிலும் பிற நாடுகளிலும் வேகமாக பரவாது. ஒமைக்ரோன் கோவிட் வகை குறித்து தென்னாபிரிக்க விஞ்ஞானிகள் குழு நடத்திய சோதனையில் இந்த தகவல் வெளியாகியுள்ளது.

ஒமைக்ரோன் வைரஸ் தடுப்பு மருந்துகளுக்கு பதிலளிக்கவில்லை என்றாலும், பூஸ்டர் தடுப்பூசியிலிருந்து பாதுகாப்பு பெறுவதற்கான வாய்ப்பு இருப்பதாக ஆய்வில் தெரியவந்துள்ளது.

எனினும், இந்த வைரஸ் மாறுபாடு பற்றி ஒரு திட்டவட்டமான முடிவுக்கு வரவில்லை. இது தொடர்பான தரவுகளைப் படிக்க அதிக நேரம் தேவைப்படுகிறது என்று பதிவிட்டுள்ளார். (அ)

# கொரோனா நிலைமை தீவிரம் அடையலாம்!

## சுகாதாரப் பிரிவு எச்சரிக்கை

கொழும்பு, டிசெ. 10

எமது நாட்டில் கொரோனா நோய் நிலைமை நிரந்தர நிலைமையை அடைந்துள்ளது. கொரோனா நோயாளர்களின் எண்ணிக்கையில் பெரும் அதிகரிப்பு ஏற்படுவதாகவும் தெரியவில்லை, வீழ்ச்சியடைவதாகவும் தெரியவில்லை. இருந்தபோதிலும், நாளாந்தம் 500 அல்லது 700 பேர் வரை கொரோனா நோயாளர்களாக அடையாளம் காணப்படுவதாக சுகாதாரப் பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

இவ்வாறு நோயாளர்கள் நாளொன்றுக்கு 500-700 பேர் வரை சமூகத்தில் நடமாடுவதன் மூலம் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் கொரோனா நோய்நிலைமை அதிரிப்பதற்கான வாய்ப்புகள் அதிகம் இருப்பதாக லேடி றிஜ்வே சிறுவர் வைத்திய சாலையின் பணிப்பாளர் மருத்துவர் ஜீ.விஜேசூரிய தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்-

மக்களின் செயற்பாடுகளின் அடிப்படையிலேயே இந்த நிலைமை தங்கியுள்ளது. அதேபோன்று, ஒமைக்ரோன் என்ற புதிய திரிபு தொடர்பில் கவனம் செலுத்தும்போது, எமது நாட்டிலும் ஒருவர் அடையாளம் காணப்பட்டுள்ளார். அவருடன் தொடர்பில் இருந்தவர்கள் தொடர்பிலும் அவதானம் செலுத்தப்படுகின்றது.

ஆகவே, இந்த புதிய திரிபு எமது நாட்டிலும் பரவலடைவதற்கு அதிக வாய்ப்புகள் இருக்கின்றன. - என்றார். (அ)

# யாழ். மாநகர சபையின் பட்ஜெட் ஏகமனதாக அங்கீகரிக்கப்படும்

## முதல்வர் மணிவண்ணன் நம்பிக்கை

யாழ்ப்பாணம், டிசெ. 10

வரவு-செலவுத்திட்டம் யாழ்.மாநகர சபை உறுப்பினர்களால் ஏகமனதாக அங்கீகரிக்கப்படும் என்ற நம்பிக்கை தனக்கு இருக்கின்றதென யாழ் மாநகர சபை முதல்வர் விஸ்வலிங்கம் மணிவண்ணன் தெரிவித்தார்.




நாயன்மார்கட்டு குளப்புனரமைப்புப் பணிகள் நேற்று யாழ். மாநகர முதல்வர் தலைமையில் ஆரம்பித்து வைக்கப்பட்டன. இதன் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இதனை கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

வரவு-செலவுத் திட்ட தயாரிப்பின்போது அனைத்து உறுப்பினர்களுடனும் கலந்து பேசி அவர்களின் கோரிக்கைகளையும் உள்ளடக்கியே தயாரித்து இருக்கின்றோம். ஆகவே அவர்களின் கோரிக்கைகளை உள்ளடக்கிய வரவு-செலவுத் திட்டத்தை அவர்களே தோற்கடிப்பார்கள் என்று நான் நினைக்கவில்லை.

யாழ்.மாநகர சபையில் அங்கம் வகிக்கும் அனைத்துக் கட்சிகளின் தலைமைகளிடமும் மாநகர சபையில் முன்வைக்கப்படும் வரவு - செலவுத் திட்டத்தை ஆதரிக்கவேண்டும் என நான் பகிரங்கமாகவும் அன்பாகவும் ஒரு கோரிக்கையை விடுக்கின்றேன்.

மாநகர சபை வரவு - செலவு திட்டத்தை தோற்கடிக்கும் முகமாக கட்சித்தலைவர்கள் செயற்படமாட்டார்கள் என நான் நினைக்கின்றேன் - என்றார்.

(அ-03)

# இலங்கையால் இனி ஒருபோதும் முன்னேற முடியாது

## ஐக்கிய தேசியக் கட்சி கூறுகிறது

கொழும்பு, டிசெ. 10

இலங்கைமீது உலக நாடுகள் பலவும் சினம் கொண்டுள்ளன. தற்போது சீனா பகையாகி வருவதுடன் இந்தியாவும் ஆழமான நட்பில் இல்லை என்றே வெளிப்படுகின்றது. கிணற்றுத் தவளை போன்ற பொருளாதாரத்தில் ஒருபோதும் முன்னேற முடியாது என ஐக்கிய தேசிய கட்சியின் பிரதித் தலைவர் ருவான் விஜயவர்த்தன தெரிவித்தார்.

கட்சி தலைமையகமான சிறிகொத்தாவில் கட்சி செயல்பாட்டாளர்களுடன் இடம்பெற்ற சந்திப்பின்போதே அவர் இவ்வாறு கேள்வியெழுப்பியுள்ளார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில்-

அரசாங்கத்தினால் நாட்டு மக்கள் பாரிய கடன் சுமைக்குள் தள்ளப்பட்டுள்ளனர். அடுத்த ஆண்டில் இந்த கடன் சுமையால் நாட்டினதும், மக்களினதும் பொருளாதாரம் பாரியளவில் வீழ்ச்சியடையும். ஐ.தே.க. ஆட்சியின் மூன்று வேளையும் உணவு உண்ட மக்கள் தற்போதைய ஆட்சியில் ஒருவேளை உணவை உண்பதற்கும் சிரமப்படுகின்றனர்.

நல்லாட்சி அரசாங்கத்தின் ஆட்சியில் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் உண்பதற்கு உணவு இல்லை என்று மக்கள் எதிர்க்கட்சிகளிடம் குற்றம் சுமத்தியதில்லை. எனினும் தற்போது நாளாந்தம் மக்கள் இந்த குற்றச்சாட்டை முன்வைக்கின்றனர்.

மக்கள் தமது கருத்துக்களை சுதந்திரமாக வெளிப்படுத்தும் வாய்ப்பை வழங்கியதால் நல்லாட்சி அரசாங்கத்தை அவர்கள் கோழைகள் என்று வரையறுத்தனர். எனினும் ஜனநாயகத்தை உறுதிப்படுத்தும் அரசாகவே நாம் செயற்பட்டோம்.

பலருக்கு அது கோழைத்தனமாகத் தோன்றியது. அவ்வாறு எம்மை கோழைகள் என்று நினைத்தவர்களும் இப்போது இந்த அரசின் கொடுமையை பார்த்துக் கொண்டிருக்கின்றனர். எமது ஆட்சி காலத்தில் அரசாங்கத்தை சமூக வலைத் தளங்களில் விமர்சிக்க வாய்ப்பளிக்கப்பட்டது. இன்று அந்த வாய்ப்பும் இல்லை.

அரசாங்கத்துக்கு எதிராக சமூக வலைத்தளங்களில் கருத்துக்களை வெளியிடும் இளைஞர்கள் குற்ற விசாரணைப் பிரிவுக்கு அழைக்கப்படுகின்றனர். அவ்வாறில்லை என்றால் குறித்த சமூக வலைத்தள கணக்குகள் முடக்கப்படுகின்றன. பொலிஸார் ஊடாக மக்களின் கருத்து சுதந்திரம் முடக்கப்படுகிறது.

குரல் கொடுக்கக் கூடியவர்களை பாராளுமன்றம் செல்ல மக்கள் அனுமதிக்கவில்லை. அவர்கள் செய்த செயலின் தீவிரத்தை மக்கள் இப்போது புரிந்து கொண்டுள்ளனர்.

இந்த அரசாங்கம் முன்னோக்கிச் செல்லப் போவதில்லை. அரசாங்கத்தின் முட்டாள்தனமான செயல்பாடுகளால் பொதுமக்களே பாதிக்கப்பட்டுள்ளனர். பெருந்தெருக்களை அபிவிருத்தி செய்வதற்கு பெருமளவில் நிதியை ஒதுக்கும் இந்த அரசாங்கம் தேவையான இடங்களில் பாலங்களை நிர்மாணித்துக் கொடுப்பதில்லை. இதன் காரணமாகவே கிண்ணியாவில் அந்த அசம்பாவிதம் ஏற்பட்டது.

நிதி அமைச்சர் இந்தியாவுக்கு விஜயம் செய்த போதிலும் , அந்நாட்டிலிருந்து எவ்வித உதவியும் கிடைக்கப் பெறவில்லை என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. அரசாங்கத்திடம் போதியளவு நிதி கையிருப்பில் இல்லை என்பதால் நாட்டை முன்னோக்கி கொண்டு செல்ல முடியாது. சமையல் எரிவாயு சிலிண்டர்களை வீடுகளில் வைத்திருப்பவர்கள் வெடிகுண்டை வீட்டில் வைத்திருப்பதைப் போல அச்சத்துடனேயே இருக்கின்றனர்.

இலங்கையில் மேற்கொண்டிருந்த முதலீட்டினை சீனா தற்போது மாலைதீவுக்கு வழங்கியுள்ளது. மறுபுறம் இந்தியாவும் எவ்வித ஒத்துழைப்புக்களையும் வழங்கவில்லை.

இதன் காரணமாகவே ஐ.தே.க. தலைவர் ரணில் விக்கிரமசிங்க , நிதி அமைச்சரின் இந்திய விஜயம் தொடர்பில் பாராளுமன்றத்தில் கேள்வியெழுப்பினார். எனினும் அதற்கு அரசாங்கத்திடமிருந்து எந்த பதிலும் இல்லை.

நாட்டில் பாரிய டொலர் தட்டுப்பாடு நிலவுகிறது. சர்வதேச ஒத்துழைப்புகள் பூச்சியமான நிலையில் உள்ளது. இலங்கையின் நிலையற்ற செயற்பாடுகளினால் சீனாவும் சினம் கொண்டுள்ளது. மறுபுறம் இந்தியா மற்றும் ஐரோப்பிய நாடுகளும் இலங்கை மீது சினம் கொண்டுள்ளன - என்றார்.

(அ)

# சர்வதேச மனித உரிமைகள் தினம்; தமிழர் எதிர்கொள்ளும் நெருக்கடி!




**க.மேனன்**

அனைத்துலக மனித உரிமைகள் நாள் இன்று அனுஷ்டிக்கப்படுகின்றது. 1948 ஆம் ஆண்டு டிசெம்பர் 10ஆம் நாள் உலக மனித உரிமைப் பேரறிக்கை என உலக மக்கள் அனைவருக்குமான வாழ்வுரிமைகளை ஐக்கிய நாடுகள் அவை பிரகடனப்படுத்தியது. அதனைக் குறிக்கும் வகையில் ஆண்டுதோறும் டிசெம்பர் 10ஆம் நாள் உலக நாடுகள் முடுவதும் 'மனித உரிமைகள் நாள்' கொண்டாடப்படுகிறது.

இன்றைய காலப்பகுதியில் அனைத்துலக மனித உரிமை நாள் என்பது தமிழ் மக்களைப் பொறுத்தவரை மிக முக்கியத்துவம் வாய்ந்த ஒன்றாக கருதப்பட வேண்டியுள்ளது. அதற்கு முன்பாக இந்த அனைத்துலக மனித உரிமைகள் நாளை அனுஷ்டிப்பதற்கு மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் குறித்து ஆராய்வது பொருத்தமாகும்.

1945ஆம் ஆண்டு ஐக்கிய நாடுகள் சபை உருவான அடுத்தாண்டு, மாசி மாதம் 16ஆம் திகதி ஐக்கிய நாடுகள் 'மனித உரிமை ஆணைக் குழு' உதயமானது. 53 நாடுகளை அங்கமாகக் கொண்ட இக் குழு, முதல் வேலையாக 'அனைத்துலக மனித உரிமைப் பிரகடனத்தை உருவாக்குவதற்கு அமெரிக்க ஜனாதிபதியின் மனைவி எலினா ரூஸ்வெல்ட் தலைமையில் ஒரு குழுவை அமைத்தது.

இக்குழுவின் சிபாரிசின் படி 30 பிரிவுகளின் கீழ் மனித உரிமைகள் இனங்காணப்பட்டு சர்வதே மனித உரிமைகள் பிரகடனம் ஐக்கிய நாடுகள் சபையில் சமர்ப்பிக்கப்பட்டது. 1948ஆம் ஆண்டு, டிசெம்பர் 10ஆம் திகதி பாரிஸில் நடைபெற்ற ஐக்கிய நாடுகள் பொதுச் சபையினால் இந்தப் பிரகடனத்திற்கு 58 நாடுகள் அங்கீகாரம் வழங்கியது.

டிசெம்பர் 10 என்ற இதே நாளை 1950ஆம் ஆண்டிலிருந்து 'அனைத்துலக மனித உரிமைகள் நாளாக' அறிவித்து கொண்டாடப்பட்டு வருகிறது. உலகத்தில் பிறக்கும் எல்லா மனிதர்களும் சமமான உரிமைகளும், அடிப்படைச் சுதந்திரங்களும் கொண்டிருக்கின்றனர் என்ற உண்மையை இக்காலப்பகுதியில் சர்வதேசம் உரத்து குரல் எழுப்பவேண்டிய நிலையிருக்கின்றது.

1. 'அனைத்துலக மனித உரிமைகள் சாசனம்' 30 உறுப்புரைகளைக் கொண்டது. சமத்துவ உரிமை - சகல மனிதர்களும் சுதந்திரமாக பிறக்கின்றனர். அவர்கள் பெறுமானத்திலும், உரிமைகளிலும் சமமானவர்கள், அவர்கள் நியாயத்தையும், மனச்சாட்சியையும் இயற்பண்பாகப் பெற்றவர்கள்.

2. ஏற்றத்தாழ்வுகள் காட்டப்படாமல் இருப்பதற்கான உரிமை - இனம், நிறம், பால், மொழி, மதம், அரசியல் மற்றும் தேசிய அல்லது சமூகம், பிறப்பு அல்லது பிற அந்தஸ்துகளால் வேறுபடுத்த முடியாமல் உலகில் உள்ள மனிதர்கள் எல்லோரும் சம உரிமை பெற்றவர்கள்.

3. சுதந்திரமாகவும், பாதுகாப்பாகவும் வாழும் உரிமை அனைவருக்கும் உண்டு.

4. யாரையும் அடிமையாக நடத்த எவருக்கும் உரிமை இல்லை.

5. சித்திரவதைக்கு, மனிதத் தன்மையற்ற தாக்குதல்களுக்கும் உள்ளாகாமல் இருப்பதற்கான சுதந்திரம்.

6. சட்டத்தின் முன் அனைவருக்கும் சம உரிமை.

7. பாரபட்சம் எதுவுமின்றி சட்டத்தின் பாதுகாப்புக்கும் எல்லோரும் உரித்தானவர்கள்.

8. ஒருவரின் உரிமை மதிக்கப்படாத போது சட்ட உதவியை நாடும் உரிமை.

9. சட்டத்துக்கு புறம்பாக ஒருவரை காவலில் வைக்கவோ, நாடு கடத்தவோ யாருக்கும் உரிமை இல்லை.

10. நீதியான, பகிரங்கமான விசாரணைக்கான உரிமை.

11. குற்றஞ்சாட்டப்படுவோர், குற்றம் நிரூபிக்கப்படும் வரை நிரபராதி என நிரூபிக்க வாய்ப்பு வழங்கும் உரிமை.

12. தனிப்பட்ட அல்லது அந்தரங்க விஷயத்தில் எவரும் தலையிடாமல் இருப்பதற்கான சுதந்திரம்.

13. ஒவ்வொரு நாட்டிற்குள்ளும் சுதந்திரமாக நடமாடுவதற்கும், நாட்டை விட்டு வெளியேறவும், திரும்பி வரவும் உரிமை.

14. ஆபத்து காலத்தில் பிற நாட்டில் தஞ்சம் கேட்க உரிமை உண்டு.

15. ஒவ்வொரு பிரஜைக்கும் தங்கள் விருப்பத்திற்கு ஏற்ற தேசிய இனத்தை மாற்றிக்கொள்ள உரிமை.

16. எந்த ஆணும், பெண்ணும் விரும்பினால், திருமணம் செய்து கொண்டு பாதுகாப்புடன் குடும்பம் நடத்துவதற்கான உரிமை. சமுதாயத்தாலும், அரசாலும் இது பாதுகாக்கப்பட வேண்டும்.



17. சொத்து வைத்துக்கொள்ளும் உரிமை. தனியாகவும், கூட்டாகவும் ஆதனத்தைச் சொந்தமாக வைத்திருப்பதற்கு ஒவ்வொருவருக்கும் உரிமையுண்டு.

18. சிந்தனைச் சுதந்திரம், மனச்சாட்சிச் சுதந்திரம், மதச் சுதந்திரம் ஒவ்வொருவருக்கும் உரிமையுண்டு.

19. கருத்துச் சுதந்திரம், பேச்சு சுதந்திரம் எவருக்கும் உண்டு. எவ்வழிவகைகள் மூலமும், எல்லைகள் இன்றி தகவலையும் கருத்துக்களையும் நாடுவதற்கும், பெறுவதற்கும் பரப்புவதற்குமான சுதந்திரம்.

20. எந்த ஒரு கூட்டத்திலும் கலந்து கொள்ள, சங்கத்தில் உறுப்பினராக யாருக்கும் உரிமை உண்டு

21. அரசியல் உரிமை - அரசாங்கத்தில், சுதந்திரமான தேர்தலில் பங்குபெறவும், பொதுச் சேவைகளைப் பெற்றுக் கொள்வதற்குமான உரிமை. ஒவ்வொருவருக்கும் தத்தம் நாட்டிலுள்ள அரசாங்க சேவையில் சமமான முறையில் அமர்த்தப்படுவதற்கு உரிமையுண்டு.

இவ்வாறு 30சரத்துகள் மனித உரிமைகள் மேம்பாட்டு விடயத்திற்காக அனைத்துலக மனித உரிமை பிரகடனமாக பிரகடனப்படுத்தப்பட்டது. இது தொடர்பாக பல்வேறு நடவடிக்கைகளை ஐ.நாவின் மனித உரிமைகள் பேரவை மேற்கொண்டது. இந்த பேரவையானது 1979ஆம் ஆண்டிலிருந்து மனித உரிமைகள் தொடர்பில் கண்காணிப்பதற்கான நடவடிக்கையினை முன்னெடுத்தது.

இலங்கை தொடர்பிலும் ஐ.நா மனித உரிமைகள் பேரவையானது தொடர்ச்சியான கண்காணிப்பை மேற்கொண்டு வந்தது. இலங்கையை பொறுத்தவரை ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமை பேரவையின் உருவாக்கத்திற்காக கொண்டுவரப்பட்ட எந்த சரத்தினையும் ஏற்றுக்கொண்டு நடைமுறைப்படுத்தியதாக இல்லை.

> **இலங்கை தொடர்பிலும் ஐ.நா. மனித உரிமைகள் பேரவையானது தொடர்ச்சியான கண்காணிப்பை மேற்கொண்டுவந்தது. ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமை பேரவையில் கொண்டவரப்பட்ட எந்த சரத்தினையும் இலங்கை ஏற்றுக்கொண்டு நடைமுறைப்படுத்தியதாக இல்லை.**

குறிப்பாக இலங்கையில் சிறுபான்மை சமூகத்தின் மீது தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்டு வந்த மனித உரிமை மீறல்களை அனைத்துலக சமூகம் முறை யாக கையாளாத காரணத்தினாலேயே இந்த நாட்டில் தமிழ் மக்கள் பாரிய இழப்புகளை எதிர்கொண்டதுடன், இன முரண்பாடுகள் உச்சத்தினை தொட்டது.

தமிழர்களுக்கு ஆரம்ப காலம் தொட்டு இழைக்கப்பட்ட அநீதிகளுக்கு நீதி பெற்றுக் கொடுக்கப்பட்டிருக்குமானால், இலங்கையில் தமிழர்கள் நிம்மதியாகவும் சகல வளங்களைக் கொண்டவர்களாகவும் வாழும் சூழ்நிலையே ஏற்படுத்தப்பட்டிருக்கும். ஆனால் உலக நாடுகளின் சொந்த தேவைகளுக்காக சிறுபான்மை சமூகம் பலிக்கடாவாக்கப்பட்டுள்ளார்கள்.

இவ்வாறான நிலையில் கடந்த 30 வருட கால யுத்தம், அந்த யுத்தம் மௌனிக்கப்பட்டதற்கு பின்னரான சூழ்நிலைகளை ஐக்கிய நாடுகள் மனித உரிமை பேரவை முறையாக ஆய்வுக்கு உட்படுத்தியிருந்தாலும் இன்று தமிழர்கள் நிம்மதியாக வாழும் சூழ்நிலை ஏற்பட்டிருக்கும். ஆனால் அந்த சூழ்நிலையினை ஏற்படுத்துவதற்கு அனைத்துலக சமூகம் தவறிவருவதையே இந்த மனித உரிமைகள் நாளில் தமிழர்கள் மீதான இலங்கை அரசியல் அடக்குமுறைகள் வெளிப்படுத்தி வருகின்றது.

இலங்கைத் தீவைப் பொறுத்தவரை, இங்குள்ள சட்டத்துறையாக இருக்கலாம், மனித உரிமை தொடர்பான செயற்பாட்டு ரீதியான அமைப்பாக இருக்கலாம் இவர்களின் செயற்பாடுகள் என்பது இனரீதியான பாகுபாடுகளைக் கொண்டதாகவே இருந்து வருகின்றது.

வட,கிழக்கில் தமிழர்கள் தமக்கான உரிமையை வெளிப்படுத்துவதற்கும் அதனை பிரயோகிப்பதற்குமான சுதந்திரம் என்பது முற்றுமுழுதாக மறுதலிக்கப்பட்டுள்ளது.

தமது உறவுகளை நினைவுகூர முடியாத வகையில் தமிழர்கள் அடக்குமுறைக்கு உட்படுத்தப்படுவதை எந்த அனைத்துலக நாடுகளும் அனைத்துலக மனித உரிமை அமைப்புகளும் தட்டிக் கேட்பதற்கு வக்கற்றவர்களாகவே இருக்கின்றனர். இலங்கை அரசாங்கத்திற்கு எதிராக போராடி கொலை செய்யப்பட்ட ஜே.வி.பி. போன்ற அமைப்புகளின் உறுப்பினர்களை நினைவுகூருவதற்கு அனுமதியளிக்கும் அரசாங்கம், இதே நாட்டில் ஓர் இனத்தின் உரிமைக்காக போராடியவர்களை பயங்கரவாதிகள் என முத்திரை பதித்து அவர்களை நினைவுகூரத் தடுக்கும் செயற்பாடு என்பது இந்த முழு உலகிலும் காணப்படும் மனித உரிமை மீறல்களில் மிக மோசமான மனித உரிமை மீறல்களாக நோக்கப்பட வேண்டியுள்ளது.

இலங்கையைப் பொறுத்தவரை, வட, கிழக்கில் உள்ள தமிழர்களை அடக்கியொடுக்குவதற்காக அனைத்து வகையான மனித உரிமை மீறல்களையும் இலங்கை அரசாங்கம் செய்தே வருகின்றது. வடகிழக்கு தமிழர்களின் தாயகம் என்பதை அந்த சமூகம் அங்கீகரித்து நிற்கும்போது அதனை இன்னுமொரு சமூகம் நிராகரித்து அவர்களை அடக்கியொடுக்குவதை இன்று அனைத்துலகத்தில் மனித உரிமைகள் பற்றி வாய்கிழியப் பேசும் நாடுகள் கவனத்தில் கொள்ளாத நிலையே உள்ளது.

காணாமல்ஆக்கப்பட்டவர்களின் நிலைமை, யுத்த காலத்தில் படுகொலை செய்யப் பட்டவர்கள் தொடர்பான விசாரணை களை அனைத்துலக சமூகம் இலங்கையி டமே ஒப்படைக்க முனைவதும் சர்வதேச சமூகத்தின் மனித உரிமைகள் தொடர்பான நிலைப்பாட்டினை கேள்விக்கு உட்படுத்தியுள்ளது.

ஒரு தனிமனிதன், ஒரு சமூகம், ஓர் இனம் பாதிக்கப்படும்போது அதிலிருந்து அவர்களை பாதுகாப்பதற்காக உருவாக்கப்பட்ட அனைத்துலக மனித உரிமை பேரவையானது, அதன் செயல்பாடுகளை முறையாக முன்னெடுக்காமையே தமிழர்கள் போன்ற மக்கள் அடக்கியொடுக்கப்படுவதற்கான பிரதான காரணமாக அமைகின்றது.

கிழக்கு மாகாணத்தில் தமிழ் மக்கள் மீது பல்வேறு மனித உரிமைகளை மீறிய செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. நில அபகரிப்பு, தனிநபர் உரிமைகளை மீறும் செயல்பாடுகள் தொடர்ச்சியாக முன்னெடுக்கப்படுகின்றன. குறிப்பாக மனித உரிமை மீறல்களை மேற்கொள்வதற்காக நீதிமன்ற கட்டளைச் சட்டங்களை இலகுவாகப் பயன்படுத்தும் செயற்பாடுகள் என்பது தொடர்ச்சியாக முன்னெடுக்கப்படுகின்றன.

குறிப்பாக வட,கிழக்கு மாகாணத்தில் முன்னெடுக்கப்படும் மனித உரிமை மீறல் குறித்தான செயற்பாடுகளை தொடர்ச்சியாக அறிக்கையிடுவதற்கும் அவற்றினை முன்கொண்டு செல்வதற்குமான செயற்றிட்டங்கள் முன்னெடுக்கப்பட வேண்டும்.

இவ்வாறான முன்னெடுப்புகளே வட,கிழக்கு மக்கள் தினமும் பேரினவாத சக்திகளினால் முன்னெடுக்கப்படும் அடக்குமுறைகளும் மனித உரிமைகள் மீறல் தொடர்பான செயல்பாடுகளும் அனைத்துலகத்தின் கவனத்தினை மேலும் பெற்றுக் கொள்வதற்கான சூழ்நிலை ஏற்படும். •

# ஒமைக்ரோன் எவ்வளவு வேகமாக பரவும்?




ஒமைக்ரோன் குறித்து மக்களிடையே அதிகமாக இரண்டு கேள்விகள் எழுகின்றன.

அவை,

ஒமைக்ரோன் எவ்வளவு வேகமாகப் பரவுகிறது?

எவ்வளவு அதிகமாக நோயுறச் செய்கிறது?

அவற்றைப் புரிந்துகொண்டால், ஒமைக்ரோன் அச்சுறுத்தலையும் சவாலையும் புரிந்துகொள்ள முடியும்.

உலகம் முழுவதுமுள்ள ஆய்வாளர்கள் இப்போது அந்தக் கேள்விகளுக்குப் பதிலளிக்கத் தொடங்கியுள்ளார்கள்.

நோய் எதிர்ப்பாற்றல் மிகவும் முக்கியமானது. பெருந்தொற்றின் தொடக்கத்திற்கே மீண்டும் நம்மை அழைத்துச் செல்ல ஒமைக்ரோன் வரவில்லை. ஆனால், தற்போது ஒரு குழப்பமான சூழலுக்கு ஒமைக்ரோன் வித்திடுகிறது. ஒமைக்ரோன் குறித்த உறுதியான பதில்கள் கிடைக்க இன்னும் சில வாரங்கள் ஆகலாம்.

**எவ்வளவு வேகமாகப் பரவுகிறது?**

ஒமைக்ரோன் மிகவும் வேகமாகவே பரவுவதாகத் தெரிகிறது.

பெரும்பாலானவர்கள் தடுப்பூசி செலுத்திக்கொண்ட அல்லது முந்தைய பெரிய அலையின் காரணமாக, நோய் எதிர்ப்பாற்றல் அதிகமாகியுள்ள இடங்களிலும்கூட, இது பாதிக்கிறது.

தென்னாபிரிக்கா அதன் டெல்டா அலையின் முடிவை ஒரு மாதத்திற்கு முன்னர்தான் அடைந்தது. நாளொன்றுக்குச் சராசரியாக 300 கொரோனா நோயாளிகள் என்ற அளவுக்கு பாதிப்பின் தீவிரம் குறைந்தது. ஆனால், தற்போது அதுவே, நாளொன்றுக்கு 10,000 ஆக அதிகரித்துள்ளது. ஒமைக்ரோன் நான்காவது அலையை உண்டாக்கக் கூடிய உந்து சக்தியாக இருக்கிறது.

ஆராய்ச்சியாளர்கள், ஒமைக்ரோனுக்கான கோவிட் சோதனைகளில் விட்டுச் செல்லும் அசாதாரண தடங்களின் வழியே கண்காணித்தார்கள். இது எஸ்-ஜீன் டிராப் அவுட் (S-gene dropout) என அழைக்கப்படுகிறது. கடந்த நவம்பரின் பிற்பகுதியில் கிடைத்த பரிசோதனை முடிவுகளில், 0.1 வீதம் மட்டுமே இந்தத் தடம் இருந்தது. ஆனால், இப்போது 5 க்கும் அதிகமாக இருக்கிறது. இது ஒரு நாளைக்குச் சுமார் 2,500 பேர் நோய்த்தொற்றுகளை ஏற்படுத்தலாம் என்று கணிக்கப்பட்டுள்ளது.

ஒமைக்ரோன் பரவல் வேகத்தை அளவிடுவதில், அதன் மாறுபாட்ட புள்ளி விவரங்களைக் கண்டறிய, இது துல்லியமான வழியில்லை. ஆனால், நச்சுயிரி மாதிரிகளின் முழு மரபணு பகுப்பாய்வுக்காக காத்திருக்காமல் விரைவான மதிப்பீட்டை உருவாக்க இது உதவுகிறது.

ஒமைக்ரோன் பரவல், இன்னமும் நிச்சயமற்ற நிலையிலேயே உள்ளதால், ஒமைக்ரொன் பாதிப்புகள் பிரிட்டனில் ஒவ்வொரு மூன்று நாட்களுக்கும் இரண்டு மடங்காக இருக்கலாம் என்று அந்த ஆரம்பக்கட்ட கணக்கீடுகள் கூறுகின்றன.

இது இங்கிலாந்திலுள்ள டெல்டா திரிபைவிட வேகமானது. 2020ஆம் ஆண்டின் முற்பகுதியில் கோவிட்டுக்கு எதிராக நமக்கு நோய் எதிர்ப்பாற்றல் இல்லாதபோது வேகமாகப் பரவிய அசல் கொரோனா நச்சுயிரியோடு இதை ஒப்பிடலாம்.

நச்சுயிரியால் பாதிக்கப்படுவதற்கும் அதை வேறு ஒருவருக்குப் பரப்புவதற்கும் இடையில் மிகவும் குறுகிய இடைவெளி இருக்கலாம். அதிவேக வளர்ச்சி ஆற்றலின் காரணமாக, சிறிய எண்ணிக்கை விரைவில் பெரியளவில் பெருகும். ஒவ்வொரு மூன்று நாட்களுக்கும் நோயாளிகளின் எண்ணிக்கை இரட்டிப்பாகும்போது, மாத இறுதிக்குள் ஒரு நாளைக்குச் சுமார் 2,500 நோயாளிகள் என்பது 10,000-ஐத் தாண்டும்.

**என்னையும் ஒமைக்ரோன் தாக்குமா? நோய்வாய்ப்படுவேனா?**

ஆய்வாளர்கள், முதன்முதலில் ஒமைக்ரோனிலுள்ள மரபணுப் பிறழ்வுகளின் பட்டியலைப் பார்த்ததிலிருந்து இருக்கும் கவலை என்னவெனில், அது தடுப்பூசிகளின் செயல்திறனைக் குறைக்கிறது. தடுப்பூசிகளை உருவாக்கப் பயன்படுத்திய அசல் கொரோனா நச்சுயிரிடமிருந்து இது மிகவும் வேறுபட்டுள்ளது, என்று கண்டறிந்தனர்.

நோய் எதிர்ப்பொருட்களைப் பயன்படுத்தும் சோதனையிலிருந்து நம்முடைய நோய் எதிர்ப்பாற்றல் எவ்வாறு நிலைத்து நிற்கும் என்பது பற்றிய முதல் கட்ட தரவு இப்போது உள்ளது. இவை கொரோனா நச்சுயிரியின் மேற்பரப்பில் ஒட்டிக் கொள்கின்றன. அப்படி ஒட்டிக் கொண்டு அணுக்களை அது பாதிக்காமல் தடுக்கிறது.

> ஒமைக்ரோன் மிகவும் வேகமாக பரவுவதாகத் தெரிகிறது. பெரும்பாலானவர்கள் தடுப்பூசி செலுத்திக்கொண்ட அல்லது முந்தைய பெரிய அலையின் காரணமாக, நோய் எதிர்ப்பாற்றல் அதிகமாகியுள்ள இடங்களிலும்கூட, இது பாதிக்கிறது.

இரண்டு முறை தடுப்பூசி போட்டவர்களின் உடலிலுள்ள நோய் எதிர்ப்பொருட்கள், நச்சுயிரியின் திறனை 20 முதல் 40 மடங்கு குறைப்பதாக இது வரையிலான ஆய்வுகள் பரிந்துரைக்கின்றன.

ஆய்வுகூடத்தில் நடைபெறும் ஆய்வுகளின் முடிவுகள் நடைமுறையில் எந்தளவுக்குச் சாத்தியப்படும் என்பதை எளிதில் சொல்லிவிட முடியாது.

ஆனால், குறைவான பாதுகாப்பையே நல்கும் நோய் எதிர்ப்பொருட்களால், ஒமைக்ரோன் அதிகம் பரவும் ஆபத்தும் ஏற்பட்டது.

இந்த நேரத்தில்தான், ஒரு நற்செய்தி வந்தது. பைசர் - பயோஎன்டெக் தடுப்பூசியின் பரிசோதனைகளின் மூலம், மூன்றாவது டோஸ் நோய் எதிர்ப்பொருட்களின் அளவைப் பெருமளவில் அதிகரிப்பதைக் காட்டுகிறது. முந்தைய கோவிட் நச்சுயிரிக்கு எதிராக முந்தைய இரண்டு டோஸ்களும் செய்ததைப் போலவே, ஒமைக்ரோனுக்கு எதிராக மூன்றாவது டோஸ் செய்யும் என்று பரிசோதனை முடிவுகள் பரிந்துரைக்கின்றன.

எடின்பரோ பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த பேரா.எலினோர் ரிலே, “இது வரையிலான தரவுகள் உறுதியளிக்கிறது. பூஸ்டர் போட்டுக்கொள்வது கடுமையான நோய்த்தொற்றுக்கு எதிராக அதிகளவிலான பாதுகாப்பை வழங்க வேண்டும் என்று பரிசோதனை முடிவுகள் அறிவுறுத்துகின்றன,” என்று விவரிக்கிறார். ஒமிக்ரோன் தொற்று எவ்வளவு கடுமையானது என்பது குறித்து இன்னும் தெளிவான பதில்கள் இல்லை.

ஆனால், ஒருவர் இரண்டு டோஸ் தடுப்பூசிகளைப் போட்டிருந்தாலோ அல்லது கடந்த காலத்தில் தொற்று ஏற்பட்டிருந்தாலோகூட, இந்தத் தொற்றின் தொடக்கத்தில் அதை எதிர்த்துப் போராடிய உங்கள் நோய் எதிர்ப்பாற்றல் அமைப்பு இன்னும் சிறந்த நிலையிலிருக்கும்.

நோய் எதிர்ப்பொருட்கள் உடல் பாதுகாப்பின் முக்கியப் பகுதியாக விளங்குகிறது. மேலும், அவை பூஸ்டர் இல்லாமல் பாதிக்கப்பட்டிருப்பதாகத் தெரிகிறது.

ஜேம்ஸ் காலேகர்

ஆனால், அவரை பரந்த, சிக்கலான நோய் எதிர்ப்பு மண்டலத்தின் ஒரே யொரு கூறு மட்டும்தான்.

ஒருவர் தொற்றுக்கு ஆளான பிறகு, நோய் எதிர்ப்பொருட்களைவிட, டி - செல்கள் நச்சுயிரியை அதிகம் கவனிக்கின்றன. ஆகவே, அவை புதிய திரிபுகளிடமிருந்து எளிதில் தவிர்க்கப்படுகின்றன.

ஆனால், ஒமைக்ரோனால் ஏற்படும் நோய் எவ்வளவு கடுமையானது என்பதை முழுமையாகப் புரிந்துகொள்ள, யாரெல்லாம் அதற்குப் பாதிக்கப்பட்டு மருத்துவமனைக்குச் செல்கிறார்கள் என்பதைக் கண்காணிக்கவேண்டும்.

**ஒமைக்ரோனால் என்ன நடக்கலாம்?**

ஒமைக்ரோன் அலை உருவாவது, தடுப்பூசிகள் பெரும்பாண்மை மக்களைத் தீவிர நோய்வாய்ப்படுதலில் இருந்து தடுப்பது ஆகிய இரண்டுக்குமே சாத்தியக்கூறுகள் உள்ளன.

“நம்மில் பெரும்பாலோர்” முற்றிலும் நன்றாக இருந்தாலும்கூட, ”அனைவரும்” நன்றாக இல்லை என்பதுதான் பிரச்னை. நம்மில் சிலர் பலவீனமானவர்கள். சிலருக்கு தடுப்பூசிக்கு நன்கு செயலாற்றும் நோய் எதிர்ப்பாற்றல் அமைப்பு இல்லை. சிலருக்குத் தடுப்பூசி போடமுடியாது. சிலர் தடுப்பூசி போட வேண்டாம் என்று தேர்வு செய்துள்ளார்கள்.

டெல்டா திரிபு மற்றும் கோவிட் தொற்றுநோய்க்கு இன்னும் மருத்துவமனை பராமரிப்பு தேவைப்படும் நபர்களிடையே இதைப் பார்க்கிறோம்.

ஓர் அலை திடீரென, ஒரே நேரத்தில் தொடங்கினால், சிகிச்சை தேவைப்படுகிற இத்தகைய மக்கள் அனைவரையும் ஒரே நேரத்தில் கவனிக்க வெண்டிய சூழல் ஏற்படும்.

“இது அனைத்தையும் ஒன்றாக இணைக்கிறது,” என்கிறார் வார்விக் பல்கலைக்கழகத்தின் பேராசிரியர் மைக் கேல் டில்டெஸ்லி. ”ஆகவே, ஜனவரியில் இருந்ததைப் போன்ற ஒரு பெரிய அலை உருவாகும் வாய்ப்புள்ளது. ஒரு கட்டத்தில் அது மருத்துமனையில் அனுமதிக்கப்படுவோரின் எண்ணிக்கை அதிகரிப்பதற்கு வழிவகுக்கும்.”

ஆனால், இதுவரையிலான அனைத்து தரவுகளிலுமே இன்னமும் பெரியளவு நிச்சயமற்ற தன்மை இருப்பதாக அவர் எச்சரிக்கிறார்.

ஒமைக்ரோன் எவ்வளவு வேகமாகப் பரவுகிறது, எவ்வளவு தீவிரமானது அல்லது தடுப்பூசியின் செயல்பாட்டைத் தவிர்க்கிறது என்பதற்கான உலகளவில் ஏற்றுக்கொள்ளப்பட்ட தரவுகள் இல்லை. எனவே கணித மாதிரிகளில் எந்தத் தரவுகள் செருகப்படுகின்றன என்பதைப் பொறுத்து வரும் வாரங்களில் முற்றிலுமாக மாறுபட்ட பார்வையைப் பெறுவீர்கள்.



ஈழநாடு

# புலமைச் சிகரம்

## தரம் 5 புலமைப் பரிசில் மாணவர்களுக்கான வழிகாட்டி


மாதிரிப் பரீட்சை
வி னாத்தான்

நேரம் : 1 மணித்தியாலம்

கல்வி tv CHANNEL

58) **“பச்ச வளையல் தொட்டு ஏலேலோ மயில் ஏலேலோ பயிறுக்கப் போற பெண்ணே….. ”** எனும் பாடல் எவ்வகைப் பாடலாகும்?

1) மீனவப்பாடல் 2) வண்டிப்பாடல் 3) அரிவிவெட்டுப்பாடல்

59) 

இக் குறியீடானது காணப்படக் கூடியது?

1) உப்புப் பொதிகளில்
2) பிளாஸ்டிக் கொள்கலன்களில்
3) CFL மின்குமிழ்களில்

60) பின்வரும் காட்சிப்படத்தைப் பார்த்து ஐந்து சொற்களுக்குக் குறையாமல் கருத்துள்ள மூன்று வாக்கியங்களை எழுதுக. ( எழுவாய், பயனிலைத் தொடர்புகளும் எழுத்துக் கூட்டலும் சரியாக இருக்க வேண்டும்)



1) ………………………………………………………………………………………

………………………………………………………………………………………

2) ………………………………………………………………………………………

………………………………………………………………………………………

3) ………………………………………………………………………………………

………………………………………………………………………………………

### விடைகள்

| | |
|---|---|
| 57) | 01 |
| 58) | 03 |
| 59) | 03 |


● 1, 2 ஆகிய வினாக்களில் முதலில் தரப்பட்ட பகுதியைப் பூரணப்படுத்துவதற்குரிய மீதிப்பகுதியைத் தெரிவு செய்க.

01. வண்ணத்துப்பூச்சியின் ஒருபகுதி முன்னே தரப்பட்டுள்ளது.



(1) (2) (3)

02.



(1) (2) (3)

03. இங்குள்ள உருக்களில் காட்டப்பட்டுள்ள பிராணிகளை மூன்று கூட்டங்களாகப் பிரிக்கலாம்.



A B C D E F


இக் கூட்டங்களைச் சரியாகக் காட்டும் விடையைத் தெரிவு செய்க.

(1) A, C / D, E / B, F
(2) A, E / B, C / D, F
(3) C, F / B, D / A, E

04. **“பல்கலைக்கழகம்”** எனும் சொல்லிலுள்ள எழுத்துக்களைப் பயன்படுத்தி ஆக்கக் கூடிய சொற்களைக் கொண்ட விடைத் தொகுதி எது?

(1) பல், பழம், பகல், கழகம், காலை, கல், பாகல்
(2) பல், கல்வி, பகல், கழகம், கலை, கல், பக்கம்
(3) பல், பழம், பகல், கழகம், கலை, கல், பக்கம்

### விடைகள்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 01. | (3) |  | 03. | (3) | C, F / B, D / A, E |
| 02. | (1) |  | 04. | (3) | பல், பழம், பகல், கழகம், கலை, கல், பக்கம் |

# மீண்டுமொரு தொற்று அலையை பண்டிகைக்காலமே தீர்மானிக்கும்

## விசேட மருத்துவ நிபுணர் ஹேமந்த ஹேரத் எச்சரிக்கை

கொழும்பு, டிசெ. 10

“நாளாந்தம் இனங்காணப்படும் தொற்றாளர் எண்ணிக்கையில் பாரதூரமான அதிகரிப்பு ஏற்படாவிட்டாலும் தொற்றாளர் எண்ணிக்கை குறைவடையாமல் காணப்படுகின்றமை அவதானத்தில் கொள்ளப்பட வேண்டிய விடயமாகும். எனவே, பண்டிகைக் காலங்களில் மிகவும் அவதானத்துடன் செயற்படுமாறு மக்களைக் கேட்டுக் கொள்கின்றோம். மீண்டுமொரு கொரோனாத் தொற்று அலையைப் பண்டிகைக் காலமே தீர்மானிக்கும்.”

- இவ்வாறு பிரதி சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் விசேட மருத்துவ நிபுணர் ஹேமந்த ஹேரத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

“கடந்த சில வாரங்களுக்கு முன்னர் 500 ஆகக் காணப்பட்ட நாளாந்தத் தொற்றாளர் எண்ணிக்கை தற்போது 700 வரை அதிகரித்துள்ளமை விசேட அவதானம் செலுத்தப்பட வேண்டிய விடயமாகும்.



தொற்றாளர் எண்ணிக்கையை இதனை விடக் குறைவடையச் செய்வதே எமது எதிர்பார்ப்பாகும். அதற்கான நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

நாடு திறக்கப்பட்டுள்ள நிலையில் வெவ்வேறு சமூக மற்றும் பொருளாதார நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்றன. அதற்கமைய தொற்றாளர் எண்ணிக்கையில் மேலும் அதிகரிப்பு ஏற்பட வாய்ப்புள்ளது.

தற்போது பாரியளவில் தொற்றாளர் எண்ணிக்கை அதிகரிக்காவிட்டாலும் நாளாந்தம் இனங்காணப்படும் தொற்றாளர் எண்ணிக்கையில் வீழ்ச்சி ஏற்படாமை அவதானம் செலுத்தப்பட வேண்டிய விடயமாகும்.

மகிழ்ச்சிக்காக ஏற்பாடு செய்யப்படுகின்ற நிகழ்வுகளில் விருந்துபசாரங்களின்போது கொரோனாத் தொற்று அதிகமானோருக்குப் பரவக்கூடிய வாய்ப்புக்கள் அதிகமாகும்.

இதற்கு முன்னர் சிறிய கொத்தணிகள் ஏற்பட்ட அனைத்துச் சந்தர்ப்பங்களிலும், அலுவலகங்களில் ஒன்றாக உணவு உண்பவர்கள் மத்தியில் வைரஸ் பரவல் அதிகமாகக் காணப்பட்டமையை அவதானிக்கக் கூடியதாக இருந்தது.

எனவே, பண்டிகைக் காலங்களில் இவ்வாறான செயற்பாடுகளின்போது மிகவும் அவதானமாகச் செயற்படுமாறு கேட்டுக்கொள்கின்றோம். சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்தால் வெளியிடப்பட்டுள்ள சுகாதார விதிமுறைகளை முறையாகப் பின்பற்றுமாறும் கேட்டுக்கொள்கின்றோம்”

- என்றார். (இ)

# சாணக்கியனின் கருத்தால் கொதிப்படைந்தார் விமல்!

கொழும்பு, டிச. 10



“இலங்கையில் நடைபெற்ற சம்பவங்களுடன் பாகிஸ்தானில் நடந்த சம்பவத்தை ஒப்பிட்டு, இரண்டையும் சமப்படுத்த முற்பட வேண்டாம்” என்று அமைச்சர் விமல் வீரவன்ச தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் சாணக்கியன் எம்.பி. வெளியிட்ட கருத்துக்குப் பதில் கொடுக்கும் விதத்திலேயே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

“சிற்சில அரசியல் முரண்பாடுகளால் ஏற்பட்ட சில சம்பவங்கள் இங்கு இடம்பெற்றுள்ளன. அதாவது விடுதலைப் புலிகள் வடக்கில் இராணுவத்தைக் கொல்லும்போது, அதனால் கொதிப்படைந்த தெற்கு மக்கள் குழப்பமடைந்திருக்கலாம். அதேபோல் யாழ். நூலகம் எரிப்பு உள்ளிட்ட சம்பவங்கள் அரசியல் பிளவுகளால் திட்டமிட்ட அடிப்படையில் இடம்பெற்றன.

ஆனால், பாகிஸ்தானில் நடந்த சம்பவம் அவ்வாறு அல்ல. சுவரில் இருந்த போஸ்டரை அகற்றியதால் அந்த நபரைக் கொடூரமாகக் கொன்றுள்ளனர். இலங்கையில் நடந்தவை சரியென நான் கூற விளையவில்லை. ஆனால், இரண்டையும் ஒப்பிட்டு சமப்படுத்த முற்பட வேண் டாம்.

சாணக்கியன் நீங்கள் கண்டியில் படித்த எம்.பி., கண்டி மக்கள் உங்களுடன் எப்படிப் பழகினார்கள் என்பது உங்களுக்கு நினைவிருக்கலாம். எனவே, நியாயமாக உரையாற்றுங்கள்” - என்றார். (இ)

# தலைகீழாகக் கவிழ்ந்த கார் சாரதி படுகாயம்!

கொழும்பு, டிசெ. 10

கதிர்காமம் - கொழும்பு பிரதான வீதியின் அம்பாந்தோட்டை - கட்டுவ பிரதேசத்தில் நேற்று அதிகாலை இடம்பெற்ற விபத்தில் ஒருவர் படுகாயமடைந்துள்ளார்.

அம்பலாந்தோட்டையிலிருந்து அம்பாந்தோட்டை நோக்கிப் பயணித்துக் கொண்டிருந்த மோட்டார் வாகனம் வேகக்கட்டுப் பாட்டை இழந்து வீதியை விட்டு விலகி விபத்துக்குள்ளாகியுள்ளது.

விபத்தில் மோட்டார் வாகனத்தின் சாரதி படுகாயமடைந்துள்ளார் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

விபத்துக்குள்ளான மோட்டார் வாகனம் முற்றாகச் சேதமடைந்துள்ளது. (இ)

# இலங்கை கடற்படையின் 71 ஆவது ஆண்டு நிறைவு

கொழும்பு, டிசெ. 10

இலங்கை கடற்படையின் 71 ஆவது ஆண்டு நிறைவு நேற்றாகும்.

இது தொடர்பில் கடற்படையின் ஊடகப்பிரிவு வெளியிட்டுள்ள அறிக்கையில்,

“1950ஆம் ஆண்டு டிசெம்பர் 09 ஆம் திகதி, 1950 - 34 ஆம் இலக்க கடற்படைச் சட்டத்தினூடாக ரோயல் சிலோன் கடற்படை என்ற பெயரில் நிரந்தர கடற்படை உருவாக்கப்பட்டது.

1972 புதிய அரசமைப்பின் பிரகாரம் றோயல் சிலோன் கடற்படை, ‘இலங்கை கடற்படை’ என பெயர் மாற்றம் செய்யப்பட்டது.

நாட்டின் கடற்பிராந்தியத்தைப் பாதுகாக்கும் தேசிய அபிலாஷையை நிறைவேற்றுவது தொடக்கம் கடல் எல்லையில் கடற்படை முன்னெடுக்கும் நடவடிக்கைகள் அளப்பரியவை.

கடல் வழியாக முன்னெடுக்கப்படும் போதைப்பொருள் கடத்தல்கள் உள்ளிட்ட சட்டவிரோத நடவடிக்கைகளை தடுத்தல், அனர்த்தத்துக்கு உள்ளாகும் கடற்றொழிலாளர்கள் மற்றும் மீனவர்களுக்கு உதவிகளை வழங்குதல் என்பன கடற்படையினர் முன்னெடுக்கும் விசேட நடவடிக்கைகள் ஆகும்” - என்றுள்ளது. (இ)

# கடற்படை அதிகாரிகளுக்கு பதவி உயர்வு

கொழும்பு, டிசெ. 10

இலங்கையில் 84 கடற்படை அதிகாரிகள் மற்றும் கடற்படை சிப்பாய்கள் 1,684 பேருக்குப் பதவி உயர்வு வழங்கப்பட்டுள்ளது.

இலங்கை கடற்படையின் 71 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டே கடற்படை அதிகாரிகள் மற்றும் சிப்பாய்களுக்கு பதவி உயர்வு வழங்கப்பட்டுள்ளது.

கடற்படையின் ஊடகப் பிரிவு வெளியிட்டுள்ள அறிக்கையில் இந்தத் தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ)

# வெடிபொருட்களுடன் ஒருவர் கைது!

திருகோணமலை, டிசெ. 10

திருகோணமலை, சூரியபுர பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட 09ஆம் மைல்கல் பிரதேசத்தில், வெடி பொருட்களுடன் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

சூரியபுர பிரதேசத்தைச் சேர்ந்த 53 வயது நபரே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளார்.

சூரியபுர பொலிஸாருக்குக் கிடைக்கப் பெற்ற இரகசியத் தகவலையடுத்து மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின் போதே குறித்த நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

இது தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (இ)

# தொற்றால் பெற்றோரை இழந்த சிறுவர்களுக்கு உதவித் தொகை

கொழும்பு, டிசெ. 10

இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்றால் பெற்றோரை இழந்த 20 வயதுக்குட்பட்ட சிறுவர்களுக்கு கல்வி உதவித் தொகை வழங்கும் திட்டத்தைக் கோவிட் - 19 சுகாதாரம் மற்றும் சமூகப் பாதுகாப்பு நிதியம் ஆரம்பித்துள்ளது.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் யோசனைக்கு அமைய இந்த வேலைத்திட்டம் ஆரம்பிக்கப்படவுள்ளது என ஜனாதிபதி ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

விண்ணப்பதாரர்கள் தாய் அல்லது தந்தையின் இறப்புச் சான்றிதழின் உறுதிப்படுத்தப்பட்ட பிரதி மற்றும் சிறுவன் அல்லது சிறுமியின் பிறப்புச் சான்றிதழின் உறுதிப் படுத்தப்பட்ட பிரதி, கிராம சேவையாளர் பிரிவு கிராம சேவையாளரால் உறுதிப்படுத்தல் கடிதம் மற்றும் பாடசாலை அதிபரின் உறுதிப்படுத்தப்பட்ட கடிதத்துடன் விண்ணப்பத்தைச் சமர்ப்பிக்க வேண்டும்.

விண்ணப்ப உறையின் மேல் இடது மூலையில், “கோவிட் - 19 சுகாதாரம் மற்றும் சமூகப் பாதுகாப்பு நிதியத்திலிருந்து கல்விப் புலமைப் பரிசில்களை வழங்குதல்“ என்று குறிப்பிடப்பட வேண்டும் என ஜனாதிபதி ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப் படிவத்தை, ‘செயலாளர், கோவிட் - 19 சுகாதாரம் மற்றும் சமூகப் பாதுகாப்பு நிதியம், ஜனாதிபதி அலுவலகம், கொழும்பு 01’ என்ற முகவரிக்கு அனுப்பி வைக்குமாறும் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது. (இ)

# 2022 ஆம் ஆண்டு இலங்கைக்கு கடும் பொருளாதார நெருக்கடி

கொழும்பு, டிசெ. 10

இலங்கைக்கு எதிர்வரும் வருடத்தில் தமது கடன் தொகையை செலுத்த முடியாத நிலை ஏற்படும் என நிபுணர்கள் எச்சரித்துள்ளனர்.

இது தொடர்பில் கருத்து தெரிவித்துள்ள முன்னாள் சபாநாயகர் கரு ஜெயசூரிய தனது டுவிட்டர் பதிவில்,

அடுத்த வருடத்தில் இலங்கைக்கு தமது கடன் தவணைகளை செலுத்த முடியாமல் போகுமென நிபுணர்கள் தெரிவித்துள்ளனர் என்று குறிப்பிட்டார்.

ஆனால், அரசியல்வாதிகள் இந்த கடும் நெருக்கடி நிலையை பொறுப்புடன் எதிர்கொள்வார்களா என்பது தெரியவில்லை.

இலங்கைக்கு தற்போது டொலர் இல்லை என்று புலம்புவதை விடுத்து, கூட்டு ஒப்பந்தங்களை ஏற்படுத்த வெண்டியது அவசியமாகிறது ஆகவே, அரசியல்வாதிகள்



பொறுப்புடன் செயல்பட வேண்டிய காலம் உருவாகியுள்ளது - என்று குறிப்பிட்டுள்ளார். (அ)

# ஓட்டோ திருடிய மூவர் கொழும்பில் கைது!

கொழும்பு, டிசெ. 10

கொழும்பு, மருதானை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் 4 இலட்சத்து 20 ஆயிரம் ரூபாய் பெறுமதியான ஓட்டோவை திருடிய குற்றச்சாட்டில் சந்தேகநபர்கள் மூவரைப் பொலிஸார் கைதுசெய்துள்ளனர்.


கொழும்பு 14, பேலியகொட ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்த 29, 30, 38 வயதுகளையுடைய மூவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர்.

இதன்போது திருடப்பட்ட ஓட்டோவும் கைப்பற்றப்பட்டுள்ளது.

சந்தேகநபர்களிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளையடுத்து அவர்களிடமிருந்து 8 மின்கலம், தொலைபேசி உள்ளிட்ட பல பொருட்களையும் பொலிஸார் கைப்பற்றியுள்ளனர். (இ)

# விமானப்படைத் தளபதி தலைமையில் விசாரணை

## ஹெலிகொப்டர் விபத்து குறித்து ராஜ்நாத் விளக்கம்






புதுடில்லி, டிசெ. 10

குன்னூர் அருகே விமானப் படை ஹெலிகொப்டர் விழுந்து விபத்துக்குள்ளான சம்பவம் குறித்து பாராளுமன்றத்தில் நேற்று பாதுகாப்பு அமைச்சர் ராஜ்நாத் சிங் விளக்கம் அளித்தார்.

நீலகிரி மாவட்டம் குன்னூர் அருகே, விமானப் படை ஹெலிகொப்டர் விழுந்து விபத்துக்குள்ளானதில், முப்படைகளின் தலைமைத் தளபதி பிபின் ராவத் மற்றும் அவரது மனைவி மதுலிகா ராவத் உட்பட 13 பேர் பலியாகினர்.

பாராளுமன்றத்தின் மக்களவை நேற்று கூடியதும், மக்களவைத் தலைவர் ஓம் பிர்லா இந்த ஹெலிகொப்டர் விபத்து குறித்து தெரிவித்தார்.

பிறகு, ஹெலிகொப்டர் விபத்து குறித்து விளக்கம் அளித்த பாதுகாப்பு அமைச்சர் ராஜ்நாத் சிங், முப்படைகளின் தலைமைத் தளபதி பிபின் ராவத் மற்றும் அவரது மனைவி உட்பட 14 பேர் பயணித்த விமானப் படை ஹெலிகொப்டர் நேற்று குன்னூர் அருகே விழுந்து விபத்துக்குள்ளாது. இதில், கப் டன் வருண் சிங் தவிர மற்ற 13 பேர் பலியாகினர். வருண் சிங் உயிர்காக்கும் கருவிகளின் உதவியோடு வெலிங்டனில் சிகிச்சை பெற்று வருகிறார். அவருக்கு உயரிய சிகிச்சை கிடைக்க அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டுள்ளன.

இந்த விபத்தில், முப்படைகளின் தலைமை தளபதி உயிரிழந்தார் என்பதை துக்கத்துடன் தெரிவித்துக் கொள்வதுடன், அவரது குடும்பத்துக்கு இரங்கல் தெரிவித்துக் கொள்கிறேன்.

விபத்தில் பலியான விபின் ராவத்துக்கு முழு அரசு மரியாதையுடன் இறுதிச் சடங்குகள் நடைபெறும். இந்த விபத்து குறித்து விமானப் படைத் தளபதி தலைமையில் விசாரணை தொடங்கி

நடைபெற்று வருகிறது என்று கூறினார்.

பிறகு, மக்களவைத் தலைவர் ஓம் பிர்லா தனது இறுதி அஞ்சலியை செலுத்தும் விதமாகப் பேசினார். அவையில் பிபின் ராவத் மறைவுக்கு அஞ்சலி செலுத்தும் விதமாக மக்களவை உறுப்பினர்கள் சார்பில் மௌன அஞ்சலி செலுத்தப்பட்டது.

மாநிலங்களவையில் நேற்று அதன் துணைத் தலைவர் ஹரிவன்ஷ், இந்த துக்ககரமான செய்தியை தெரிவித்தார். பிறகு அவை உறுப்பினர்கள் எழுந்து நின்று மௌன அஞ்சலி செலுத்தினர்.

**மு.க.ஸ்டாலின் அஞ்சலி**

பிபின் ராவத் உட்பட 13 பேரின் உடலுக்கு தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் நேரில் அஞ்சலி செலுத்தினார். 13 பேரின் உடல்களுக்கும் வீர வணக்கம் செலுத்தி மலர்தூவி மரியாதை செலுத்தினார்.

பிரமுகர்கள் அஞ்சலி செலுத்திய பின்னர், 13 பேரின் உடல்கள் சூலூருக்கு கொண்டு செல்லப்பட்டு அங்கிருந்து இராணுவ விமானம் மூலம் டில்லிக்கு கொண்டு செல்லப்பட உள்ளது. (அ)



# இந்திய ஹெலி விபத்து; கறுப்புப் பெட்டி மீட்பு!

சென்னை, டிசெ. 10

ஹெலிகொப்டரின் கறுப்புப் பெட்டியை பாதுகாப்புப் படையினர் கண்டுபிடித்துள்ளனர்.

கோவையிலிருந்து ஹெலிகொப்டர் மூலம் குன்னூர் வெலிங்டன் இராணுவ கல்லூரிக்கு செல்லும்போது காட்டேரி மலைப் பகுதி அருகே ஏற்பட்ட விபத்தில் முப்படைத் தலைமைத் தளபதி விபின் ராவத், அவரது மனைவி உள்ளிட்ட 13 பேர் நேற்றுமுன்தினம் பலியாகினர்.

ஆனால், ஹெலிகொப்டரின் கறுப்புப் பெட்டி கிடைக்காததால் குன்னூர் பகுதி முழுவதும் இராணுவத்தின் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்து நேற்று முன்தினம் மாலை 3 மணிமுதல் தேடுதல் பணியை மேற்கொண்டனர்.

இந்நிலையில், ஹெலிகொப்டரின் கறுப்புப் பெட்டி உள்ளிட்ட 3 பொருள்கள் நஞ்சப்பசத்திரம் என்ற பகுதியில் நேற்று காலை கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

இந்த கறுப்புப் பெட்டியில் பதிவாகியுள்ள ஹெலிகொப்டரை ஓட்டிய விமானிகளின் உரையாடல் உள்ளிட்டவை ஆராய்ந்த பிறகே விபத்து குறித்த முழுமையான காராணம் தெரியவரும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இராணுவ கட்டுப்பாட்டில் வைக்கப்பட்டுள்ள கறுப்புப் பெட்டி பெங்களூர் அல்லது டில்லிக்கு கொண்டு செல்லப்பட்டு ஆய்வு செய்யப்படும் என தகவல் வெளியாகியுள்ளது. (அ)

# 57 நாடுகளில் ஒமைக்ரோன்!

கொழும்பு, டிசெ. 10

ஒமைக்ரோன் வேகமாகப் பரவி வருவதாகவும், தற்போது அது 57 நாடுகளுக்கு பரவியுள்ளதாகவும் உலக சுகாதார அமைப்பு தெரிவித்துள்ளது.

இது மேலும் பல நாடுகளுக்கு பரவக்கூடிய ஆபத்து இருப்பதாகவும் குறிப்பிடப்படுகின்றது.

அத்துடன், பல்லாயிரம் பேருக்கு மருத்துவமனையில் சிகிச்சை பெறும் நிலை ஏற்படும் எனவும் தெரிவிக்கப்பட்டது.

எனினும், டெல்டா வைரசின் பாதிப்பை விடவும் குறைவான பாதிப்பே ஒமைக்ரோனால் ஏற்பட்டிருப்பதாகவும் உலக சுகாதார அமைப்பின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

# ஐ.நா. செயலாளர் தனிமைப்பட்டார்!

நியூயோர்க், டிசெ. 10

ஐ.நா. பொதுச் செயலாளர் அன்ரனியோ குட்டரெஸ் கொரோனா அச்சத்தால் தன்னைத் தானே தனிமைப்படுத்திக் கொண்டார். பொதுச் செயலாளருடன் தொடர்பில் இருந்த ஐ.நா அதிகாரி ஒருவருக்குக் கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

இந்நிலையில், ஐ.நா. பொதுச் செயலாளர் அன்ரனியோ குட்டரெஸ் கொரோனா அச்சத்தால் தன்னைத் தானே தனிமைப் படுத்திக் கொண்டார்.

இதனால், அடுத்த சில நாட்களுக்கு அவர் பங்கேற்கவிருந்த நிகழ்ச்சிகள் அனைத்தும் ரத்து செய்யப்படுவதாக அவரது அலுவலகம் தெரிவித்துள்ளது.

முன்னதாக நேற்றுமுன்தினம் அவர், மன்ஹற்றனில் நடைபெறும் ஐ.நா. ஊடக சம்மேளனத்தின் ஆண்டு விழாவில் கலந்து கொள்வதாக இருந்தது. நேற்று பயங்கவாதம், பருவ நிலை மாற்றம் தொடர்பாக ஐ.நா. பாதுகாப்பு சபைக் கூட்டத்தில் கலந்துகொள்வதாக இருந்தது.

இந்தக் கூட்டத்துக்கு நைஜர் நாட்டு ஜனாதிபதி முகமது போஸம் தலைமை ஏற்பார்



என்றும் கூறப்பட்டிருந்தது. இந்நிலையில் ஐ.நா. செயலர் தனிமைப்படுத்துதலை அறிவித்துள்ளார்.

அவரது உடல்நிலை குறித்து மேலும் தகவல்களைப் பகிர பொதுச் செயலாளரின் செய்தித் தொடர்பாளர் ஸ்டெபானி டுஜாரிக் மறுத்துவிட்டார்.

அன்ரனியோ குட்டரெஸ் அண்மையில் தான் கொரோனா பூஸ்டர் தடுப்பூசி செலுத்திக் கொண்டார். உலகளவில் இன்னும் சில நாடுகளில் ஒரு டோஸ் தடுப்பூசி கூட செலுத்தாத மக்கள் இருக்கும் நிலையில் வளர்ந்த நாடுகள் மூன்றாவது பூஸ்டர் டோஸ் தடுப்பூசியை தள்ளிவைக்க வேண்டும் என்று ஐ.நா. வலியுறுத்தி வருகிறது. இதனால், மிகுந்த தயக்கத்திற்குப் பின்னரே அன்ரனியோ குட்டரெஸ் மூன்றாவது டோஸ் தடுப்பூசியை செலுத்திக் கொண்டார்.

# கஷோக்கி படுகொலை தொடர்பாக பாரிஸில் கைதான நபர் விடுவிப்பு

## பெயர் குழப்பமே கைதுக்கு காரணம்

பாரிஸ், டிசெ. 10

பத்திரிகையாளர் ஜமால் கஷோக்கி படுகொலையில் தொடர்புடையவர் என்ற சந்தேகத்தில் பாரிஸ் விமான

நிலையத்தில் கைது செய்யப்பட்ட சவுதிப் பிரஜை விடுவிக்கப்பட்டிருக்கிறார்.

கஷோக்கியைப் படுகொலை செய்த மரணப் படைப்பிரிவின் உறுப்பினர் என்ற சந்தேகத்தில் காலித் அல் ஒட்டாய்பி என்பவர் பாரிஸ் விமான நிலையத்தில் இரண்டொரு தினங்களுக்கு முன் கைது செய்யப்பட்டிருந்தார்.

துருக்கி அரசு விடுத்திருக்கும் சர்வதேசக் கைது உத்தரவின் கீழேயே அவரைப் பாரிஸ் அதிகாரிகள் தடுத்து வைத்திருந்தனர்.

ஆனால், கைதான நபர் தேடப்படுகின்ற காலித் அல் ஒட்டாய்பி அல்லர் என்றும் அதே பெயரைக் கொண்ட மற்றொரு சவுதிப் பிரஜை என்பது உறுதிப்படுத்தப்பட்டிருப்பதாகவும் பாரிஸ் சட்டமா அதிபர் அலுவலகம் தெரிவித்துள்ளது. காலித் அல் ஒட்டாய்பி என்ற பெயருடைய கடவுச்சீட்டை வைத்திருந்ததன் காரணமாகவே அவர் பொலிஸாரிடம் சிக்க நேர்ந்துள்ளது. தற்போது அவர் விடுவிக்கப்பட்டிருக்கிறார்.




இதேவேளை, கைதானவர் கொலையில் தொடர்புடைய நபர் அல்லர் என்பதை பாரிஸில் உள்ள சவுதி அரேபியத் தூதரகமும் உறுதிப்படுத்தி உள்ளது.

உண்மையான காலித் அல் ஒட்டாய்பி சவுதி அரேபியாவின் சிறை ஒன்றில் அடைக்கப்பட்டிருக்கிறார்.

காலித் அல் ஒட்டாய்பி என்னும் பெயரில் நூற்றுக் கணக்கான சவுதி பிரஜைகள் உள்ளனர் என்றும் தூதரகம் தெரிவித்துள்ளது. (அ)

# திஸர, அவிஸ்க சிக்ஸர் மழை; யாழ்ப்பாணம் கிங்ஸ் வெற்றி!

கொழும்பு, டிசெ. 10

திஸர பெரேரா (6), அவிஸ்க பெர்னாண்டோ(7) ஆகியோர் சிக்ஸர்களை பறக்கவிட்டு அடித்த அரைச் சதங்களின் உதவியால் கண்டி அணியை 14 ஓட்டங்களால் வெற்றி கொண்டது யாழ்ப் பாணம் கிங்ஸ் அணி.

எல். பி. எல். இருபது - 20 கிரிக்கெட்டின் இரண்டாவது தொடர் கொழும்பு ஆர். பிரேமதாஸ மைதானத்தில் நடக்கிறது. இதில் நேற்று முன்தினம் இரவு நடந்த போட்டியில் யாழ்ப்பாணம் கிங்ஸ், கண்டி வோரியர்ஸ் அணிகள் மோதின.

நாணயச் சுழற்சியில் வென்ற கண்டி அணி முதலில் களத்தடுப்பில் ஈடுபடத் தீர்மானித்தது. 2.5 ஓவர்களில் மழை குறுக்கிட்டது. இத னால், சுமார் ஒன்றரை மணி நேரம் போட்டி தடைப்பட் டது. அப்போது இலங்கை அணி ஒரு விக்கெட் இழப் புக்கு 17 ஓட்டங்களை எடுத்தி ருந்தது.

பின்னர் ஆட்டம் தொடங் கியபோது, போட்டி 14 ஓவர்களாகக் குறைக்கப்பட் டது. தொடக்க வீரர்களில்




ஒருவரான அவிஸ்க பெர் னாண்டோ சிக்ஸர்களை பறக்க விட்டார். அவருடன் இறங்கிய காட்மோர் 14 ஓட் டங்களுடன் ஆட்டமிழக் கவே அவிஸ்கவுடன் இணைந்தார் திஸர பெரேரா.

இருவரும் இணைந்து கண்டி அணியின் பந்துகளை நாலாபுறமும் தெறிக்க விட்ட னர். இருவரும் 33 பந்துகளில் 105 ஓட்டங்களை இணைப் பாட்டமாகக் குவித்தனர்.

அவிஸ்க 23 பந்துகளில் 7 சிக்ஸர்களை அடித்த அவர் 53 ஓட்டங்களைப் பெற்று ஆட்டமிழக்க, அடுத்த இரு பந்துகளிலேயே திஸர பெரே ராவும் 6 சிக்ஸர்கள், 2 பௌண்ட்ரிகளை விளாசி 21 பந்துகளில் 53 ஓட்டங்களை குவித்து வெளியேறினார். பின்னர் வந்த வீரர்களும் அடித்தாட முற்பட்டமை யால் வேகமாக விக்கெட் களை இழந்தாலும், அணி யின் ஓட்ட எண்ணிக்கை உயர்ந்தது.

இதனால், 14 ஓவர்கள் நிறைவில் 6 விக்கெட்கள் இழப்புக்கு 181 ஓட்டங் களைக் குவித்தது.

கண்டி அணியின் பந்து வீச்சில் ஷிராஸ் அஹமட் 3 விக்கெட்களை கைப்பற்றினார்.

பதிலுக்கு துடுப்பெடுத்தா டிய கண்டி அணியும் அதிரடி யாகவே ஆட்டத்தை ஆரம் பித்தது. தொடக்க வீரர்க ளான சரித் அசலங்க 19 பந்து களில் 5 பௌண்ட்ரிகள், 2 சிக்ஸர்களுடன் 42 ஓட்டங் களையும், கென்னர் லூயிஸ் 3 பௌண்ட்ரிகள், 2 சிக்ஸர் களுடன் 41 ஓட்டங்களையும் பெற்றனர்.

மூன்றாவது வீரராகக் கள மிறங்கிய பாவல் 19 பந்து களில் 7 சிக்ஸர்கள், 2 பௌண்ட் ரிகளுடன் 61 ஓட்டங்களைக் குவித்து லக்மாலின் பந்தில் ஆட்டமிழந்தார்.

இதன் பின்னர் களமிறங் கியவர்களால் அதிரடி காட்ட முடியவில்லை. 14 ஓவர்கள் நிறைவில் 5 விக்கெட்களை இழந்த கண்டி அணியால் 166 ஓட்டங்களையே பெறமுடிந் தது. இதனால், 14 ஓட்டங்க ளால் யாழ்ப்பாணம் கிங்ஸ் அணி வெற்றி பெற்றது.

யாழ்ப்பாணம் கிங்ஸின் பந்துவீச்சில் ஜெய்டன் சீல்ஸ் 2 விக்கெட்களையும், சதுரங்க டீ சில்வா, சுரங்க லக்மால் ஆகியோர் ஒவ்வொரு விக் கெட்டை வீழ்த்தினர். (ஐ)



ஆஷஷ் தொடர்:

## ஹெட் அதிரடி சதம்; ஆஸி. முன்னிலை

பிறிஸ்பேர்ண்,டிசெ.10

ட்ராவிஸ் ஹெட் அதிரடியாக ஆடி 85 பந்துகளில் சதம் குவிக்கவே இங்கி லாந்து அணியை விட அதிக ஓட்டங் களால் முன்னிலை பெற்றது அவுஸ் திரேலிய அணி.

இங்கிலாந்து - அவுஸ்திரேலிய அணிகள் இரு ஆண்டுகளுக்கு ஒரு முறை மோதும் ஆஷஷ் தொடர் அவுஸ் திரேலியாவில் நடக்கிறது. பிரிஸ் பேனில் நடக்கும் முதல் போட்டியில் இங்கிலாந்து அணி முதல் இனிங்ஸில் 147 ஓட்டங்களைப் பெற்றது. மழை காரணமாக அவுஸ்திரேலியா துடுப்பெடுத்தாடாத நிலையில் முதல் நாள் ஆட்டம் நிறுத்தப்பட்டது.

போட்டியின் இரண்டாம் நாளான நேற்று அவுஸ்திரேலிய அணி துடுப் பெடுத்தாடியது. அவுஸ்திரேலிய அணி அபாரமாக விளையாடியது. அந்த அணிக்கு தொடக்கம் கொடுத்த வீரர் களில் ஒருவரான மார்கஸ் ஹரிஸ் 3 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்த போதும், மற்றொரு தொடக்க வீரரான டேவிட் வோர்னரும், லபுஸ்சாக்னே யும் இணைந்து அபாராமாக விளை யாடினர்.

117 பந்துகளை சந்தித்து 74 ஓட்டங் களை எடுத்த லபுஸ்சாக்னே ஆட்ட மிழந்ததைத் தொடர்ந்து வந்த ஸ்ரீவன் ஸ்மித் 12 ஓட்டங்களுடன் வெளியேறி னார். ஆனால், அடுத்து வந்த ட்ராவிஸ் ஹெட் அதிரடியான ஆட்டத்தை வெளிப்படுத்தினார். இதனிடையே மறுபுறத்தில் அபாரமாக ஆடிய டேவிட் வோர்னர் 11 பௌண்ட்ரிகள், 2 சிக்ஸர்களுடன் 94 ஓட்டங்களைப் பெற்று ஆட்டமிழந்தார்.

மறுமுனையில் விக்கெட்கள் வீழ்த் தப்பட்ட போதும், ஹெட் அதிரடி காட்டினார். அவர் 85 பந்துகளில் சதம் கடந்தார். இது அவர் டெஸ்ட் வாழ் வில் பெற்ற மூன்றாவது சதமாகும். அத்துடன், ஆஷஷ் தொடரில் குறைந்த பந்தில் பெற்ற மூன்றாவது சதமாகவும் அமைந்தது.

நேற்றைய நாள் ஆட்டம் நிறுத்தப் பட்டபோது, அவுஸ்திரேலிய அணி 84 ஓவர்களை எதிர்கொண்டு 7 விக்கெட் கள் இழப்புக்கு 343 ஓட்டங்களைப் பெற்றுள்ளது. ஹெட் 12 பௌண்ட் ரிகள், 2 சிக்ஸர்களுடன் 112 ஓட்டங் களுடனும், மிற்செல் ஸ்ரார்க் 10 ஓட்டங்களுடனும் ஆட்டமிழக்காமல் உள்ளனர்.

அவுஸ்திரேலிய அணி இங்கி லாந்தை விட 196 ஓட்டங்கள் முன்னி லையில் உள்ளது. இன்று போட்டியின் மூன்றாம் நாள் ஆட்டமாகும். (ஐ)

## தம்புள்ளையின் அதிரடியில் வீழ்ந்தது கொழும்பு ஸ்ரார்ஸ்!

கொழும்பு, டிசெ. 10

அதிரடி காட்டிய தம்புள்ளை அணி கொழும்பு ஸ்ரார்ஸ் அணியை 18 ஓட்டங்களால் வெற்றி கொண்டது.

எல். பி. எல். இருபது - 20 கிரிக்கெட்டின் இரண்டாவது தொடர் கொழும்பு ஆர். பிரேம தாஸ மைதானத்தில் நடக்கிறது. இதில் நேற்றுமுன்தினம் மாலை நடந்த போட்டியில் தம்புள்ளை ஜியான்ட்ஸ் அணியை கொழும்பு ஸ்ரார்ஸ் எதிர்கொண்டது.

நாணய சுழற்சியில் வென்ற தம்புள்ளை அணியின் தலைவர் தசூன் சானக முதலில் துடுப் பெடுத்தாடத் தீர்மானித்தார்.

ஆரம்ப வீரராக களமிறங்கிய பிலிப் சால்ட் 34 பந்துகளில் 2 சிக்ஸர்கள், 8 பௌண்ட்ரிகளு டன் 62 ஓட்டங்களையும், நஜி புல்லா 40 பந்துகளில் 54 ஓட் டங்களையும், தசூன் சானக 38 ஓட்டங்களையும் பெற்று ஆட்ட மிழந்தனர்.

இதனால், 20 ஓவர்களில் 6 விக்கெட்கள் இழப்புக்கு 196 ஓட்டங்களை தம்புள்ளை அணி பெற்றது.

கொழும்பு ஸ்ரார்ஸின் பந்து வீச்சில் துஷ்மந்த சாமீர 3 விக் கெட்களையும் கீமோ போல், அகில தனஞ்சய, சீக்குகே பிர சன்னா ஆகியோர் ஒவ்வொரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.

197 என்ற கடினமான இலக்கை விரட்ட ஆரம்பித்த தனஞ்சய டீ சில்வாவின் கொழும்பு ஸ்ரார்ஸ், அடித்து ஆட முனைந்தது. கொழும்பின் வீரர்கள் அதிரடி யாக ஆட முற்பட்டமையால் வேகமாக விக்கெட்களை இழக்க ஆரம்பித்தனர்.

18.5 ஓவர்கள் நிறைவில் அந்த அணி அனைத்து விக்கெட்களை யும் இழந்து 177 ஓட்டங்களைப் பெற்று 18 ஓட்டங்களால் தோல்வியைத் தழுவியது. தினேஷ் சந்திமால் 26, ரொம் பன்ரன் 23, தனஞ்சய 21, குஷல் பெரேரா 20 ஓட்டங்களை அதிகபட்சமாகப் பெற்றனர்.

தம்புள்ளையின் பந்துவீச்சில் நுவான் பிரதீப் 3 விக்கெட்களை யும் சாமிக கருணாரத்ன, தரிந்து ரட்நாயக்க, இம்ரான் தஹீர் ஆகியோர் தலா 2 விக்கெட்களை யும் கைப்பற்றினர். (ஐ)







## இந்திய ஒருநாள் அணியின் தலைவராக ரோஹித் சர்மா!

புதுடில்லி, டிசெ. 10

தென்னாபிரிக்க அணிக்கு எதிரான தொடரில் ஒரு நாள் போட்டியின் தலைவராகவும், டெஸ்ட் போட்டி யின் உபதலைவராகவும் ரோஹித் சர்மா நியமிக்கப்பட் டுள்ளார்.

விராட் கோலியிடம் இருந்து ஒருநாள் அணியின் தலைவர் பதவியும், ரஹானேயிடம் இருந்து உப தலை வர் பதவியும் பறிக்கப்பட்டுள்ளன. இவை இரண்டுமே ரோஹித் சர்மாவிடம் வழங்கப்பட்டுள்ளன.

தென்னாபிரிக்கா செல்லும் இந்திய அணி 3 டெஸ்ட் போட்டிகள், 3 ஒருநாள் போட்டிகள் கொண்ட தொடர் களில் விளையாடவுள்ளது. இருபது - 20 தொடரிலும் இரு அணிகளும் விளையாடவுள்ள போதிலும் அது குறித்து உறுதியான முடிவு இன்னமும் எடுக்கப்பட வில்லை.

இருபது - 20 போட்டியின் தலைமை பதவியிலிருந்து விராட் கோலி விலகியமையால் வெள்ளைப்பந்து போட்டிகளுக்கு இரு தலைவர்களை நியமிக்க இந்தியா விரும்பவில்லை. இதனால், ஒருநாள் அணியின் தலைமை பதவியை விராட் கோலியிடம் இருந்து பறித்து இருபது- 20 போட்டியின் தலைவரான ரோஹித்திடம் வழங்கி யுள்ளது.

**இந்திய அணி விவரம்:**

விராட் கோலி, ரோஹித் சர்மா, கே. எல். ராகுல், மயங்க் அகர்வால், சத்தேஸ்வர் புஜாரா, அஜின்க்ய ரஹானே, ஸ்ரேயாஸ் ஐயர், ஹனும விஹாரி, ரிஷப் பந்த், விருதிமான் சஹா, ரவிச்சந்திர அஸ்வின், ஜெயந்த் யாதவ், இஷாந்த் சர்மா, முகமது ஷமி, உமேஷ் யாதவ், ஜஸ்பிரித் பும்ரா, ஷர்துல் தாக்கூர், முகமது சிராஜ்

காத்திருப்பு வீரர்கள்: நவ்தீப் ஷைனி, சவுரவ் குமார், தீபக் சஹர், அர்ஸன் நாக்வஸ்வாலா

# முடிந்தால் தேர்தலை நடத்திக் காட்டுங்கள்

## அரசுக்கு மரிக்கார் பகிரங்க சவால்



**கொழும்பு, டிசெ. 10**

**“முடிந்தால் எதிர்வரும் பெப்ரவரி 9ஆம் திகதி உள்ளூராட்சி சபைத் தேர்தலை நடத்துமாறு அரசுக்குச் சவால் விடுக்கின்றேன்.”**

**- இவ்வாறு ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.எம்.மரிக்கார் தெரிவித்தார்.**

பாராளுமன்றத்தில் வரவு - செலவுத் திட்டம் மீதான குழுநிலை விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

“அரசுக்குத் தற்போது செயற்கையான மூன்றில் இரண்டு பெரும்பான்மைப் பலம் இருக்கின்றது என்ற போதிலும் நாட்டுக்குள் இயற்கையாக அப்படியான பலம் இல்லை.

அத்துடன் அரசு கடந்த 2010ஆம் ஆண்டு முதல் 2015ஆம் ஆண்டு வரையான காலத்தில் பெற்றுக்கொண்ட கடனைப் பயன்படுத்தி மேற்கொண்ட தாமரைக் கோபுரம் போன்ற பலன் தராத செலவுகள் காரணமாக நாடு பெருளாதார ரீதியாக அழிவின் விளிம்புக்குச் சென்றுள்ளது” - என்றார்.

பாராளுமன்றத்தில் மரிக்கார் எம்.பி. உரையாற்றும்போது ஆளும் கட்சியினர் தொடர்ந்து எதிர்ப்பை வெளியிட்டு வந்ததன் காரணமாக சபையில் அமளிதுமளி ஏற்பட்டது. (இ)

# மத்திய மாகாண சுகாதார பணியாளர்கள் போராட்டம்

## நோயாளர்கள் பெரும் சிரமம்

டிக்கோயா, டிச. 10

சுகாதாரப் பணியாளர்களின் ஆர்ப்பாட்டம் காரணமாக டிக்கோயா கிளங்கன் வைத்தியசாலைக்கு வந்த நோயாளர்கள் பெரும் சிரமங்களை எதிர்கொண்டனர்.

ஏழு கோரிக்கைகளை முன்வைத்து மத்திய மாகாண சுகாதாரப் பணியாளர்கள் நேற்று காலையில் இருந்து போராட்டத்தை முன்னெடுத்தனர்.

இந்நிலையில், டிக்கோயா கிளங்கன் வைத்தியசாலைக்கு வருகை தந்த நோயாளர்கள் நீண்ட நேரம் காத்திருக்க வேண்டிய நிலை ஏற்பட்டதோடு நோயாளர் சிலர் வீடு திருப்பியதையும் அவதானிக்க முடிந்தது.

மலையகப் பெருந்தோட்டப் பகுதியில் டிக்கோயா கிளங்கன், பொகவந்தலாவை, மஸ்கெலியா, கொட்டகலை ஆகிய வைத்தியசாலைகளில் சுகாதாரப் பணியாளர்கள் நேற்று போராட்டத்தில் ஈடுபட்டமை குறிப்பிடத்தக்கது. (இ




# பாராளுமன்ற அசம்பாவிதம் தொடர்பில் எங்கு வேண்டுமானாலும் முறையிடுங்கள்

## சஜித் அணிக்கு தினேஷ் சவால்

கொழும்பு, டிச. 10

“பாராளுமன்றத்தில் இடம்பெற்ற அசம்பாவிதம் தொடர்பாக நடவடிக்கை எடுப்பதற்கு சபாநாயகர் குழு அமைத்துள்ளார். அதனைவிடுத்து இது தொடர்பாக உயர் நீதிமன்றம், சர்வதேச பாராளுமன்றத்துக்கு கொண்டுசெல்வதாக இருந்தால் அதனை முறையிடுங்கள். அதனை நாங்கள் எதிர்க்க மாட்டோம்.”

- இவ்வாறு சபை முதல்வரும் அமைச்சருமான தினேஷ் குணவர்த்தன தெரிவித்தார்.



பாராளுமன்றத்தில் கடந்த வாரம் நடைபெற்ற குழப்ப நிலை தொடர்பாக சபாநாயகர் குழுவொன்றை நியமித்தார். இது தொடர்பில் சபையில் ஆளும் தரப்பும் எதிர்த்தரப்பும் கருத்துத் தெரிவித்துள்ளன. இது தொடர்பில் கருத்துத் தெரிவிக்கையிலேயே அமைச்சர் தினேஷ் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

“நியமித்த குழுவின் செயற்பாடுகள் தொடர்பில் பலரும் கருத்து முன்வைத்தார்கள். சபாநாயகருக்கு உள்ள அதிகாரத்துக்கமைய இந்தக் குழுவை நியமித்துள்ளார். அதன் பொறுப்புகளையும் தெரிவித்தார். அதேபோன்று சபையில் பயன்படுத்தபட்ட வார்த்தைப் பிரயோகம் தொடர்பில் கட்சித் தலைவர் கூட்டத்தில் சபாநாயகர் தெரிவித்தார்.

அந்த வசனங்கள் உகந்ததல்ல என்பதால் சபையில் கூற முடியாது. நிலையியல் கட்டளையின் பிரகாரம் சபாநாயகரின் அறிவிப்பு உயர்வானது. அநுர பண்டாரநாயக்கவின் தீர்ப்புடன் அனைவரும் அன்று உடன்பட்டார்கள்.

சமல் ராஜபக்ஷவும் பாராளுமன்றத்துக்கே உச்ச அதிகாரம் இருப்பதை உறுதி செய்தார். நடந்த சம்பவங்களுக்குக் காரணமான வார்த்தைப் பிரயோகங்கள் மற்றும் சபாநாயகர் தொடர்பில் பயன்படுத்திய வார்த்தைகள் தொடர்பில் வெட்கப்படுகின்றோம். சபாநாயகருக்கு உடனடியாகவோ அல்லது பாராளுமன்றம் கூடும் தினமொன்றிலோ அவரின் நிலைப்பாட்டை அறிவிக்கலாம். எந்த நிலையிலும் சபாநாயகர் ஒருபோதும் பொலிஸையோ வெளியாரையோ பாராளுமன்றத்துக்குள் அழைக்கவில்லை. எமக்குப் பாதகமான முடிவுகளைக்கூட அறிவித்துள்ளார்.

ஆனால், கடந்த ஆட்சியில் இருந்த சபாநாயகர் அடிக்கடி பாராளுமன்றத்தை ஒத்தி வைத்து கூட்டம் நடத்தினார். எனவே, இந்தச் சம்பவம் தொடர்பில் சபாநாயகர் நடவடிக்கை எடுத்திருக்கின்றார்.

தேவையானவர்கள் உயர் நீதிமன்றத்துக்குச் செல்லலாம். சர்வதேச பாராளுமன்றத்துக்கும் செல்லலாம். அனை நாங்கள் எதிர்க்கவில்லை. தற்போதே சர்வதேச பாராளுமன்றத்துக்குக் கடிதம் அனுப்பி இருப்பதாகத் தெரியவருகின்றது” - என்றார்.

(இ)

# தந்தை, தாய், மகன் உயிரிழப்பு: விபத்து அல்ல; தற்கொலையே!

கொழும்பு, டிச. 10

றொசல்ல மற்றும் வட்டவளை ரயில் நிலையங்களுக்கு இடையில் 103 மைல் கல் பகுதியில் நேற்றுமுன்தினம் முற்பகல் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த மூவர் மரணமடைந்த சம்பவம் ஒரு தற்கொலைச் சம்பவம் என்று தெரியவந்துள்ளது.

பதுளையில் இருந்து கொழும்பு - கோட்டை நோக்கிப் பயணித்த உடரட்ட மெனிக்கே ரயிலில் மோதுண்டு 70 வயதுடைய எஸ்.பிரான்சிஸ் (தந்தை), 65 வயதுடைய பி.கமலாவதி (தாய்), 40 வயதுடைய பிரான்சிஸ் குமார்ராஜ் (மகன்) ஆகிய ஒரே குடும்பத்தைச் சேர்ந்த மூவரே உயிரிழந்தனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.



இதனைத் தொடர்ந்து, உயிரிழந்த மூவரின் சடலங்களும் அதே ரயிலில் நாவலப்பிட்டி ரயில் நிலையத்துக்குக் கொண்டு செல்லப்பட்டு நாவலப்பிட்டி பொது வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டிருந்தது.

உயிரிழந்த ஒரே குடும்பத்தைச் சேர்ந்த மூவரும் கடந்த 10 நாட்களுக்கு முன் தமது வீட்டை மூடிவிட்டு வீட்டிலிருந்து தலைமறைவாகியிருந்தனர் என்று பிரதேசவாசிகள் தெரிவிக்கின்றனர்.

உயிரிழந்த குடும்பத்தைச் சேர்ந்த மகன் மசாலா தூள் வியாபாரத்தில் ஈடுபட்டு வந்தவர் எனவும், அவர் நான்கு முறை திருமணம் செய்து கொண்டவர் எனவும் பிரதேசவாசிகள் தெரிவிக்கின்றனர்.

குறித்த நபரைத் தேடி அவரைத் திருமணம் முடித்த பெண்கள் எனக் கூறி ஏற்கனவே பல பெண்கள் வீட்டுக்கு வந்துள்ளனர் எனவும் பிரதேசவாசிகள் தெரிவிக்கின்றனர்.

குறித்த நபர் பல்வேறு நபர்களிடம் பணம் மற்றும் நகைகளைப் பெற்று ஈடுவைத்து அதனை மீட்க முடியாத நிலையில், அவருக்கு எதிராக பண மோசடி தொடர்பில் பிரதேசவாசிகள் திம்புளை - பத்தனை பொலிஸில் பல முறைப்பாடுகளையும் செய்துள்ளனர்.

அதேபோல் கடன் கொடுத்தவர்களில் பலர் உயிரிழந்த மகனைத் தேடி பல முறை அவர் வசித்த வீட்டுக்கு வந்துள்ளனர் எனவும் போகாவத்தை மக்கள் மேலும் தெரிவிக்கின்றனர்.

அத்துடன், நகையொன்றை ஈடுவைத்து அதனை மீட்டுத் தரவில்லை எனும் சம்பவம் தொடர்பில், மரணமடைந்த நபருக்கு எதிரான முறைப்பாட்டை நேற்றுமுன்தினம் பொலிஸார் விசாரணை செய்யவிருந்தனர் எனவும் பொலிஸார் தெரிவித்தனர்.

இந்நிலையில் கடனாளிகளிடமிருந்து தப்பிக்க உயிரிழந்த மகன், தந்தை மற்றும் தாயுடன் ரயிலில் பாய்ந்து தற்கொலை செய்துகொண்டுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகின்றது.

குறித்த நபர்கள் நேற்று முன்தினம் றொசெல்ல ரயில் நிலையத்துக்கு வந்து அங்கிருந்த ஊழியர்களிடம் உடரட்ட மெனிகே ரயில் வரும் நேரத்தை அறிந்து கொண்டு அங்கிருந்து சென்றுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகின்றது.

அதனைத் தொடர்ந்தே, றொசெல்ல மற்றும் வட்டவளை ரயில் நிலையங்களுக்கு இடையில் 103 மைல் கல் பகுதியில் இந்தச் சம்பவம் இடம்பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது.

(இ)

## ஒரே நாடு...

வாக்கும் அதிகாரத்தை வழங்குவோம் என சர்வ தேசத்திற்கு வாக்குறுதி வழங்கிவிட்டு ஒரே நாடு ஒரே சட்டம் என்ற கொள்கையை வகுப்பது நியாயமானதல்ல. இது தற்போதைய அரசமைப்பு உருவாக்கத்திற்கு முரணானது - என்று தமிழ் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் எம். ஏ. சுமந்திரன் தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றத்தில் நேற்று நீதி அமைச்சு மீதான விவாதத்தில் உரையாற்றுகையிலேயே மேற் கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில்,

நீதி அமைச்சர் உறுதியில்லாத நிலையில் இந்த அமைச்சில் உள்ளார். அவர் தனது அமைச்சு பதவியை இராஜிநாமா செய்ய முயற்சிக்கிறார் என்று கடந்த காலங்களில் ஊடகங்கள் மூலம் அறிந்து கொண்டோம். அவர் தனது அமைச்சு பதவியை இராஜிநாமா செய்ய முயற்சித்தும் அதனை செய்ய முடியாத நிலையில் உள்ளார். சட்டம் படித்த அவரால் அதனை செய்ய முடியும். எனினும், அதனை செய்ய முடியாத நிலை அவருக்குள்ளது. இதேபோல, நீதி செயல்பாடுகளில் அரசின் தலையீடுகள் காணப்படுகின்றன.

நீதிமன்றம் குற்றவாளியாக அறிவித்த, இன்னொரு வழக்கில் சந்தேகநபராக உள்ள ஒருவரை செயலணி ஒன்றின் தலைவராக அரசாங்கம் நியமித்துள்ளது. இதற்கு நீதி அமைச்சர் எதிர்ப்பை வெளிப்படுத்தியும் அதில் மாற்றம் ஏற்படவில்லை, அதேபோல் தமிழர்கள் இந்த செயலணியில் நியமிக்கப்படவில்லை. அது நல்ல விடயம் என்றே கருதுகின்றேன். சுய மரியாதையை கொண்டுள்ள எந்த தமிழரும் இந்த செயலணியில் அங்கம் பெற முடியாது. ஒரு சிலர் தமது சுய மரியாதையை இழந்து இந்த செயலணியில் உள்ளனர். ஆனால், ஒரே நாடு ஒரே சட்டம் என்ற கொள்கையில் உள்ள இந்த செயலணி ஒரு அநீதியான செயலணி .

அதிகார பரவலாக்கலை முன்னெடுப்போம் என இந்தியாவிற்கு மூன்று சந்தர்ப்பங்களில் அப்போதைய ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ வாக்குறுதி வழங்கியுள்ளார். அதேபோல் ஐ. நா. செயலாளர் நாயகத்துடன் இணைந்து வெளியிட்ட அறிக்கையிலும், சர்வதேச சமூகத்திற்கும் தொடர்ச்சியாக இந்த வாக்குறுதியை வழங்கியுள்ளார். அதிகார பரவலாக்கலை கண்டிப்பாக முன்னெடுப்போம் எனக் கூறி, 13ஆம் திருத்தத்தின் மூலமாக இதனை கையாள்வோம், மாகாண சபை முறைமையின் ஊடாக அதிகாரங்களை மாகாணங்களுக்கு பகிர்வோம், மாகாணங்களுக்கு ஏற்ற சட்டங்களை அவர்களே உருவாக்கும் அதிகாரத்தை வழங்குவோம் எனக்கூறி உள்ளக அதிகாரங்களை பரவலாக்கி மேம்படுத்த, மாகாணங்களுக்கு சட்டங்களை மேம்படுத்த, அதிகாரம் வழங்குவதாக உலகத்திற்கு வாக்குறுதி வழங்கிவிட்டு ஒரே நாடு ஒரே சட்டம் என்ற கொள்கையை வகுப்பது நியாயமான ஒன்றல்ல. இது தற்போதைய அரசியல் அமைப்பு உருவாக்கத்திற்கு முரணானது மட்டுமல்லாது, சர்வதேசத்திற்கு கொடுத்த வாக்குறுதிகளை மீறும் செயல்பாடுமாகும்.

ஆகவேதான் இந்த செயலணியில் சுய மரியாதையுடன் தமிழர்கள் எவரும் அங்கம் வகிக்க முடியாது. அதுமட்டுமல்ல, இந்த செயலணி உருவாக்கப்பட்ட வேளையில் கூட சுயமாக இதற்கு தமிழர்களை ஜனாதிபதி நியமிக்க வில்லை. அப்படியென்றால் அவர்கள் கூற நினைப்பது என்ன? எம்மை பின் சிந்திக்கும் பட்டியலில் வைத்துள்ளார்கள் என்பதேயாகும். இந்த நாட்டில் எமக்கும் சம உரிமைகள் உள்ளன, இது எமது நாடு, இங்கு நாம் எந்தவோர் இனத்தவருக்கும் அடுத்த படியான மக்கள் அல்ல. எனவேதான் இதனை நாம் கண்டிக்கின்றோம்.

அதேபோல் நீதி அமைச்சரும் எமது சமூகத்தில் இருந்து வந்தவர் என்ற காரணத்தால் நீங்கள் இந்த விடயங்களை சிந்தித்துப் பார்க்க வேண்டும். நீங்கள் இந்த அரசில் இருந்து கொண்டு உங்கள் சமூகத்திற்கு எதிராக செயல்பட முடியாது. எனவே நீங்கள் அமைச்சுப் பதவியை துறந்து வெளியே வர வேண்டும் - என்றார்.

## 2022இல்..

அத்துடன், வாகன இறக்குமதிக்கான தடை தொடரும் என்றும் பால்மா இறக்குமதிக்கு பணம் ஒதுக்க முடியாது எனவும் கூறியுள்ள அவர், இறக்குமதி செய்யப்படும் அத்தியாவசிய பொருட்களும் மட்டுப்படுத்தப்படும் என்றும் அறிவித்துள்ளார்.

நேற்று வியாழக்கிழமை விவசாயத் துறை அமைச்சில் இடம்பெற்ற பால் பண்ணையாளர்கள் சம்மேளனத்தின் கூட்டத்திலேயே இந்தக் கருத்துக்களை அவர் வெளியிட்டார்.

மேலும், சில அரச நிறுவனங்களில் ஆளணிகள் அதிகமாகக் காணப்படுகின்றன. சில பிரதேச செயலகங்களில் உட்காருவதற்கு நாற்காலிகூட இல்லை. எனவே, அடுத்த வருடம் முழுவதும் எந்த ஒரு பொதுத்துறை பணிக்கும் ஆட்சேர்ப்பு இடம்பெறாது.

நாட்டின் பொருளாதாரம் கடுமையான டொலர் பற்றாக்குறையை எதிர் நோக்குகிறது. இதனால், கடந்த 4 மாதங்களாக கடுமையான இறக்குமதி கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டன. எவ்வாறிருப்பினும், இந்த வருடத்தின் ஆரம்பத்தில் நடைமுறைப்படுத்தப்பட்ட வாகன இறக்குமதிக்கான கட்டுப்பாடுகள் மேலும் ஒரு வருடத்துக்கு நீடிக்கும்.

2022 வரவு - செலவு திட்டத்தின் மூலம் நாட்டில் பெரும் மாற்றங்களை ஏற்படுத்த முடியும். தற்போது வெளிநாட்டு கையிருப்பு பிரதான பிரச்னையாகவுள்ளது.

அரசாங்கத்திடமிருந்த கையிருப்பு அத்தியாவசிய உணவுப் பொருட்கள், மருந்து, எரிபொருள் ஆகியவற்றை இறக்குமதி செய்வதற்கும் அரசமுறை கடன்களை மீள செலுத்தவும் செலவழிக்கப்பட்டுள்ளது.

இறக்குமதி செய்யப்படும் அத்தியாவசிய பொருட்களுக்கும் இனி மட்டுப்பாடு விதிக்கப்படும். பால் உற்பத்தியை மேம்படுத்தும் நோக்கில் பால்மா இறக்குமதி மட்டுப்படுத்தப்பட்டுள்ளது. அடுத்த வருடத்துக்கான பால்மா இறக்குமதிக்கு நிதி ஒதுக்க முடியாது. தேசிய உற்பத்திகளை மேம்படுத்த நாட்டு மக்கள் முழுமையான ஒத்துழைப்பு வழங்க வேண்டும் - என்றார். (ஐ)

## கொரோனாவுக்கு..

9 பெண்களும் உயிரிழந்தனர்.

இந்த எண்ணிக்கையுடன் நாட்டில் கொரோனா தொற்றால் இறந்தவர்களின் மொத்த எண்ணிக்கை 14 ஆயிரத்து 555ஆக உயர்ந்துள்ளது. (ஐ)

## கர்ப்பவதி...

மற்றும் மகப்பேறு மருத்துவர்கள் நிறுவகத்தின் தடுப்பூசி வழிகாட்டல் குழு ஒப்புதல் அளித்துள்ளதாக நிறுவனத்தின் தலைவர் மருத்துவர் பிரதீப் டி சில்வா தெரிவித்தார்.

இதன்படி, 6 மாதங்களுக்கு மேல் உள்ள கர்ப்பவதி தாய்மார்களுக்கு பூஸ்டர் தடுப்பூசி போட ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளதாக மருத்துவர் தெரிவித்துள்ளார்.

இதுவரை, 60 கர்ப்பவதித் தாய்மார்கள் கோவிட் நோய்த் தொற்றால் இறந்தனர்.

எவ்வாறாயினும், கர்ப்பவதி தாய்மார்களுக்கு கோவிட் தடுப்பூசி அறிமுகப்படுத்தப்பட்டதில் இருந்து, கோவிட் காரணமாக இறப்பு மற்றும் தாய்வழி நோயுற்றவர்களின் எண்ணிக்கையில் கணிசமான குறைவு ஏற்பட்டுள்ளது என்றும் அவர் கூறினார்.

கோவிட் நோயால் கர்ப்பவதி தாய்மார்கள் மருத்துவமனையில் இன்னமும் சிகிச்சை பெற்று வருகின் றனர். ஆனால், அவர்களில் யாரும் ஆபத்தான நிலையில் இல்லை, இது தடுப்பூசி திட்டத்தின் விளைவாகும். பூஸ்டர் தடுப்பூசி கோவிட் - 19 தொற்று ஏற்படும் அபாயத்தை மேலும் குறைக் கும் - என்றார். (ஐ)

## நீண்டகாலமாக...

மைப்பு பாராளுமன்ற உறுப்பினர் சார்ள்ஸ் நிர்மலநாதன், பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் நீண்ட காலமாக சிறைகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ள கைதிகள் தொடர்பில் முன்வைத்த கருத்துக்களுக்கு பதிலளிக்கையிலேயே அமைச்சர் இதனை தெரிவித்துள்ளார்.

விவாதத்தில் உரையாற்றும்போது சார்ள்ஸ் நிர்மலநாதன் கூறுகையில்,

பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டுள்ள பலர் நீண்ட காலமாக சிறைகளில் இருக்கின்றனர். 94 ஆம் ஆண்டில் கைது செய்யப்பட்டவர் கள்கூட சிறைகளில் இருக்கின்றனர். இவர்களின் வழக்குகளை துரிதப்படுத்துவதாக அமைச்சர் அறிவித்த போதும், சாட்சிகள் இல்லாமையினால் வழக்குகள் தொடர்பான தவணைகள் தொடர்ந்து கொண்டே இருக்கின்றன.

இந்த விடயத்தில் அரசியல் ரீதியாக அவர்களை விடுதலை செய்யவோ, புனர்வாழ்வளிக்கவோ நடவடிக்கை எடுக்க வேண்டும். இந்த விடயம் தொடர்பில் அமைச்சர் நாமல் ராஜபக்ஷவும் வாக்குறுதியளித்திருந்தார் அதனை நிறைவேற்றுமாறு கேட்டுக்கொள்கின்றேன் என்றார்.

இவ்வேளையில் பதிலளித்த அமைச்சர் நாமல் ராஜபக்ஷ கூறுகையில், சிறைக் கைதிகள் விடயத்தில் அவர்களை விடுதலை செய்யவே எதிர்பார்க்கின்றோம். ஆனால் அதற்கென சில சட்டதிட்ட முறைமைகள் உள்ளன. நீதி அமைச்சர் இது தொடர்பான நடவடிக்கைகளை எடுத்து வருகின்றார் என்றார்.

இதேவேளை நீதி அமைச்சர் அலி சப்ரி கூறுகையில், பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் இருந்த 16 பேரை விடுதலை செய்துள்ளோம். அதற்கு மற்றையவர்கள் தொடர்பில் முன்னாள் பிரதம நீதியசர் அசோக டி சில்வா தலைமையில் ஆலோசனை குழுவொன்றை அமைத்துள்ளோம். இதேவேளை, பிரதம நீதியரசரினால் வழக்குகளை தினசரி நடத்துமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது. அதனால் இந்த விடயத்தை நாங்கள் நெருக்கமாக பின்பற்றி வருகின்றோம் இதன்மூலம் பெரிய மாற்றம் ஏற்படும் - என்றார்.

## வழக்கு...

ஜாங்க அமைச்சர் விதுர விக்ரமநாயக தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று வியாழக்கிழமை இடம்பெற வாய் மூல விடைக்கான வினாவின்போது தமிழ் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் சார்ள்ஸ் நிர்மலநாதன் எழுப்பிய நெடுங்கேணி பிரதேசத்தின் வெடுக்கு நாறிமலையில் அமைந்துள்ள ஆதிலிங் கேஸ்வரர் ஆலய வருடாந்த திருவிழாவை கடந்த 2 ஆண்டுகளாக தொல்பொருள் திணைக்களம் நடத்த விடாமல் தடைசெய்துள்ளமை தொடர்பான கேள்விக்கு பதிலளிக்கையிலேயே இராஜாங்க அமைச்சர் விதுர விக்ரமநாயக்க மேற்கண்டவாறு பதிலளித்தார்.

(தொடர்புடைய மற்றொரு செய்தி பக்கம் 7இல்)

## விபத்தில்...

உயிரிழந்த நபர், கடந்த 6ஆம் திகதி 4ஆம் குறுக் குத்தெரு வீதியில் மோட்டார் சைக்கிளில் மீன்வியா பாரத்துக்காக சென்று கொண்டிருந்தபோது லேணர்ஸ் வாகனம் மோதியத்தில் படுகாயமடைந்தார்.

படுகாயமடைந்த அவர் உடனடியாக யாழ். போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டபோதிலும் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார் என்று தெரிவிக்கப்பட்டது.

உயிரிழந்த சி. இலட்சுமணன் பாரம்பரிய கூத்துக் கலைஞர் என்பதுடன் பாடல்களை பாடுவதிலும் வல்லவர். அத்துடன், கிராமத்தில் பல்வேறு சமூகப் பணிகளிலும் ஈடுபட்டவர் என்பதும் குறிப்பிடத்தக்கது. (ஐ)

## இரண்டு...

என்று அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தலைவரும் வன்னி மாவட்ட எம். பியுமான ரிஷாத் பதியுதீன் வேண்டுகோள் விடுத்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று வியாழக்கிழமை உரையாற்றிய போதே இந்த வேண்டுகோளை விடுத்தார்.

மேலும், 2009 ஆம் ஆண்டு 12000 வரையிலான போராளிகள் சரணடைந்தார்கள் அவர்கள் புனர்வாழ்வளிக்கப்பட்டு மீண்டும் சமூகத்துடன் இணைக்கப்பட்டார்கள். ஆனால், அதனைவிட சிறுசிறு காரணங்களினால் கைது செய்யப்பட்டு குற்றப்பத்திரிக்கை முன்வைக்கப்படாது பல தமிழ் இளைஞர்கள் சிறைகளில் பல வருடங்கள் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். அவர்களின் விடுதலையில் கவனம் செலுத்துமாறு நீதி அமைச்சரிடம் வேண்டுகோள் விடுக்கின்றேன்.

அமைச்சர் நாமல் ராஜபக்ஷ கூட அண்மையில் இந்த விடயம் தொடர்பில் பேசியிருந்தபோது இந்த விடயத்தை நாம் கட்டம் கட்டமாக முன்னெடுப்போம் என்று கூறினார். நான் சிறையில் இருக்கும்போது அவர்கள் தமது வேதனைகளை என்னிடம் கூறினார்கள். எனவே அவர்களின் விடுதலை சம்பந்தமாக சட்டமாஅதிபர் திணைக்களத்திலே இன்னும் பல வழக்குகள் குற்றப்பத்திரம் தாக்கல் செய்யப்படாமல் உள்ளன. பல இளைஞர்களின் எதிர்காலம் கேள்விக்குறியாகவுள்ளது. எனவே, இது சம்பந்தமாக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

இதனைவிட கடந்த 2 மாதங்களுக்குள்ளே 40 - 45 தமிழ் இளைஞர்கள் புலிகளின் மீள் எழுச்சி என்ற பெயரில் கைது செய்யப்பட்டு பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழே தடுத்து வைக்கப்பட்டுள்ளார்கள். இவர்கள் 20 வயது 22 வயது இளைஞர்களாகவுள்ளனர். 2009 ஆம் ஆண்டில் இவர்கள் 10 வயதைக் கொண்டவர்களாகவே இருந்திருப்பார்கள். இன்று இவர்கள் வட்ஸ் அப்பில் முகப்புத்தகத்தில் சில செய்திகளை பகிர்ந்ததற்காக அவர்கள் பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் தடுத்தது வைக்கப்பட்டுள்ளார்கள். இவர்களுக்கு வழக்கு பேச பணம் இல்லை. பெற்றோர்கள் கிளிநொச்சியில் முல்லைத்தீவில் மட்டக்களப்பில் என்று இருக்கின்றார்கள். எனவே இவர்கள் விடயத்தில் சட்டமாஅதிபர் திணைக்களம் கவனம் செலுத்தி அவர்களின் விடுதலைக்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் - என்றார். (ஐ)

## தமிழர்...

கிரமித்த நிலங்களை விடுவிக்கவில்லை. இது ஒரு படைத் தரப்பினரின் செயல்பாடு என்பதைத் தாண்டி அரச நிர்வாகங்கள் அனைத்துமே இதற்கு துணைபோகின்றன என்றே தெரிகிறது.

அரசாங்க அதிபர் மற்றும் ஆளுநரும் இந்த காணி சுவீகரிப்புக்கு துணைபோகின்றனர். இதற்கு பொது அமைப்புக்கள் என்ற வகையில் நாங்கள் எதிர்ப்பையும் கண்டனங்களையும் தொடர்ச்சியாக தெரிவித்து வரும் நிலையில், போராட்டங்களை முன்னெடுத்து வரும் சூழ்நிலையில் எங்களின் அரசியல் தலைமைகளோ தடுத்து நிறுத்தக்கூடிய விடயங்களையும் சவால் கொடுக்கக்கூடிய விடயங்களையும் செய்யவில்லை என்பதே உண்மை. இது எமக்கு பலத்த சந்தேகத்தை ஏற்படுத்துகின்றது.

படையினர் அச்சுறுத்தி உறுதிப்பத்திரங்கள் இருக்கின்ற மக்களின் காணிகளையும் சுவீகரிக்கின்ற நடவடிக்கைகளையே மேற்கொண்டு வருகின்றனர். இப்படியான ஒரு சூழ்நிலையில் தமிழ் தலைமைகள் அசமந்தப் போக்கில் இருப்பதென்பது தமிழ் மக்களுக்கு பெரும் அச்சுறுத்தலாக மாறியுள்ளது.

இந்த விடயங்களை பாராளுமன்றத்திலும் சர்வதேசம் சார்ந்த மனித உரிமைகள் தளங்களிலும் பேசுபொருள் ஆக்கப்படவில்லை. இவை படையினருக்கு வாய்ப்பாகவே அமைகின்றது -என்றனர். (ஐ)

ஈழநாடு
Eelanadu

# பீல்ட்மார்ஷல் பதவிநிலை மைத்திரி வீட்டு சொத்தா?

## சபையில் கேட்டார் பொன்சேகா



கொழும்பு, டிசெ. 10

**“எனக்கு திறமை, தகைமை இருப்பதால்தான் பீல்ட் மார்ஷல் பதவி வழங்கப்பட்டது. பீல்ட்மார்ஷல் பதவி என்பது மைத்திரிபால சிறிசேனவின் சொத்து அல்ல” - என்று முன்னாள் இராணுவத் தளபதி பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேனா தெரிவித்தார்.**

பாராளுமன்றத்தில் நேற்று உரையாற்றிய சரத் பொன்சேனா எம்.பி., பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் சரத் வெளிசேகர வெளியிட்டிருந்த கருத்துகளுக்கு பதிலடி கொடுத்தார்.

“எனது குணம் பற்றி தெரிந்ததால்தான் நல்லாட்சியின்போது சட்டம், ஒழுங்கு அமைச்சுப் பதவி எனக்கு வழங்கப்படவில்லை என சரத் வீரசேகர கூறினார். அது உண்மை தான். ஏனெனில் எனக்கு அந்த பதவி வழங்கப்பட்டிருந்தால் தவறிழைத்தவர்களை தப்பிக்க விட்டிருக்கமாட்டேன்.

சட்டம், ஒழுங்கு அமைச்சுப் பதவியை வழங்கினால், பொன் சேகா தன்னைத்தான் முதலில் கைது செய்வார் என மைத்திரிபால சிறிசேன ஆளுங்கட்சி உறுப்பினர்களிடம் அன்று அச்சம் வெளியிட்டிருந்தார். எனவே, பதவி தொடர்பில் நான் அலட் டிக்கொள்ளவில்லை.” -என்றார்.

இதன்போது குறுக்கீடு செய்த சாந்த பண்டார எம்.பி., “மைத்திரிபால சிறிசேனதான் உங்களுக்கு பீல்ட்மார்ஷல் பட்டத்தை வழங்கினார். அந்த நன்றிகூட உங்களுக்கு இல்லையா” என கேட்டார்.

இதற்கு பதிலளித்த அவர், ஜனாதிபதி பதவியை வகித்த நபர், எனக்கு தகைமை இருந்ததால் அதனை வழங்கினார். பீல்ட்மார்ஷல் பட்டம் என்பது மைத்திரியின் பொலநறுவையில் உள்ள சொத்து அல்ல.”- என்றார். (அ)

# கரைதுறைப்பற்று பட்ஜெட் வெற்றி

முல்லைத்தீவு, டிசெ. 10

முல்லைத்தீவு மாவட்டம் கரைதுறைபற்று பிரதேச சபையின் 2022 ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்டம் ஏகமனதாக நிறைவேறியது.

கரைதுறைபற்று பிரதேச சபை மண்டபத்தில் தவிசாளர் தலைமையில் கூட்டம் நேற்று நடைபெற்றது.

தவிசாளர் கமலநாதன் விஜிந்தன் வரவு-செலவுத் திட்டத்தை சமர்ப்பித்து உரையாற்றினார். அதன் பின்னர் வாக்கெடுப்பு நடைபெற்றது.

உறுப்பினர்கள் 24 பேர் அங்கம் பெறும் குறித்த சபையின் நேற்றைய அமர்வில் உறுப்பினர்கள் 04 பேர் சமூகமளிக்கவில்லை. நடைபெற்ற வாக்கெடுப்பின் போது உறுப்பினர்கள் 29 பேர் சமூகமளித்திருந்த நிலையில் அனைவரும் ஆதரவாக வாக்களித்தனர்.

இதனால் 2022 ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்டம் ஏகமனதாக நிறைவேறியது. (அ)

# தற்போதைய பிரச்னைக்கு தீர்வு வழங்கவேண்டும் அரசு

## மைத்திரி வலியுறுத்து

கொழும்பு, டிசெ. 10



நாட்டில் தற்போது நிலவி வரும் பிரச்னைகளுக்கு அரசு உடனடியாகத் தீர்வு வழங்க வேண்டும் என்று முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன கோரிக்கை விடுத்தார்.

நாட்டின் தற்போதைய நிலைமை தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் தெரிவிக்கையில்,

“நாட்டில் அரசியலில் ஈடுபட்டுள்ள நேர்மையான, ஊழல் மோசடிகளற்ற, நாட்டை நேசிக்கும் நபர்களை ஒன்றிணைத்து விரிவான அரசியல் சக்தியொன்றை உருவாக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

இவ்வாறான ஓர் சக்தியை உருவாக்கி அதன் மூலம் நாட்டின் அபிவிருத்தியை ஏற்படுத்த முடியும்.

நாட்டில் தற்போது நிலவும் உரப்பிரச்னை, பொருளாதாரப் பிரச்சினை, எரிவாயு மற்றும் பொருட்களின் விலை உயர்வு போன்ற விடயங்கள் குறித்து ஒருவரை ஒருவர் குற்றம் சுமத்தாது அரசு தனது கடமைகளைச் செய்ய வேண்டும்.

நாட்டு மக்கள் இன்னமும் உரம் கிடைக்காது அவதியுறுகின்றனர். நாட்டின் பல பகுதிகளிலும் எரிவாயு சிலிண்டர்கள் வெடிப்புச் சம்பவங்கள் பதிவாகி வருகின்றன.

நாட்டில் தற்போது நிலவி வரும் பிரச்சினைகளுக்கு அரசு தீர்வு வழங்க வேண்டும். மக்களுக்காக அரசு தனது கடமைகளைச் செய்ய வேண்டும். இதற்கான பூரண ஒத்துழைப்பை வழங்கத் தயார்” - என்றார். (இ)

# மசகு எண்ணெய் இறக்குமதிக்கு டொலர்கள் கையிருப்பு இல்லை

## கைவிரிக்கிறார் அமைச்சர் கம்மன்பில

கொழும்பு, டிசெ. 10

மசகு எண்ணெயை இறக்குமதி செய்வதற்கு அரசாங்கத்துக்கு தேவையான டொலர் கையிருப்பு இல்லாதமை பாரிய பிரச்னையாக இருப்பதாக எரிசக்தி அமைச்சர் உதய கம்மன்பில தெரிவித்துள்ளார்.

இதற்கான தீர்வாக ரூபாயில் பணம் செலுத்தி மசகு எண்ணெய் இறக்குமதிசெய்யும் முறையை நோக்கிச் செல்வதற்கான சாத்தியக்கூறுகள் ஆராயப்பட்டு வருவதாக அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

26 நாட்களாக மூடப்பட்டிருந்த சப்புகஸ்கந்தை எண்ணெய் சுத்திகரிப்பு நிலையத்தின் செயற்பாடுகளை மீண்டும் ஆரம்பிக்கும் போது ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கும் போதே எரிசக்தி அமைச்சர் உதய கம்மன்பில மேற்கண்டவாறு கூறினார்.

மேலும் கருத்து தெரிவித்த அமைச்சர், தற்போது இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தில் மேலும் 25 நாட்களுக்கு தேவையான எண்ணெய் கையிருப்பு உள்ளதாக தெரிவித்தார்.

முன்னதாக, இலங்கைக்கு மசகு எண்ணெய் இறக்குமதி செய்வதற்காக கட்டாரிடம் இருந்து 500 மில்லியன் அமெரிக்க டொலர் கடனுதவியை பெற்றுக்கொள்ளும் எதிர்பார்ப்பில் அமைச்சர் கம்மன்பில அந் நாட்டுக்கு உத்தியோகபூர்வ விஜயமொன்றையும் மேற்கொண்டிருந்தார்.

ஆனால், இதுவரை அந்த கடனையோ, நீண்ட கால கடன் ஒப்பந்தத்தையோ பெற்று மசகு எண்ணெய்யை இறக்குமதி செய்ய முடியவில்லை.

எவ்வாறாயினும், இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் தமது வரலாற்றில் ஒருபோதும் பெற்றோலியம் தொடர்பான கொள்வனவுகளுக்காக இலங்கை ரூபாவில் பணம் செலுத்தியதில்லை எனவும், முதல் தடவையாக இவ்வாறானதொரு நடவடிக்கையை மேற்கொள்ளத் திட்டமிடப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, நாணய ஒதுக்கம் தொடர்பில் மத்திய வங்கி வெளியிட்ட உத்தியோகபூர்வ அறிக்கையில், ஜனவரி மாதத்துக்குள் நாட்டின் உத்தியோகபூர்வ அமெரிக்க டொலர் ஒதுக்கம் 100 கோடி வீழ்ச்சியடையும் என தெரிவித்துள்ளது.

அதன்படி, ஜனவரி மாதத்திற்குப் பிறகு அத்தியாவசிய உணவுப் பொருட்களை இறக்குமதி செய்வதில் நாடு பாரிய சிக்கலை எதிர்கொள்ள நேரிடும் என பொருளியல் நிபுணர்கள் எச்சரிக்கின்றனர். (அ)












இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 10.12.2021 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

# இன்றைய தொலைக்காட்சி நிகழ்ச்சி நிரல்

## DAN தமிழ் ஒளி

**காலை**
6.00 மணி : பக்திபாடல்
6.30 மணி : வணக்கம் டான்
6.35 மணி : சமயம் சார்பான நற்சிந்தனைகள்
6.55 மணி : இன்றைய ராசி பலன்கள்
07.05 மணி : உளவியல் கருத்து-உளவள துனையாளர் திரு.நா.நவராஜ்
7.20 மணி : சித்த மருத்துவம் வழங்குபவர் டாக்டர் விவியன் சத்தியசீலன்
7.30 மணி : இன்றைய பத்திரிகைகள்
8.30 மணி : காலை செய்திகள்
9.00 மணி : கலாட்டா காலை- நேரலை
10.30 மணி : தொடர் நாடகம்
11.00 மணி : கச்சேரி ஆரம்பம்-மறுஒளிபரப்பு

**பகல்**
12:00 மணி : சிரிக்கலாம் வாங்க-நேரலை




01.00மணி : துறைக்கு அப்பால் (மறுஒளிபரப்பு)
1.30 மணி : சுப்பர் சீன்ஸ்- நேர்கொண்டபார்வை,மாறா திரைப்படங்களிலிருந்து காட்சிகள்
4.30 மணி : குட்டீஸ் தர்பார்-சிறுவர்களுக்கான நேரலை நிகழ்ச்சி
5.30 மணி : ஞாழசவ குடைஅ
6.00 மணி : ஹோலிவூட் சுப்பர்-10




**இரவு**
7.00 மணி : ரசிகன் என்கின்ற தலைவன்- நகைச்சுவை நிகழ்ச்சி



08.00 மணி : இரவுச் செய்திகள்
9.00 மணி : அந்தக்காலம் இந்தக்காலம் -விலைவாசி



10.00 மணி : நேருக்கு நேர்

## DAN COMEDY HD

**காலை**
6.00 மணி : சிரி சிரி சிரி
8.00 மணி : சிரிப்பு சரடிவெடி
10.00 மணி : திரைப்படம்

**பகல்**
1.00 மணி : நகைச்சுவை மன்னன் வடிவேல் நடிப்பில் கலக்கல் காட்சிகள்
3.00 மணி : திரைப்படம்
6.00 மணி : கொமடி கலாட்டா

**இரவு**
8.00 மணி : திரைப்படம்
10.00 மணி : விடிய விடிய சிரிப்பு தான்

## DAN MUSIC HD

**காலை**
6.00 மணி : பனிப்பூக்கள்
7.00 மணி : திசை எட்டும் இசை எட்டும்
8.00 மணி : வணக்கம் டான் மியூசிக்
9.00 மணி : மெல்லிசை
10.00 மணி : கேட்டாலே பரவசம் (நேரலை)

**பகல்**
12.00 மணி : ராஜா ராணி
1.00 மணி : விசை இசை
3.00 மணி : வட்ஸ் அப் (நேரலை)
4.00 மணி : டீ டைம் ராகங்கள் (நேரலை)
5.00 மணி : இனிது இனிது
6.00 மணி : என்றென்றும் இசை
7.00 மணி : ஓய்வெடு நிலவே

**இரவு**
8.00 மணி : காற்றில் வரும் கீதம்
9.00 மணி : நிலவு தூங்கும் நேரம்

## கல்வி tv CHANNEL-1

**காலை**
5.15 மணி : க.பொ.த உயர்தரம் - விவசாயம்
6.00 மணி : க.பொ.த உயர்தரம் - வணிகம்
6.45 மணி : க.பொ.த உயர்தரம் - உயிரியல்
7.30 மணி : க.பொ.த உயர்தரம் - பொருளியல்
8.15 மணி : க.பொ.த உயர்தரம் - கணக்கீடு
9.00 மணி : க.பொ.த உயர்தரம் (கணிதம், விஞ்ஞானப் பிரிவு) விஞ்ஞானம்
10.00 மணி : க.பொ.த உயர்தரம் (வணிகப்பிரிவு) பொருளியல்
11.00 மணி : க.பொ.த உயர்தரம் (கணிதம்,விஞ்ஞானப்பிரிவு) இரசாயனவியல்

**பகல்**
12.00 மணி : க.பொ.த உயர்தரம் (வணிகப்பிரிவு) மறு ஒளிபரப்பு
1.00 மணி : தரம் 5 மாதிரி வினாத்தாள்
2.00 மணி : தரம் 5 சுற்றாடல்
3.00 மணி : தரம் 5 கணிதம்
4.00 மணி : தரம் 6 - 9 ஆங்கிலம்
5.00 மணி : பொது சிங்களம்
6.00 மணி : க.பொ.த சாதாரண தரம் மாதிரி வினாத்தாள்

**இரவு**
7.00 மணி : க.பொ.த. சாதாரண தர மாதிரி வினாத்தாள்

## ஓம் டிவி

**காலை**
5.00 மணி : சிவாய மந்திரம்
6.00 மணி : சுப்ரபாதம்
6.30 மணி : சுப்ரபாதம்
07.00 மணி : இன்றைய சிந்தனை
07.05 மணி : இன்றைய நாள்
07.30 மணி : மங்கள இசை
08.00 மணி : அருளுரை
08.30 மணி : திருவாசகம்
09.00 மணி : திருவிழா-01
10.00 மணி : பாடல்கள்
10.30 மணி : பஜனை
11.00 மணி : பக்திமலர்

**பகல்**
12.00 மணி : திரையில் பக்தி
12.30 மணி : திருவிழா-02
6.00 மணி : கந்தசஷ்டி கவசம்

**இரவு**
7.00 மணி :செய்திகள்
7.30 மணி : அருளுரை

## CHANNEL HOLY MARY

**காலை**
7.00 மணி : நாளொரு நற்சிந்தனை
7.30 மணி : இயேசுவின் போதனைகள் (மறுஒளிபரப்பு)
8.00 மணி : ஜெபமாலை
09.30 மணி : மன்றாடு
10.00 மணி: ஜெபங்கேளும் திருகோணமலை நிகழ்ச்சி
10.30மணி : திருப்பலி (யாழ்ப்பாணம்)
11.30 மணி : அன்பியம் சனி மறுஒளிபரப்பு

**பகல்**
12.00 மணி : திருப்பலி (திருகோணமலை)
01.00 மணி : திருப்பலி (மட்டக்களப்பு)
02.00 மணி : நற்கருணை ஆராதனை (யாழ்ப்பாணம்)
03.00 மணி : திருப்பலி (யாழ்ப்பாணம்)
04.00 மணி: திருப்பலி (மட்டக்களப்பு)
05.00 மணி : திருப்பலி (திருகோணமலை)
06.00 மணி : நாளொரு நற்சிந்தனை (மறு ஒளிபரப்பு)
07.00 மணி : இறைமகன் யேசுவின் அற்புதங்கள் (யாழ்ப்பாணம்)

## Pirai Television

**காலை**
6.00 மணி : கிராத்
7.00 மணி : இறை சிந்தனை
7.30 மணி : இஸ்லாமிய சிறுவர் பாடல்
8.00 மணி : சற் வித் குட்டீஸ்
9.00 மணி : இஸ்லாமிய சீரிஸ்
10.00 மணி : வேர் கொள்
11.00 மணி : மனிதம்
11.30 மணி : சுக வாழ்வு

**பகல்**
12.00 மணி : லுகர் அதான்
12.30 மணி : அன்னிஸா
1.00 மணி : இஸ்லாமிய திரைப்படம்
2.00 மணி : கஸீதா
2.30 மணி : இறை சிந்தனை
3.00 மணி : பாடல்கள்
4..00 மணி : சிறுவர் இஸ்லமிய கார்டூன்
5.00 மணி : சற் வித் குட்டீஸ்
6.00 மணி : தாஜீமதுல் குர்ஆன்

**இரவு**
7.00 மணி : பிறை பிரசங்கம்
8.00 மணி : பாடல்
8.30 மணி : மனிதம் வித் றிஸ்வான்
9.00 மணி : Bayan
10.00 மணி : சீரிஸ்
10.30 மணி : கலந்துரையாடல்